

உள்ளே:
ஹர்ஷத் மேத்தா
- ஒரு சந்திப்பு

கல்கி

KALKI 17.10.93 ரூ. 3.00



‘திருடா திருடா’ அனுபமா: தமிழா? டமிலா?




வண்ணத்தின் கனவுகள்

பூகம்பம்



= ஒரு ஹைட்ரஜன் குண்டு!

பத்து நாட்கள் தொடர்ந்து நடந்த கணபதி பூஜை, ஊர்வலத்துக்குப் பிறகு மக்கள் களைத்துப் போய் அன்று இரவு அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த நேரத்தில் - அதி காலை நாலு மணிக்கு - பூகம்பம் வெடித்ததானது, பலத்த சேதத்துக்குக் காரண மாயிற்று. தூக்கத்திலேயே - என்ன நடக்கிறது என்று தெரியாமலேயே - இடிபாட் டில் சிக்கிச் செத்து மடிந்தவர்கள் ஏராளம். கூரை மேலே விழ, சிக்குண்டு குற்றுயிரும்



* உடைந்து போன ஓவர்-ஹெட் டாங்க்



* சோக விளிம்பில்...

கொலையுயிருமாகத் தவித்தவர்கள் பல்லாயிரம். அலறி அடித்துக் கொண்டு தப்பி ஓடியவர்கள் ஒப்புநோக்க, அற்ப சொற்பம்.

மகாராஷ்டிரத்தின் லாதூர் மாவட்டத்தை மையமாகக் கொண்டு, சென்னை வரை கிளை பரப்பி கிடுகிடுக்கச் செய்த பூகம்பம், வரலாறு காணாத அளவில் பெரும் சேதம் விளைவித்துள்ளது. 40,000 பேர் மடிந்தார்கள் என்பது மிகைப்படுத்தப்பட்ட செய்தி என்றாலும் அதில் பாதி அளவாவது உயிர் பலி கண்டிருக்கும். இன்றும் பல்லாயிரக்கணக்கானோர் பலத்த காயங்களுடன் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இவர்களில் கணிசமான பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மூன்று லட்சம் மக்கள் வீடிழந்து தவிக்கிறார்கள்.

ஆஸ்மனாபாத், லாதூர் மாவட்டங்களில் முப்பது கிராமங்கள் அழிந்து விட்டன. பம்பாய் நகரம் மட்டுமின்றி கர்நாடகாவின் சில பகுதிகளும் - சென்னையும் கூட அனுபவித்த இந்தப் பூகம்பத்தை, பிரிட்டிஷ் ஆய்வாளர்கள் ஒரு ஹைட்ரஜன் குண்டு விளைவிக்கக் கூடிய சேதத்துடன் ஒப்பிடுகிறார்கள். இதிலிருந்து சேதத்தின் அளவை மட்டுமின்றி, ஹைட்ரஜன் குண்டு என்பது எவ்வளவு கொடுமையான ஆயுதம் என்பதையும் உணரலாம்.

செப்டம்பர் 30-ம் தேதி அதிகாலையில் கில்லாரி சுற்று வட்டாரத்தில் 20 கி.மீ. தூரத்துக்கு யுத்தத்தால் அழிவுற்ற பிரதேசமாகவே தோன்றியது. சில மணி நேரத்துக்குள் ஷரத் பவார், இன்னும் சில அமைச்சர்களுடன் சேதப் பகுதியைப் பார்வையிட வந்து சேர்ந்து விட்டார். இதற்கு முன்னதாகவே பூனாவிலிருந்து ''பம்பாய் இன்ஜினிரிங் குரூப்'' என்ற ராணுவப் பிரிவிலிருந்து பல பட்டாளங்கள் நிவாரணப் பணியாற்ற வந்து விட்டன. அன்று மாலைக்குள் செகந்திராபாத்திலிருந்து 54 பட்டாளங்கள் வந்தன. ஔரங்காபாத்திலிருந்து ஒரு என்.ஸி.ஸி. சேனையும் வந்தது. இடிபாடுகளிடையே செய்வதறியாது அழுது புலம்பிக் கொண்டிருந்த மக்கள், வேற்றூர்களில் தாற்காலிக முகாம்களில் குடியேற்றப்பட்டார்கள். காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டனர்.

இடிபாடுகளிலிருந்து ஏராளமான பிணங்கள் மீட்கப்பட்டதால் அவற்றை ஒட்டுமொத்தமாகத் திறந்தவெளியில் எரியூட்டி விடுவது என்று தீர்மானமாயிற்று. அறுவடை முடிந்திருந்த வயல்கள் இடுகாடுகளாக உருமாறின. சிதைந்த வீடுகளிலிருந்து உருவப்பட்ட மரக்கட்டைகளே சிதைகள் அமைக்க உதவின. •

செப்டம்பர் 30-ம் தேதி காலை பத்து மணிக்கு பம்பாயில் மட்டுமின்றி மகாராஷ்டிராவின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் விபரீதச் செய்தி பரவி விட்டது. ஆயினும் தூர்தர்ஷன் அன்று இரவு பத்து மணிக்குத்தான் பூகம்பத்தால் ஏற்பட்ட

சேதத்தை ஒளிபரப்பியது. இதற்குப் பல மணி நேரம் முன்னதாகவே வி.என்.என்., இந்த பூகம்பம் பற்றி ஒளிபரப்பியதுடன், விஞ்ஞானிகளின் பேட்டிகளுடன் இதர பல பூகம்பங்களை ஒப்புநோக்கியும் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது. தேசியப் பத்திரிகைகள் என்று தங்களை வர்ணித்துக் கொள்ளும் சில பம்பாய்ப் பத்திரிகைகள் கூட, தூர்தர்ஷன் ஒளிபரப்பிய பூகம்பக் காட்சியை ஒளிப்படமெடுத்துப் பிரசுரித்ததுடன் திருப்தி அடைந்தன!

வெள்ளிக் கிழமையன்று லாதூர், கில்லாரி, உமெர்கா பகுதிகள், ''வேடிக்கை பார்க்க'' வருவோரின் ''சொர்க்க பூமி'' ஆயின! பல்லாயிரக்கணக்கான மக்கள் சாரிசாரியாக ''பூகம்பம் பார்க்க'' நேரில் வந்தனர்! ஷரத் பவார் டீ.வி, வானொலி மூலமாக இப்படிப் படையெடுக்க வேண்டாம் என்றும் இதனால் நிவாரணப் பணிகளுக்கு இடையூறு ஏற்படும் என்றும் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இந்தச் செய்தியைத் தங்களுக்கும் கூறப்பட்ட அறிவுரையாக மத்திய மந்திரிகள் எடுத்துக் கொண்டார்களோ என்னமோ,



✱ கலை வேலைப்பாடுகளுடன் கருங்கல் வீடு - சிதைந்த நிலையில்...

இந்தப் பகுதியைப் பூர்வீகமாகக் கொண்ட உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் கூட, தில்லி திரும்பி விட்டார். போகிற போக்கில், சடலங்களைத் துரிதமாக எரியூட்டா விட்டால் நோய் பரவும் என்று அறிவுரை வழங்கியதுடன் சரி!

பிற்பட்ட பகுதி என்று இந்த வட்டாரம் அறிவிக்கப்பட்டுள்ளதால் ஏகப்பட்ட அரசு மானியத்துடன் லாதூரில் ஒரு தொழில் கேந்திரம் நிறுவப்பட்டு வந்தது. அது இன்று உருத்தெரியாமல் அழிந்து போயிருக்கிறது.

கடந்த பத்து ஆண்டுகளாகவே லாதூர் பகுதி இலேசான நிலநடுக்கங்களை அவ்வப்போது கண்டு வந்திருக்கிறது. ஆனால் யாருமே கண்டுகொள்ளவில்லை. அரசின் விஞ்ஞான நிறுவனங்கள் தீவிர ஆய்வு ஏதும் நடத்தியதாகத் தெரியவில்லை. செப்டம்பர் 30-ம் தேதி அதிகாலை பூகம்பம், நமது விஞ்ஞானிகளின் ஞானமின்மையையும் செயல்பாடின்மையையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. நிலநடுக்கங்களை அவ்வப்போது பதிவு செய்து, ஏன் ஏற்படுகிறது, இதன் பின்விளைவுகள் என்னவாயிருக்கும் என்று யாரும் கணித்ததாகத் தெரியவில்லை. இதைவிடக் கேவலம் - இப்படிக் கணிப்பதற்குரிய விஞ்ஞானக் கருவிகள் ஏதும் நமது விஞ்ஞானக் கூடங்களில் இருப்பதாகவே தெரியவில்லை!

பூகம்பம் ஏற்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர் பலி வாங்கிய பிறகுதான் அரசு அதிகாரிகள் விஞ்ஞானிகளையும் விஞ்ஞானிகள் அரசு அதிகாரிகளையும் மாறி மாறி குற்றம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்!

இத்தனை சோகத்தினிடையிலும் ஒரே ஒரு மனநிறைவு, உலக முழுமையுமே இந்த பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்குத் தெரிவித்துள்ள அனுதாபம். வாய்ச் சொல்லுடன் நில்லாது, பணமும் பொருளுமாகக் கொண்டு வந்து குவித்திருக்கிறார்கள். ஆரம்பக் கட்டத்தில் சில அண்டை மாவட்டங்களில்தான் மனிதாபிமானம் செயல்பட்டது. ரத்த பாட்டில்கள், மருந்துகள், துணிமணிகள், தானிய மூட்டைகள் என்று குவிந்தன. கிராமப் பகுதிகளில் இவற்றையெல்லாம் சேமித்துப் பாதுகாக்க வசதியில்லை. எனவே அதிகாரிகள், ''பணமாக அனுப்பி விடுங்கள்; தேவையான போது தேவையானவற்றை வாங்கி உபயோகித்துக் கொள்கிறோம்'' என்று அறிக்கை விட வேண்டியதாயிற்று!

இதற்கேற்ப, தமிழக ஆளுநரும் அவரைத் தொடர்ந்து முதல்வரும் போட்டி போட்டுக் கொண்டு நிதி திரட்டுகிறார்கள். எக்ஸ்பிரஸ், தினமலர் போன்ற பத்திரிகைகளும் நிதி திரட்டுகின்றன. பொது மக்கள், பல்வேறு கட்சிகள், அரசு இலாகாக்கள், சினிமா நட்சத்திரங்கள் என்று எல்லோரும் அள்ளித் தருகிறார்கள். பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா ரூ. பத்து லட்சம் நன்கொடை அனுப்பியதுடன் சாயி பக்தர்களை, நேரில் சென்று சேவை புரியவும் பணித்துள்ளார். இத்தகைய துயர் துடைப்புப் பணிகள், பூகம்பத்தின் சீற்றத்தை நன்குணர்ந்த மகாராஷ்டிர மக்களின் வாழ்க்கை மீண்டும் சீரடையப் பெரிதும் உதவும்.

- பி. கே. ரவீந்திரநாத்

புகைப்படங்கள் :

நன்றி : டைம்ஸ் ஆஃப் இந்தியா


“இனிமயமாண

எதிர்காலம் எனக்குக் காத்திருக்கிறது!”

ட்டின் பிரதமரைத் தெரிந்திருக்கும் அளவுக்கு எல்லோருக்கும் தெரிந்திருக்கும் மற்றொரு பெயர் ஹர்ஷத் மேத்தா - பங்கு மார்க்கெட்டின் மிகப் பெரிய ஊழலின் கதாநாயகன். இப்போதெல்லாம் சினிமாவிலும் சரி, நிஜவாழ்விலும் சரி; இவர் வில்லன், இவர் கதாநாயகன் என்று இனம் பிரிக்க முடிவதில்லை! ஹர்ஷத் மேத்தாவும் 'ஸ்கேம் ஸ்டர்' ('Scamster) என்ற நிலையி லிருந்து 'ஸ்கேம் ஸ்டார்' (Scamstar) ஆக மாறி வருபவர். 'கல்கி'க்கு பேட்டி அளிக் கையில் வெளியே அமைதி காத்தாலும், உள்ளே புயல் வீசுவது அவ்வப்போது தெரிந்தது.

கேள்வி : மகிழ்ச்சியற்ற குழந்தைப் பருவம்தான் வாழ்க்கையின் பல அவலங்களுக்கும் வித்து என்று சொல்லப்படுகிறதே! பூலான் தேவி, சதாம் ஹுசைன் போன்றவர்களின் இன்றைய செயல்களுக்கு அன்றைய துன்பங்கள் காரணமாகக் காட்டப்படுகிறதே! உங்களுக்கும் இந்த கருத்து பொருந்துமா?

பதில் : என் குழந்தைப் பருவத்தில், ''இல்லாமையை'' நான் நிறைய அனுபவித்திருக்கிறேன். ஆனால் அதை ஒரு குறையாக என்றும் நினைத்ததில்லை. வளரும் பருவத்தின் வேதனைகள் வளர்ந்த நிலையில் சோதனைகளாய் முடியும் என்ற கருத்தில் எனக்கு இசைவில்லை. பண விஷயத்தில், என் தந்தை பலரை நம்பி மோசம் போனதை நான் கண்ணாரக் கண்டிருக்கிறேன் என்பது உண்மைதான். அதன் பயனாய், என் குடும்பத்தை மீண்டும் நிலை நிறுத்தவேண்டும், சரிவிலிருந்து உயர்வுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம்தான் என்னை ஆக்ரமித்தது. தொழிலில் தொய்வு ஏற்பட்ட போதிலும் என் தந்தை, தான் பட்ட கடனை அடைக்கப் • படாதபாடுபட்டு குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றியதைச் சிறு வயதி லேயே பார்த்திருக்கிறேன். வெளிப்படையாகவும், தைரியத்துடனும், அவர் துன்பங் களை எதிர்கொள்வதைப் பார்த்துப் பார்த்து, வாழ்க்கையில் எதிர் நீச்சல் போடும் துணிவு என்னிடம் இயற்கையாகவே வேர்விட்டது.

கே : உங்கள் புத்திசாலித்தனத்தையும் சாமர்த்தியத்தையும் ஏன் ஆக்கபூர்வமான வழிகளில் செலவழிக்கவில்லை?

ப : உங்கள் கேள்வியில் உங்கள் தீர்ப்பும் தொக்கி நிற்கிறதே? என்னைப் பொறுத்த வரை ஆக்கப்பூர்வமான வழிகளிலேயே என் நேரத்தைக் கழித்திருப்பதாக எண்ணுகிறேன். என் மீது அபாண்டமாக சுமத்தப்பட்டிருக்கும் பழிகள் அனைத்தும் உங்கள் முன் மலையாகக் குவிக்கப்பட்டாலும் அதனூடே, நான் பல துறைகளில் முன்னேற்றத்திற்கு வழிவகுத்திருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெள்ளத் தெளிவாகப் புலனாகும். என்னவோ என் துரதிர்ஷ்டம், இன்று அஸ்திவாரமே இல்லாத பல குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி நிற்கிறேன்!

கே : பணத்துக்கு அவ்வளவு பெரிய ஈர்ப்பு சக்தியா என்ன? உங்கள் உயிரையே பணயம் வைக்கும் தகுதி அதற்கு இருப்பதாகவா எண்ணுகிறீர்கள்?

ப : மறுபடியும் நான் 'பேராசைக்காரன்' என்ற பட்டத்தைக் கட்டுகிறீர்களே? உண்மையில் நானோ, என் குடும்பத்தாரோ, என்றுமே பணத்துக்கு அடிமையானவர்கள் அல்ல. நான் ஒருவன்தான் முதன் முதலாக, எந்த நிபந்தனையுமின்றி, என் வாடிக்கையாளர்களுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதாக ஒப்புக் கொண்டவன். (I was the first and the only one to make unconditional offer to honour all my commitments to customers). பண ஆசை இருந்திருந்தால் இப்படிச் செய்திருப்பேனா? எனது ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அதிகபட்ச வருவாய் கிடைக்கும் படியாகச் செய்திருக்கிறேன். வாடிக்கையாளர்கள் லாபமடைய வேண்டுமென நினைத்தேனேயன்றி என் லாபத்தைக் கணக்குப் பார்க்கவில்லை. பங்கு மார்க்கெட் நடைமுறைகளிலிருந்து முரண்பட்டோ, முறை தவறியோ நான் எதுவுமே செய்யவில்லை. ஊழல் இருந்ததெல்லாம் வங்கிகளின் இயக்கத்தில்தான்! அதுவும் கடந்த 45 வருடங்களாக அவர்கள் கடைப்பிடித்து வந்த தவறான செயல் திட்டங்களில் தான்! இந்த முறைகேடுகளனைத்தும் இப்போது வெட்ட வெளிச்சமான பின், 'குற்றவாளிகள்' எனும் அட்சதையை நாலு தனிமனிதர்கள் தலையில் போடப் பார்க்கிறார்கள்! இந்த விவகாரம் வெறும் ஹர்ஷத்

மேத்தா ஊழலாக ஆரம்பித்தது; ஆனால் இன்று, நிதித் துறையின் ஒவ்வொரு அங்கத்திலும் ஊழல் மலிந்திருப்பதை உலகுக்கு உணர்த்துவதாக அமைந்து வருகிறது பார்த்தீர்களா? உண்மைகள் அனைத்தும் வெளியே வரும் வரை தயவுசெய்து பாரபட்சமில்லாமல், பொறுமையாகக் காத்திருங்கள்.

கே : இந்த ஊழலால் நஷ்டமடைந்தவர்கள் ஒருபுறமிருக்க, வாழ்க்கை சேமிப்புகளையே இழந்து விட்ட ஆயிரக்கணக்கானவர்களைப் பற்றி, உங்கள் மனத்தில் ஈரம் கசிந்ததுண்டா?

ப : கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை இழந்தவர்களுக்காக என் மனம் நெகிழ்ச்சியுறுவது உண்மை; ஆனால் யாருடைய இழப்புக்கும் நான் பொறுப்பல்ல; கூட்டு பார்லிமெண்ட் குழுவின் (J.P.C.) முன் நான் சமர்ப்பித்திருக்கும் உண்மைகள் பங்கு மார்க்கெட் விவகாரங்களில் நான் எந்த அளவுக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறேன் என்பதை விளக்கும். எங்கள் குரூப் மொத்தம் 158 கோடி முதலீடு செய்திருப்பதை SEBI (Securities and Exchange Board of India) கண்டு பிடித்துள்ளது. JPCயிடம் நான் சமர்ப்பித்த அட்டவணைப்படி, நான் முதலீடு செய்திருப்பதெல்லாம் B.S.E. index அளவு 2700ஐத் தொடுவதற்குப் பல நாட்கள் முன்னமேயே என்பது விளங்கும். பங்கு மார்க்கெட்டில், பட்ஜெட் தினமான 29.2.92க்குப் பிறகு ஏற்பட்ட திடீர் ஏற்றத்துக்கு நான் காரணமேயல்ல! ஷேர்களை வாங்குவதற்கு முன் நன்றாக ஆராய்ந்து, யோசித்து முடிவெடுங்கள் என்று நான் பலமுறை முதலீடு செய்பவர்களை எச்சரித்திருக்கிறேன். எந்த ஷேர்களிலும் பணம் போடுவதற்கு நான் யாரையும் தூண்டியதுமில்லை; துர்போதனை செய்ததுமில்லை; நாட்டில் புதிதாக அறிமுகமாகியிருக்கும் பொருளாதாரக் கொள்கைகள் ஏற்றமிருந்தவையே! சுதந்திரப் பொருளாதாரத்தை நான் ஆதரிக்கிறேன். பொது மக்கள் அனைவரும் பங்குதாரர்களாகும் Equity Cult என்பது இந்தியாவில் இன்னும் முதிர்ச்சியடையாத, ஆரம்ப நிலையிலேயே உள்ளது. குறைந்த கால லாபங்களைப் பொருட்படுத்தாமல், நீண்ட காலத்துக்குப் பங்கு மார்க்கெட்டில் பணம் போட நினைக்கும் 'long term equity investors' க்குச் சரியான வழிகாட்டிகள் அமைந்தால், அவர்களுக்கு நிறைய லாபம் கிடைக்கும் என்பது எனது திட்டவட்டமான கருத்து. நான் பங்குகள் வாங்கும் பழக்கம் வளர்ச்சி பெறவே உழைத்தேன்! இதற்காக நீங்கள் என்னை வாழ்த்தா விட்டாலும் பரவாயில்லை! திட்டாமலாவது இருக்கலாம். பொது மக்கள் பைத்தியக்காரத்தனமாக என்ன விலை வேண்டுமானாலும் கொடுத்து எந்தக் கம்பெனியின் ஷேர்களை வேண்டுமானாலும் கண்ணாபின்னாவென்று பணவெறியில் வாங்கியதற்கும் பின்பு அதை இழந்து தவித்ததற்கும் என்னை ஏன் வைகிறீர்கள்?

கே : ஊழலில் சம்பந்தப்பட்ட வங்கி நிர்வாகிகள் அனைவரும் தெரிந்தே தவறுக்குத் துணைபுரிந்தவர்களா, அல்லது தெரியாத்தனமாக வலையில் சிக்கியவர்களா?

ப : நிகழ்ந்தவை அனைத்தும், சம்பந்தப்பட்ட அனைவரின் (market players & regulatory authorities) முழு சம்மதத்துடனும் ஒத்துழைப்புடனும் ஆசிகளுடனும்தான் நடந்திருக்கிறது.

கே : உங்களைத் திடீரென்று கைது செய்தபோது உங்கள் குடும்பத்தினரின் மனநிலை...?

ப : முதலில் ஆச்சர்யம் கலந்த அதிர்ச்சிதான். பிறகு, சிறிது சிறிதாகத் தேற்றிக் கொண்டனர்.

கே : ''இந்த நாட்டை விட்டே தலைமறைவாகி விட நிறைய நேரமிருந்தும் நான் அப்படிச் செய்யவில்லை'' என்று கூறியிருக்கிறீர்களே, உங்களின் இந்தச் செய்கைக்குக் காரணம்?

ப : நான் நாட்டை விட்டு ஓடாததற்கு முதற்காரணம், 'நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை' - 'நிரபராதி' என்ற எண்ணம் மேலோங்கியிருந்ததுதான். மேலும், இந்த நாட்டின் மீதும், அதன் எதிர்காலத்திலும் எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது.

கே : உங்களுக்கு இங்கே நீதி கிடைக்கும் என்று நினைக்கிறீர்களா?

ப : நான் இது பற்றி ஏற்கெனவே நிறைய சொல்லி விட்டேன். தயவு செய்து என் முந்தைய பத்திரிகை அறிக்கைகளைப் பாருங்கள். ஒன்றே ஒன்று மட்டும் கூற விரும்புகிறேன். இந்த நாட்டின் மிகக் கொடூரமான குற்றவாளிகூட, நான் நடத்தப்பட்ட அவலமான முறையில் நடத்தப்பட்டிருக்க மாட்டான். எனக்கிழைக்கப்பட்ட கொடுமைகளை அனுபவித்திருக்க மாட்டான். என் மீது 13 F.I.R. கள், கோர்ட்டில் 3 வழக்குகள், மேலும் 12 குற்றச்சாட்டுகள் இப்படி எத்தனையோ... சொத்து, சுதந்திரமெல்லாம் பறிக்கப்பட்டு, நானும் என் குடும்பத்தினரும் துன்புறுத்தப்பட்டு... அப்பப்பா. ஒரு கட்டத்தில், மேலேயே போய் விடுவோமோ... அப்படிப் போனால் இந்த உலகத்தில் கிடைக்காத நிம்மதி அந்த உலகத்திலாவது கிடைத்து விட்டுப் போகட்டும் என்று நினைக்குமளவுக்கு விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டேன்.

கே : மாதவன் (CBI) ராஜினாமாவுக்கு உண்மையான காரணம் என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

ப : திரு. மாதவனே காரணங்களைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். தடைகளின்றி, சுதந்திரமாக அவரால் இயங்க முடியவில்லை. விசாரணையின் ஆரம்ப காலத்திலேயே 'அரசியல்வாதிகளுக்கும் இந்த ஊழலுக்கும் துளியும் சம்பந்தமில்லை' என்ற நற்சான்றிதழை வழங்க

வேண்டும் என்று அவரை நிர்ப்பந்தித்தார்கள்.

கே : பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்ட நிலையில், அரசியல்வாதிகள் தொடர்பு பற்றிய உங்கள் திடீர் வெளியீடுகளும் அறிக்கைகளும், அரசியல் வட்டாரங்களிலோ, மக்கள் மனத்திலோ ஏதேனும் பாதிப்பை உண்டாக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

ப : நரசிம்மராவுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்பதற்காகவோ ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்ற நோக்கிலோ இந்தியாவில் நிலையற்ற அரசியல் சூழ்நிலை உருவாக்க வேண்டுமென்றோ, நான் பிரதமருக்கு ஒரு கோடி கொடுத்ததைப் பற்றிச் சொல்லவில்லை. வெளியிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற இக்கட்டான நிலையில்தான் நான் அவர் பெயரை வெளியிட்டேன். ஆனால் எதிர்காலத்தைப் பற்றியோ, இனி நான் வெளியிடக்கூடிய அறிக்கைகளைப் பற்றியோ இப்போது எதுவும் கணிப்பதற்கில்லை.

கே : இன்றியமையாத, முக்கியமான சாட்சியங்களின் வெளியீட்டை இன்னும் ஏன் தள்ளிப் போட்டுக் கொண்டேயிருக்கிறீர்கள்?

ப : என் சொந்த நலனில் நானே அக்கறை எடுத்துக் கொள்ளாவிட்டால் எப்படி? CBI, JPC இரு அமைப்புகளுமே எனக்குப் பாதுகாப்பளிக்க மறுத்து விட்டன. அரசியல் சூழ்ச்சி, சித்திரவதைகளிலிருந்து நான் தப்பிப்பது எப்படி?

கே : விசாரணையை எதிர்பார்த்துத் தானே சாட்சியங்களுக்கென்று, முன்னெச்சரிக்கையுடன் நீங்கள் அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை வீடியோவில் பதிவு செய்து வைத்திருக்கிறீர்கள்? அப்படியிருந்தும் உங்கள் வாக்குமூலங்கள் சில முன்னுக்குப் பின் முரணாய் அமைவது எப்படி?

ப : நான் ஜனவரி 14, 1993 அன்றுதான் உரையாடல்களைப் பதிவு செய்யத் தொடங்கினேன். ஏனென்றால், அப்போதுதான் எனக்கெதிராகச் சதி உருவாகி வருவது தெரிந்தது. ஒரு பாதுகாப்பில்லாத சூழ்நிலை உருவாவதை உணர்ந்தேன். மற்றபடி என் வாக்குமூலத்தில் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்கள் எதுவுமில்லை. நான் எதையும் முன்கூட்டி எதிர்பார்த்துச் செய்யவுமில்லை!

கே : பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்தால், உங்களுக்கு உதவுவார்கள் என்று உண்மையிலேயே நீங்கள் நினைக்கிறீர்களா?

ப : என் வாக்குமூலங்களுக்கும் இது போன்ற வதந்திகளுக்கும் சம்பந்தமில்லை!

கே : உங்கள் எதிர்காலம்...?

ப : எனக்கு ஒரு புனர்வாழ்வு நிர்மாணித்துக் கொள்வதில் கொஞ்ச காலத்துக்குச் சில இடையூறுகளிருக்கலாம். ஆனால் நீண்ட கால நோக்கில் நிச்சயம் என் எதிர்காலம் ஒளிமயமானதே!

பேட்டி : ஜெயஸ்ரீ ராஜ்

படம் - நன்றி : சண்டே

'திருடா திருடா' அனுபமா:

திரையுலகில் ஏ.ஆர். ரகுமான் வரவுக்குப் பிறகு ஏராளமான இளம் பாடகிகள் அறிமுகமாகியிருக்கிறார்கள். திரும்பத்திரும்ப ஒரிரு குரல்களையே கேட்டுப் பழகிய செவிகளுக்கு, சமீப காலமாக செமை விருந்து. மின்மினி, சுஜாதா, சுபா, காரலின்... என்று புதுப்புதுப் புதுக் குயில் பட்டாளம். இந்தப் பட்டியலில் மிகச் சமீபகால புதுப்புயல், அனுபமா. முழுசாக இதுவரை இவர் பாடியிருப்பது இரண்டே பாடல்கள்தான் என்றாலும் இரண்டும் சூப்பர் ஹிட்.

('புதிய முக'த்தில் 'ஜூலை மாதம் வந்தால்', வரப்போகிற 'திருடா திருடா'வில் கொஞ்சம் நிலவு; கொஞ்சம் நெருப்பு)

டீக்கடைகளிலும், கேஸட் கடைகளிலும் திருடா திருடாவைப் போட்டுத் தேய்த்து விட்டார்கள். சிலோன் ரேடியோவில் தினசரி சுப்ரபாதம் போட மறந்தாலும் 'சந்திரலேகா....'வைப் போட மறப்பதில்லை. கொசுறாக அனுபமா பற்றிக் கவிதை நடையில் சின்ன அறிமுகம்... இளம்புயல், புதுப்புனல், குயில் குரல் - இந்த ரீதியில்.

யாரிந்த அனுபமா?

குரோம்பேட்டையில் குடியிருக்கும் டெல்லித் தமிழி. (தமிழச்சி என்பதை விட இது பெட்டர் இல்லையா?) எம்.ஏ. இலக்கியமும் விளம்பரத்துறை டிப்ளமாவும் முடித்த சுறுசுறுப்பான குதிரைவால் ஜடை.

பேச்சில் அசாத்யமான தெளிவு, தன்னம்பிக்கை. அருவி போல ஆங்கிலம். கார்ப்பரேஷன் குழாய் போலத் தமிழ். குடும்பப் பின்னணியில் பலமான சங்கீத அஸ்திவாரம். (வருஷா வருஷம் சென்னையில் TAG Music Festival நடத்தும் சாரி, இவரது மாமா).

சுல்லிக்கு பேட்டி என்றதும் சந்தோஷமாகச் சம்மதித்தார். பிரமிப்பு நீங்காத முகத்துடன் உற்சாகமாகப் பேசினார்.

''கிட்டத்தட்ட இருபது வருஷம் டெல்லியில் வளர்ந்தாலும் தமிழ் சுத்தமா பேசறீங்களே?''

''பிறந்தது மெட்ராஸ்தான். அப்பா உத்யோகம் காரணமாக டெல்லி போக வேண்டியதாயிடுச்சி. ஸ்கூல்ல, வெளில எல்லாம் ஹிந்திதான்னாலும் வீட்ல தமிழ் தான்.''

''எப்ப மறுபடி மெட்ராஸ் வந்தீங்க?''

''1991 - ல் தான் வந்தோம். படிப்பு அங்கயே முடிச்சுட்டேன். இங்க வந்ததும் மெட்ராஸ் அட்வர்டைஸிங் கம்பெனில வேலைக்குச் சேர்ந்தேன்.''

''பாடகியா வர்ற ஐடியாவெல்லாம் அப்ப கிடையாதா?''

''கிடையவே கிடையாது. படிப்பு, அப்புறம் வேலை. இதுதான் பிளான். ஆனா சின்ன வயசுலேர்ந்தே ம்யூசிக் பிடிக்கும். கர்நாடிக் ம்யூசிக் டெல்லியிலேயே கத்துக்கிட்டேன். மேற்கத்திய சங்கீதத்திலயும் விருப்பம் இருந் தது. ஆனா யார்கிட்டேயும் போய், கத்துக்கற வாய்ப்பு கிடைக்கலை. கேஸட் போட்டுப் போட்டு கேட்டு, நானே



தமிழா? டமிழா?



இன்ட்ரஸ்ட் வளர்த்துக்கிட்டேன். வீட்டிலேயே பாடிப் பார்ப்பேன். நல்லாவும் பாடுவேன். அப்ப கூட சினிமால பாடற எண்ணமெல்லாம் கிடையாது. இது தற்செயலா அமைஞ்சது!''

''எப்படி?''

''மெட்ராஸ் அட்வர்டைஸிங்ல நான் வேலை பார்த்துக்கிட்டு இருந்தப்போ, Ad Festival ஒண்ணு நடந்தது. காலேஜ் கல்சுரல் விழா மாதிரி. அதுல சும்மா ஒரு பாட்டு பாடினேன். அப்ப ஒருத்தர், 'நீ நல்லா பாடறியே, விளம்பரப் பாடல்கள் பாடலாமே' அப்படீன்னார். திலீப்னு ஒரு ம்யூசிக் டைரக்டரைப் போய்ப் பாக்கச் சொன்னார். அவர்தான் அப்ப, விளம்பரப் பாடல்கள் கம்போஸ் பண்றதுல பெரிய ஆள். நான் அவரைப் போய்ப் பார்க்கற நேரத்துல அவர் சினிமாவுக்கு வந்துட்டார். ஏ.ஆர். ரகுமான்கிற பேர்ல 'ரோஜா' ம்யூசிக் பண்ணி, சக்கை போடு போட்டுட்டிருந்தார்.

''என் வாய்ஸ் கேட்டுட்டு அவருக்கு ரொம்பப் பிடிச்சி போயிடுச்சு. ரெண்டு மூணு விளம்பரங்களில் பாட வெச்சார். அப்புறம் அவரே 'புதிய முகம்' பண்ணும் போது 'ஜூலை மாதம் வந்தால்' பாட சான்ஸ் கொடுத்தார். அந்தப் பாட்டு ரொம்ப சக்ஸஸ் ஆச்சு. தொடர்ந்து பாடிக்கிட்டிருக்கேன்.''

''முதல் சினிமா அனுபவம் எப்படி இருந்தது?''

''முன்னாடியே ஜிங்கிள்ஸ் (விளம்பரப் பாடல்கள்) பாடியிருந்ததுனால கஷ்டம் ஒண்ணும் தெரியலை. மேலும், முதல்ல 'ஜூலை மாதம்' பாடலை சித்ராவோ யாரோதான் பாடறதா இருந்தது. 'டிராக்' பாடறதுக்குத்தான் என்னைக் கூப்பிட்டார். 'டிராக்' தானேன்னு ரொம்ப கேஷுவலாப் பாடினேன். அதுவே நல்லா அமைஞ்சுட்டதால இந்தக் குரலே இருக்கட்டும்னு விட்டுட்டார்.''

''ரகுமானோட ஒர்க் பண்ணறப்போ உங்க அனுபவம் எப்படி?''

ஏறக்குறைய அவருக்கும் என் வயது தான். சின்ன வயசுன்னாலும் அபாரமான இசை அறிவு அவருக்கு. நம்ப பாரம்பரிய இசையோட, ரொம்ப லாவகமா மேற்கத்திய இசையைக் கலக்கறார். பயங்கரப் பொறுமைசாலி. எதிர் பார்க்கற ரிஸல்ட் கிடைக்கிற வரைக்கும் விட மாட்டார்.''

''ரகுமான் இசைல பாட்டைவிட ம்யூசிக் டாமினேஷன் அதிகமாத் தெரியுதே. உங்க குரல் அடிபட்டுப் போயிடறதுல வருத்தமில்லையா?''

''பாட்டுங்கறது, பாடறவங்களுக்காக இல்லையே? மக்களுக்குத் தானே! ஜனங்க எதை எதிர் பார்க்கிறாங்களோ அதை அவர் தரார். ஒரு காலத்துல பாடல் வரிகளுக்காக ரசிச்சாங்க. அப்புறம் பாடறவங்க குரலுக்காக. இப்போ ம்யூசிக்கை, ம்யூசிக் டாமினேஷனை ரசிக்கறாங்க! மக்கள் ரசிப்பதைத் தானே இசையமைப்பாளர்கள் தர முடியும்?''

''நீங்க பாடியிருக்கற ரெண்டு பாடலுமே 'செக்ஸி'யா அமைஞ்சுட்டது தற்செயலாத் தானா? அல்லது உங்க வாய்ஸ் அதுக்குத்தான் லாயக்குன்னு நினைக்கறீங்களா?''

''இதை நான் கடுமையா மறுக்கறேன். எந்த மாதிரியான பாடலும் என்னால பாட முடியும். 'சிங்கார வேலனே தேவா' மாதிரி பாட்டும் பாடுவேன். 'கொஞ்சம் நிலவும்' பாடுவேன். ஆனா முதல் இரண்டும் இப்படி அமைஞ்சுகட்டது தற்செயல்தான். இதுவே எனக்கு பயமா இருக்கு. 'இந்த மாதிரி பாட்டுக்குத்தான் இந்த அனுபமா'ன்னு 'பிராண்ட்' பண்ணிடுவாங்களோன்னு. இனிமே பாட்டு செலக்ட் பண்றதுல கொஞ்சம் கவனமா இருக்கலாம்னு நினைக்கறேன்.''

''நீங்களோ ஃபீல்டுக்குப் புதுசு. இது தான் வேணும், இந்தமாதிரி பாடமாட்டேன்னு கேக்க முடியுமா?''

''ஏன் முடியாது? நம்ம இன்ட்ரஸ்டைச் சொல்றதுல என்ன தப்பு? மோர் ஓவர், ரகுமான் கிட்ட அப்ரோச் பண்றது ரொம்ப சுலபம். அவர் புரிஞ்சிப்பார்.''

''திருடா திருடால ஒர்க் பண்றப்போ ஏதாவது மறக்க முடியாத சம்பவம்....?''

''ஒண்ணு இருக்கு. முதல் நாள் நான் ரெக்கார்டிங் போனபோது மணிரத்னம் சார், வைரமுத்து எல்லாரும் வந்திருந்தாங்க. ரகுமான் என்னை, வைரமுத்துகிட்ட 'இவர் தான் அனுபமா. இந்தப் பாட்டைப் பாடப் போறவங்க. டெல்லிலேர்ந்து வந்திருக்காங்க''ன்னு சொன்னார். உடனே வைரமுத்து அவர்கிட்ட 'தமிழ் தெரியுமா'ன்னு என்னைக் காட்டிக் கேட்டார். நான் தலை ஆட்டினேன். அவர் இண்டலா, 'தமிலா? டமிலா?' அப்படீன்னார். நான் உடனே 'ரெண்டுமில்லை சார், தமிழ்' அப்படீன்னேன். அவருக்கு ரொம்ப ஆச்சர்யமாவும் சந்தோஷமாவும் ஆயிடுச்சி. ஏன்னா, தமிழ் சினிமால பாடறதுக்கு புதுசா வர்றவங்க எல்லாருமே மலையாளம், தெலுங்கு, ஹிந்தில எழுதி வெச்சிக்கிட்டு பாடறவங்க தான் ஜாஸ்தி.

''ரெக்கார்டிங் முடிஞ்சதும் நல்லாப் பாடினேன்னு ரொம்பப் பாராட்டினார். மணி ரத்னம் சார் கூட சுகாஸினியைக் கூப்பிட்டு 'பிரமாதமாப் பாடறா'ன்னு இன்ட்ரொட்யூஸ் பண்ணி வெச்சார். பெரிய பரிசு அது!''

''பெரிய பெரிய பாடகர்கள், பாடகிகளெல்லாம் நிறையப் பேர் இருக்காங்க இப்ப. புதுசா வர்றவங்க நிக்க முடியறது கஷ்டம் இல்லையா?''

''நாம நல்லாப் பாடினா நாமும் பெரியாளாயிடப் போறோம்! அவ்ளோ தானே! இப்ப 'சின்ன சின்ன ஆசை'க்கு அப்புறம் மின்மினி ஸ்டார் பாடகி ஆயிடலையா? ஜானகி 'பீக்'ல இருந்த போது தானே சித்ரா வந்தாங்க? நம்ம வொர்க்கைப் பர்ஃபெக்டா பண்ணாப் போதும். ரெகக்னிஷன் கண்டிப்பா வந்துடும்!''

''இன்ஸ்ட்ருமென்ட்ஸ் புதுசு புதுசா வர்றதுனால பாடகர்களுக்கு உரிய மரியாதை கிடைக்காம போறதுக்கு வாய்ப்பு இருக்கா?''

''மரியாதை இல்லாம போறதுங்கறதை ஒத்துக்க முடியாது. ஆனா வாத்தியங்கள் முழுக்க கம்ப்யூட்டரைஸ் ஆகி விட்டதுனால அவைகளோட டாமினேஷன் அதிகமாத்தான் இருக்கும். பத்து பேர் வாசிக்க வேண்டிய வாத்தியங்களை இப்ப ஒரு சிந்தஸைஸர் வாசிச்சுட்டுப் போறது. ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ் எல்லாம் எக்கச்சக்கமா வந்துட்டே இருக்கு. பிரசாத் ஸ்டுடியோல ஒரு கருவி பார்த்தேன். ரெக்கார்டிங்ல ஜாலம் காட்டுது. மனுஷங்களுக்கு வேலையே இல்லை. இருந்தாலும் இந்த வளர்ச்சி தவிர்க்க முடியாதது. ஏற்றுக் கொண்டுதான் ஆகணும்.''

''உங்களுக்குப் பிடிச்ச பாடகி?''

''சித்ராதான்! அவரை மாதிரி யாராலும் பாட முடியாது!''

''டெல்லில வளர்ந்திருக்கீங்க. ஹிந்தி பாடல்கள் பற்றி....''

''அங்க இப்ப ஒண்ணுமே இல்லை சார்! எந்தப் பாட்டைக் கேட்டாலும் ஒரே மாதிரிதான் இருக்கு. 'சூப்பர் ஹிட் முகாப்லா'ல பத்து பாட்டு போடறாங்களே, ஒண்ணுக்கொண்ணு வித்தியாசம் தெரியுதா பாருங்க! ஒருகாலத்துல ஹிந்தி பாடல்கள் நல்லா இருந்தது. இப்ப ம்யூசிக் ஃபீல்டே தமிழ் நாட்டை நம்பித்தான் இருக்கு! பாம்பேல இருக்கற விளம்பரக் கம்பெனிகளெல்லாம் இங்க வந்து ம்யூசிக் கம்போஸ் பண்ணிட்டுப் போறாங்க!''

''இப்ப தமிழ்ல நீங்க பாடறதுனால இப்படிச் சொல்றீங்களா?''

''நெவர்! பாடாட்டாலும் இதையே தான் சொல்வேன். ரீஸண்டா தெலுங்குல கூட ரெண்டு மூணு பாட்டு பாடிட்டு வந்திருக்கேன். மலையாளத்திலும் கூப்பிடறாங்க. ஆனா ம்யூசிக்னா தமிழ்தான்!''

''வேலைக்குத் தினம் போய்க்கிட்டே பாடறது கஷ்டமா இல்லையா?''

''ம்.... கஷ்டம்தான். அதனாலதான் வேலையை விட்டுட்டேன்!'' (சிரிக்கிறார்)

''முழு நேரப் பாடகியாயிடறதுன்னு முடிவு பண்ணிட்டீங்க?''

''பின்னே? அதுக்காகத்தான் இன்னும் சின்சியரா கர்நாட்டிக் ம்யூசிக் கத்துக்க ஆரம்பிச்சிருக்கேன். கிளாஸுக்குப் போறது, பிராக்டிஸ் பண்றது, ரெக்கார்டிங் போறது. டைம் இருந்துதுன்னா சமையலறைல புதுசு புதுசா ஏதாவது செஞ்சிப் பார்க்கறது. இதான் இப்ப என்னோட ரொட்டீன்!''

''ஆல் தி பெஸ்ட்!''

''தேங்க்யூ!''

சந்திப்பு : பா. ராகவன்

மேலட்டை வண்ணப்படம்,

புகைப்படங்கள் : கோபிநாத்

ப்யூட்டி ஃப்ரீ!

இலவசம்!

லாக்டோ காலமைன் லோஷன் (30 மிலி.)

எந்த ஒரு 400 கிராம் குடிகூரா டால்க்குடனும்.

(குடிகூரா டால்க் : லாவண்டர் மிஸ்ட், ஸ்ப்ரிங்ஃப்ரெஷ், க்ளாஸிக்)



Cuticura

International

BEAUTY TALCS

முந்துங்கள் ஸ்டாக் உள்ளவரைதான் இவ்வாய்ப்பு. தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த சில இடங்களில் மட்டுமே கிடைக்கிறது.

Chaitra Leo Burnett B MP/046/93 TAM

நீங்கள் கேட்டவை - தராசு



● பெண் குஷ்பு?

● வி. சிவா, அரசடி.

? வடக்கே மீண்டும் பல ஜனதாக்களும் ஒன்று சேர்வது பற்றி?

! ஒன்று சேர்வதே மீண்டும் உடைவதற்காகத்தான் என்று ஏற்கெனவே பலமுறை நிரூபித்தவர்கள், மறுபடி ஒன்று சேருகிறார்கள்!

● ரம்யா, கோவை.

? வடமாநிலத் தேர்தல்களிலும் காங்கிரஸ் தோற்று விட்டால்?

! தோற்காமல் இருக்கத்தான் ஒன்பது மாதங்களுக்குப் பிறகு அவசரம் அவசரமாக பப்ரி மஸ்ஜித் இடிக்கப்பட்டதற்கு வி.பி.ஜ. வழக்குப் போட்டிருக்கிறார்கள். தேர்தல் கமிஷனில் மேலும் இருவரைப் புகுத்தி சேஷனின் பல்லைப் பிடுங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த யுக்திகள் காங்கிரஸ் மீது மக்களின் வெறுப்பை மேலும் அதிகரித்து விடாமலிருந்தால் சரி. உங்கள் கேள்விக்கு வருகிறேன். தோற்று விட்டால் மத்தியில் காங்கிரஸ் அரசு தார்மீகப் பொறுப்பேற்று ராஜினாமா செய்து விடப் போவதில்லை. மத்திய அரசு செய்துள்ள பல தவறுகளுள் ஒன்றை மக்கள் திருத்தி அமைத்து விட்டார்கள் என்றாகும். அவ்வளவுதான்.

● எம். கே. சக்திவேல், மணியனூர்.

? அ.இ.அ.தி.மு.க.வின் பலம் - பலவீனம் என்ன?

! பலம் - எம்.ஜி.ஆர். உருவாக்கிய இமேஜ். பலவீனம் - ஜெயலலிதா உருவாக்க எண்ணும் இமேஜ்.

● ஈ.டி. விஜயகுமார், ஈரோடு.

? சமீபத்தில் தங்களை பாதித்த சம்பவம்?

! "மகாராஷ்டிர பூகம்பத்தில் சிக்கி இறந்தவர்களின் உடலிலிருந்து நகைகளைக் களவாடவென்றே அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்து பலர் 'மீட்புப் பணி'க்கு வருகிறார்கள்" என்று பி.பி.ஸி. செய்தி கேட்ட போது, ஆத்திரப்படுவதா அவமானப்படுவதா என்றே புரியவில்லை, போங்கள்.

● ரமேஷ் பாபு, விருத்தாசலம்.

? சதம் அடிக்கப் போகும் இளையராஜாவுக்கு தாங்கள் கூறுவது?

! வாழ்த்துக்கள். அத்துடன் ஐந்தில் ஒரு படத்துக்காவது கதையம்சத்தில் கருத்துச் செலுத்த லாமே என்ற யோசனை.

● ஆர். முத்துக்குமார், அரசர்குளம்.

? இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பான் நடந்து கொண்ட விதத்துக்காக ஜப்பானின் புதிய பிரதமர் ஐ.நா. சபையில் மன்னிப்புக் கேட்டது பற்றி?

! உலகப் போரின் கொடுமைகளை அதில் பங்கேற்ற எல்லா நாடுகளுமே மிக நன்றாக அனுபவித்தன. ஜப்பானுக்குக் கூடுதலாக அணுகுண்டு சோதனை. எனவே அவர்கள் வருத்தம் உண்மையானதாகவே இருக்கும். அதனை வெளிப்படுத்தி, ஆக்கிரமிப்புக்காக மன்னிப்புக் கோரும் பண்பாடு போற்றப்பட வேண்டிய ஒன்று. யாருக்கும் எளிதில் வந்து விடாத உயர்ந்த குணம் அது.

● முத்துக்குமரன், தோழகிரிபட்டி.

? 'காங்கிரஸ் கூட்டணி இல்லாமல் போனதால்தான் தோற்றுப் போய் விட்டது' என காங்கிரஸ் மேலிடம் சொல்கிறதே?

! தவறு. முதுகுச் சவாரி செய்து பழகி விட்டதாலும், அதனால் இப்போது அடிமட்ட நிலையில் உழைக்க உடல் வணங்காததாலும், உட்கட்சித் தேர்தல்களை நடத்தி, உட்கட்சிப் பூசல்களுக்கு முடிவு காணாததாலும், பாஸிடிவ் அணுகுமுறையைக் கையாளாமல் குறைகூறியே கும்மாளமிட்டமையாலும் தோற்றது. இந்தத் தோல்வி கண்டு பயந்து மறுபடி முதுகுச் சவாரிக்குத் தயாராவது போன்ற அசட்டுத்தனம் வேறு இருக்க முடியாது.

வடமாநிலத் தேர்தல்களில்

● அருவிமைந்தன், கோனாப்பட்டு.

? பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பங்களா தேஷில் இந்துக்கள் பட்ட அவதியைப் புத்தகமாக எழுதிய முஸ்லிம் எழுத்தாளர் தஸ்லீமைக் கொலை செய்பவருக்கு ரூ 50,000 பரிசு அறிவித்துள்ள முஸ்லிம் பழமைவாதிகள் குறித்து?

! இதுவும் இன்னொரு சல்மான் ருஷ்டி விவகாரம்தான். மதமும் அரசியலும் கலக்கும் போதுதான் பிரச்னை என்று



● அடப் பாவமே!...

பார்த்தால் மதமும் இலக்கியமும் இணையும் போது கூட பிரச்னை உண்டாகிறது என்பது ரொம்பக் கேவலம். பொதுவாக சகிப்புத் தன்மை குறைந்து வருவதையே இது உணர்த்துகிறது. "நான் உன் கருத்தை ஏற்காவிட்டாலும் அதனை வெளியிடுகிற உன் உரிமையை மதிக்கிறேன்" என்ற பெருந்தன்மைப் போக்கு, உலக மக்களிடையே இன்னும் அதிகமாகப் பரவி நெஞ்சில் பதியவும் வேண்டும்.

● பாக்கியமுத்து, திருச்சி.


? அதிகாரிகள் லஞ்சம் வாங்கும் போது அதைக் கண்டுகொள்ளாமல் இருப்பது குறித்து...?

! பங்கு பெறும் போது கண்டுகொள்வது சாத்தியமில்லையே!

● வி.எஸ். ராமு, திண்டுக்கல்.

? இடைத் தேர்தலில் உண்மையான வெற்றி யாருக்கு?

! பணத்துக்கு.



* இமேஜ் - பலவீனம்



* இமேஜ் - பலம்

! தமது கருத்துக்கள், செயல்பாடுகளுக்கு இசைவாக இன்றி நாடாளுமன்றம் முட்டுக்கட்டை போடுகிறது என்பதற்காக நாடாளுமன்றத்தைக் கலைத்து, தொடர்ந்து தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக ராணுவத்தின் உதவியைப் பெற்றுள்ள அவர், ராணுவத்தின் கைப்பாவையாக இருப்பதை விட நாடாளுமன்றத்தின் மேலாதிக்கத்துக்கு உட்பட்டிருப்பதே மேல் என்பதைச் சீக்கிரமே உணர்வார்.

● அருளானந்தம், காரைக்கால்.

? குஷ்பு - பிரபு திருமணச் செய்தி கேட்டதும் கட்டியவர்களே குஷ்பு கோயிலை இடித்து விட்டார்களே? தெரியாதா?

! அடப்பாவமே! ஒன்று வழிபாடு அல்லது வதையா? இதுதான் நம் நாட்டு நடிகைகள் நிலையா? நி ஜ ம ா வே ரொம்பப் பரிதாபமா இருக்கு, ஸார்!

காங்கிரஸ் தோற்றால்...?

● பா. வை. சுவாமிநாதன், வேலூர்.

? பீஜிங்குக்குப் பதில் சிட்னிக்கு "2000-ஒலிம்பிக்ஸ்" கிடைத்தது பற்றித் தங்கள் கருத்து...?

! இந்த ஒலிம்பிக்ஸ் இல்லாவிட்டால் அடுத்த ஒலிம்பிக்ஸ் பீஜிங்குக்குக் கிடைத்து விட்டுப் போகிறது. பெரிய இழப்பு ஒன்றுமில்லை. ஆனால் முடிவு தெரிந்தவுடன் சிட்னி மக்கள் தன்னியல்பாக வெளிப்படுத்திய உற்சாக ஆர்ப்பாட்டம் இருக்கிறதே, உண்மையிலேயே மெய்சிலிர்க்க வைத்தது.

● வைத்யா, திருவெண்ணெய்நல்லூர்.

? ரஷ்ய அதிபர் எல்சினின் நடவடிக்கைகள் பற்றி?

● ஸி. நமசிவாயம், நெய்வேலி.

? நாலரை கோடி மக்களின் ஜீவாதாரப் பிரச்னைக்கு உண்ணாவிரதம் இருப்பதும் தனிமனிதன் பிரச்னைக்காகக் காவல் துறையை எதிர்த்து உண்ணாவிரதம் இருப்பதும் ஒன்றாகி விடுமா? அப்படிப் பார்த்தால் காந்தி உண்ணாவிரதம் இருந்ததும் ஒன்றாகுமா?

! ரொம்பக் கோபப்படாதீங்க ஸார். போலீஸ்காரங்க எதிர்கட்சித் தலைவர், எம்.எல்.ஏக்கள்கிட்டயே அப்படி நடந்துக்கிட்டா, பொது மக்கள்கிட்ட எப்படி நடந்துப்பாங்க, யோசியுங்க. அதுவும் மக்களின் ஜீவாதாரப் பிரச்னையா மாறிடும்! அப்புறம், காந்திஜி என்றைக்குமே பதவியில் இருந்ததில்லை என்பதையும் நினைக்கப் பாருங்க. என்னோட (26.9.93 இதழ்) பதில் நடுநிலை தவறியதில்லைன்னு புரிஞ்சுக்கப்பீங்க. நன்றி.

* சீக்கிரம் உணர்வார்




* பல்லைப் பிடுங்க...



* சதத்துக்கு வாழ்த்து



❐ ரூ 25 பரிசு பெறுபவர் :
ஆர். முத்துக்குமார்,
பட்டிணக்காடு,
அரசர்குளம் (அஞ்சல்)
அறந்தாங்கி (வட்டம்)
- 614 801.


மாநிலங்களில் தேர்தல்
அத்வானி, ஜோஷி முதலியோர் மீது, பாபர்மஸ்ஜித் தொடர்பான வழக்கு
ஒட்டு மொத்தமா தீர்த்துக் கட்டிட்டேன்!
ராணுவம்
யெல்ட்சினுக்கு எதிர்ப்பு



ஸ்ரீ
கல்கி



1993
அக்டோபர் 17
மலர் : 52
இதழ் : 12
ஸ்ரீமுக
ஐப்பசி 1

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

வை.கோவுக்குக் கல்தா!

நாஞ்சில் மனோகரனைத் தொடர்ந்து தற்போது வை.கோவும் தி.மு.க.விலிருந்து வெளியேற்றப்படுவார் என்பது கிட்டத்தட்ட உறுதியாகி விட்டது. மாவட்டச் செயலாளர்களின் கருத்துக் கேட்டு தி.மு.க. தலைமையகம் சுற்றறிக்கை அனுப்பிய பிறகு, வை.கோவின் தலை உருளாமல் இருந்தால் அது பேராச்சர்யமாகத்தான் இருக்கும். நாடகம் திட்டமிட்டு நிறைவேற்றப்படும் என்றே கருதலாம்.

"தி.மு.க.வில் வை.கோவின் செல்வாக்கை நிலைநாட்டுவதற்காகக் கருணாநிதியைத் தீர்த்துக் கட்டி விட விடுதலைப் புலிகள் உத்தேசித்துள்ளனர்" என்ற வி.பி.ஐ. அறிக்கை அதிர்ச்சி அளிப்பதுதான். இதனைப் புலிகள் உடனே மறுத்து, "இது தி.மு.க.வில் உட்கட்சிப் பூசலைத் தீர்க்கவும் காங்கிரஸும் தி.மு.க.வும் நெருங்கி வரவும் நடத்தப்படும் சூழ்ச்சி" என்று கூறியுள்ள போதிலும் அதனை முழுமையாக ஏற்க இங்கு யாரும் தயாராயில்லை. ராஜீவ் காந்தியின் உயிரைப் பறித்த புலிகள், கருணாநிதியின் ஆயுளுக்குக் கெடுவைக்க மாட்டார்கள் என்று நம்ப முடியவில்லை. எனவே கலைஞர், அரசின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குச் சம்மதம் அளித்தது சரிதான். ஆனால், கூடவே வை.கோவைக் கட்சியிலிருந்து வெளியேற்றவும் தி.மு.க. தலைமை வழி காண்பதுதான் உறுத்துகிறது.

நாஞ்சில் மனோகரன் போலன்றி வை.கோ. வயதில் இளையவர். கட்சியில் மிகுந்த செல்வாக்குடன் விளங்குகிறவர். அவர் மேடை ஏறினால் அரங்கம் அதிர்கிறது. அவரது 'பாப்புலர் இமேஜ்' தி.மு.க.வின் முதல் வரிசைத் தலைவர்களுக்கே அச்சமூட்டுகிறது. அப்படிப்பட்டவரை சாமர்த்தியமாகக் கட்சிப் பணிக்கு வளைத்துப் போடுவதுதான் சாணக்கியமே தவிர, வெளியேற்றுவது அல்ல.

வை.கோவின் பிராபல்யம், விடுதலைப் புலிகளை அவர் ரகசியமாகச் சந்தித்துத் திரும்பிய போது ஆரம்பமாயிற்று. அது தவறுதான். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு, கட்சித் தலைமையைக் கலந்தாலோசியாமல், பாஸ்போர்ட் - விசா பற்றியெல்லாம் கவலைப்படாமல், அவர் பிரபாகரனைச் சந்திக்கக் கள்ளத் தோணி ஏறியிருக்கவே கூடாது. இதன் மூலம் தி.மு.க.வுக்கு வை.கோ., ஒரு தர்மசங்கடத்தை ஏற்படுத்தினார்.

புலிகளின் நோக்கத்தில் தி.மு.க.வுக்கு அனுதாபம் இருந்தபோதிலும், அதன் கொலை முயற்சிகளுக்கு அது என்றுமே ஆதரவு தந்ததில்லை. (சபாரத்தினம், பத்மநாபா, அமிர்தலிங்கம்) மாறாக இப்படி சகோதரர்களைக் கொல்வதை நிறுத்துமாறுதான் கோரியுள்ளது. அதிலும் ராஜீவ் மரணத்துக்குப் பிறகு புலிகள் தமது கட்சியின் அனுதாபத்தை அடியோடு இழந்து விட்டதாகக் கலைஞர் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார். ஆனால் வை.கோ., இக் கருத்தைத் தாமும் ஏற்பதாக இன்று வரை கூறாததுதான் எல்லாப் பிரச்னைகளுக்கும் அடிப்படைக் காரணம். கருணாநிதியின் ஒரு முக்கியமான கொள்கையை ஏற்க மறுத்து விட்டு, "கலைஞரின் காலுக்கு என் தோலைச் செருப்பாக்கிப் போடுவேன்" என்று வை.கோ. கூறிப் பிரயோஜனமில்லை. புலிகளின் போக்கு தமக்கும் சம்மதமில்லை என்பதாக அவர் தெளிவாகக் கூற வேண்டும்.

இதற்கு மறுபுறமாக, தி.மு.க. தலைவர்களும் வை.கோவைக் கவர்ந்திழுத்து அவரது மனமாற்றத்துக்குப் பாடுபட வேண்டுமே தவிர, அவரை வெளியேற்ற இந்தப் பிரச்னையை வசதியான காரணமாக்கக் கூடாது. அப்படிச் செய்வது, வாரிசு பிரச்னையில் ஸ்டாலினுக்கு ராஜபாட்டை வகுத்துத் தரவே என்ற எண்ணத்தைத்தான் எல்லோரிடமும் உருவாக்கும். இதற்கு மத்திய காங்கிரஸ் அரசும், அதன் ஓர் அங்கமான வி.பி.ஐ.யும் ஒத்துழைப்புத் தந்ததாக ஒரு தோற்றம் ஏற்கெனவே உண்டாகி விட்டது. அடுத்த தேர்தலில் தி.மு.க. நன்றி விசுவாசத்தோடு காங்கிரஸுடன் கூட்டணி அமைத்தால், ஏற்கெனவே புரிந்து போன உண்மைக்குச் சாட்சியம் கிடைத்ததாகும்.

தமிழகத்தில் இன்றுள்ள ஒரே உருப்படியான எதிர்க்கட்சியும் பலவீனப்படுவதை (பலவீனமடையாது என்று கலைஞர் கூறியுள்ளபோதிலும்) இங்கு மக்களில் யாரும் விரும்பவில்லை.

T.S.S. NIDHI LTD

ESTD 1973

THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED
Regd. Office : 230, R. K. Mutt Road, Mylapore,
Madras - 600 004. Phone : 77503.
THIRUVANMIYUR BRANCH : 112, Thiruvalluvar Salai,
Kamraj Nagar, Madras - 600041.

DEPOSIT SCHEMES (W.E.F. 1.10.93)

FIXED DEPOSIT SCHEME

(Minimum of Rs. 1000/- and in Multiples of Rs. 500/-)

Period (months)	Rate of interest P. A.
6	15%
12	17%
24	18%
36	19%
60	20%

KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME

(Re-Investment Plan)

(Minimum of Rs. 1000/- and in Multiples of Rs. 500/-)

DEPOSIT AMOUNT Rs.	PERIOD (months)	MATURITY VALUE Rs.
1000	12	1180
1000	24	1425
1000	36	1760
1000	45	2025
1000	67	3025

HIGHLIGHTS :

* Recognised as a NIDHI COMPANY by Central Government of India.
* Company is in 20th year of Service.
* Monthly interest warrants for the financial year would be despatched in advance at the beginning of the year for fixed deposits.
* No tax deduction at source if the fixed deposit holders submits 15 H in case. For any financial year interest exceeds Rs. 2500/-
* Loan facility upto 75% on Fixed Deposit adn 85% on Recurring Deposit paid-up amount.
* Your Deposit amount is advanced against Gold Jewels and immovable properties of Madras city limits.
* Transaction with members only. (Rupees Two only for Membership.)

JEWEL LOAN :

Jewel loans granted on Gold ornaments at Rs. 300/- per gram i.e. Rs. 2400/- per sovereigh (8 gm).

Recurring Deposit not required.

SENIOR CITIZEN DEPOSIT SCHEME 19% p.a.

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS.)
Minimum Deposit Rs. 10000/- Period - 12 months

RECURRING DEPOSIT SCHEME

(Minimum of Rs. 10/- and in Multiples of Rs. 10/-)

MONTHLY DEPOSIT	100	100	100	100	100	100
PERIOD (Months)	12	24	36	48	60	72
MATURITY VALUE	1310	2850	4650	6710	9050	11,580

SAVINGS DEPOSIT SCHEME 9%

	BUSINESS HOURS		WEEKLY HOLIDAY
	WEEK DAYS	SUNDAYS	
HEAD OFFICE Mylapore	9 am - 12.30 pm 2.00 pm - 4.30pm	9 am - 12.30 pm —	FRIDAY
BRANCH OFFICE Thiru-vanmiyur	9 am - 12.30 pm 2.00pm - 4.30 pm	9 am to 12.30pm —	TUESDAY

ஓர் அரசன் கோவில் கட்டிக் குடமுழுக்குக்கும் நாள் குறித்தான். முதல் நாள் இறைவன் அரசனுடைய கனவில் தோன்றி, 'நாளை நம்மால் நீ எழுப்பியுள்ள கோவிலுக்கு வர முடியாது, வேறு ஒருவருக்கு 'அப்பாயிண்ட்மெண்ட்' கொடுத்து விட்டேன், என்கிறார். யார் நம்மோடு போட்டிக்கு வந்த ஆள் என்று அரசன் கோபத்தோடு தேடி அலைந்தால், கிடைப்பது அப்பாவியான ஒரு சிவ பக்தர்தான். வட்டாரத்தில் கோவில் கட்டுமானப் பணிக்கான கவடே இல்லை. விசாரிக்கிறான்.

அந்த ஆசாமி கட்டினது மனத்தில் ஒரு கோவில். கட்டுமானங்களைவிடப் பரிசுத்தமான மனத்தில் எழுப்பியுள்ள கோவிலில் அன்று இறைவன் குடியேறுகிறான். அந்தச் சிவபக்தர்தான் பூசலார் நாயனார்.

வைஷ்ணவி தேவி கோவிலுக்குச் செல்ல நேர்ந்தபோது ஏனோ நமக்கு இந்த நிகழ்ச்சி நினைவில் வருகிறது. வடமாநிலம் காஷ்மீரத்து வைஷ்ணவியின் பெயரைச் சூடிக் கொண்டு அருள்பாலிக்கும் இந்த வைஷ்ணவி தேவி, கோவில் கொண்டுள்ள இடம் அமைதியான, அழகான, படு சுத்தமான வளாகம்! மாமரமும் புளியமரமும் செறிந்து பசுமை கொஞ்சுகிற தோட்டத்தின் நடுவில் சிறிய அளவிலான கோவில். இறைவனை நினைந்து வழிபடுகிற மனமே தூய்மையானதாக இருக்க வேண்டுமெனில் திருக்கோவில்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஓர் அற்புதமான எடுத்துக்காட்டு, தனிப்பட்டவர்கள் நடத்துகிற வைஷ்ணவி தேவியின் ஆலயம்!

அம்பத்தூர் - ஆவடிச் சாலையில், திருமுல்லைவாயில் ஊரைத் தாண்டியதும் இடப்புறம் ஒரு ஆலய வளைவு கண்களில் படவேண்டும். 'வைஷ்ணவி தேவி

வைஷ்ணவி தேவி:

நவராத்திரி நாயகி



★ பிரும்மாண்டமான நுழைவு வாயில்



* வைஷ்ணவி தேவி



* எழில் கொஞ்சும் ஆலய முகப்பு.

ஆலயம்' என்று ஆங்கில எழுத்துக்களில் முகவரி கிடைக்கும்.

உள்ளே கொஞ்சம் காலாற நடந்தால் அம்பிகையின் ஆலயம் இடப்புறம் வரும். மிக அற்புதமான செட்டிநாட்டுக் கதவு நிலை வேலைப்பாடுகளில் கொஞ்சம் மனம் பறிகொடுத்து விட்டுத்தான் கருவறையையே பார்க்கத் தோன்றும். அமைதியாக 'நின்ற திருக்கோல'த்தில் வைஷ்ணவி தேவி!

எதிரே, கருவறைக்கு வெளியே அற்புதமான வேலைப்பாட்டில் உருவான சிம்ம வாஹனம்.

பக்தர்கள், யாருடைய குறுக்கீடும் இன்றி அவர்கள் போக்கில் இந்த சிம்ம வாஹனத்தின் பக்கத்தில் அமர்ந்து லலிதா ஸஹஸ்ரநாமமோ இல்லை வேறு வழி பாட்டுப் பாடல்களோ பாடி மகிழ்ந்து கொண்டிருப்பதைக் காணலாம்.

அற்புதமான கலைப் பொருட்களைச் சேகரிப்பதில் ஆர்வம் கொண்டிருந்த பார்த்தசாரதி என்பவருக்கு, அம்பிகையின் உருவச் சிலையை யாரோ ஒரு வியாபாரி அன்பளிப்பாகத் தந்து விட்டுப் போனாராம். கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளுக்கு முன் (1946 இல்) ஒரு தீபாவளிப் பண்டிகைக்கு மூன்று நாட்களுக்கு முன்னால் நடந்தது இது. பார்த்தசாரதி, தம் நண்பர் ஒருவரின் ஆலோசனைப்படி, இந்த உருவச் சிலையைக் காட்சிப் பொருளாக ஆக்காமல் வழிபாட்டுப் பொருளாகவே ஆக்கிக் கொண்டார். அவருடைய இல்லத்திலேயே, அந்த தீபாவளியன்றே எளிமையான கட்டு மானத்தில் அம்பிகை எழுந்தருளினாள். உதவியவர் ராமனாத் கோயங்கா! குறைந்த பட்சம் வெள்ளிக் கிழமைகளிலாவது பூஜை செய்ய வேண்டும் என்றுதான் பெரியவர்கள் ஆலோசனை தந்தார்கள். நாளடைவில் வெள்ளிக் கிழமை பூஜைகளில் லலிதா சஹஸ்ரநாமம் சிறப்பிடம் பெற்றது. அது வரை அம்பிகைக்கு வைஷ்ணவி தேவி என்று பெயரில்லை.

வள்ளி மலை சச்சிதானந்த சுவாமிதான் தேவியை ''வைஷ்ணவி'' என்று குறிப்பிட்டவர். சென்னை வரும் போதெல்லாம் வள்ளிமலை சுவாமிகள் பார்த்தசாரதியின் இல்லம் வருவார். இந்த வைஷ்ணவியின் மீதும், பார்த்தசாரதியின் பக்தியின் மீதும் ஈடுபாடு கொண்ட சுவாமிகள் தாம் வழிபட்டு வந்த ஸ்ரீபொங்கி தேவியை இந்த வைஷ்ணவி விக்கிரஹத்தின் மீது ஆவாஹனம் செய்து விட்டார். (வள்ளியின் மறு பெயர்தான் பொங்கி என்பது.)

சில காலம் பார்த்தசாரதி இல்லத்திலேயே இருந்த வைஷ்ணவி தேவி, தற்போதைய ரம்மியமான இயற்கைச் சூழலுக்குக் குடி புகுந்தது 1954 இல் தான். அப்போது இந்த இடம் 'பாகோ பண்ணை' என்று வழங்கப்பட்டு வந்தது. வள்ளிமலை சுவாமிகளின் சீடர்கள் திருப்புகழ் முழங்கிய வாறு குமரி தீர்த்தம் என்ற சுனையிலிருந்து கொண்டுவந்த புனித நீரால் அபிஷேகம் செய்விக்கப்பட்டு வைஷ்ணவி தேவி இங்கு இடம் பிடித்துக் கொண்டாள்.

விநாயகர், முருகன், மாஹேஸ்வரி, நாராயணி, பிராஹ்மி என்றெல்லாம் கரு வறைப் புறைகளில் சிறிய அளவிலான


உருவச்சிலைகள் சூழ உள்ள இந்த வைஷ்ணவி தேவி, எப்போதும் இந்த வடிவத்திலேயே காட்சி தருவதில்லை! விசேஷ நாட்களில் இந்த அம்பிகை, ஸ்ரீராமனாக, கிருஷ்ணனாக, பரமேசுவரனாக, வள்ளி நாயகியாக, அன்னபூரணியாக, காயத்ரியாக, ஆண்டாளாக, காளியாக - என்று விதம்விதமான தோற்றங்களில் அருள் பாலிப்பது இந்த ஆலயத்தின் சிறப்பான ஓர் அம்சம். ஓர் அன்பர் அன்றைய அலங்காரத்திலிருந்த 'வேங்கடேசுவரப் பெருமாளை'ச் சேவித்து விட்டு நாச்சியார் சந்நிதி எங்கே என்று கேட்டார்!

வைஷ்ணவி தேவி ஆலயத்தின் தனிப்பட்ட சிறப்புகள் என்று அடுக்கிக் கொண்டே போக நிறைய இருக்கின்றன.

''இந்த ஆலயத்தில் தெய்வ பக்தியுள்ள இந்துக்களும் பிற மதத்தினரும் அனுமதிக்கப்படுகிறார்கள். ஜாதி மத இன வேற்றுமையோ ஆண் பெண் பேதமோ இன்றி அனைவரும் பூஜா காலங்களில் கலந்து கொள்ளலாம். அம்பிகையின் அருகில் சென்று பாதங்களில் மலர்களைச் சமர்ப்பித்துத் தரிசிக்கலாம்.

வெள்ளிக் கிழமைகளில் மட்டும் தனிப்பட்ட பக்தர்கள் பூஜைக்குப் பதிவு செய்து கொள்ளலாம். அதுவும், ஒருவருக்கு மட்டும்தான் அந்தப் பேறு என்கிற ஏற்பாடு. பூஜை செய்யும் பாக்கியம் பெறுகிறவர், 'டோல்கி' என்கிற சிறு பல்லக்கில் தேவியின் உற்சவ வடிவமான மீனாட்சி விக்கிரகத்தை வைத்து மும்முறை கருவறையை வலம் வருவார். பிறகு அம்பிகையின் வெகு அருகில் அமர்ந்து மலர்களையும் குங்குமத்தையும் எடுத்து அர்ச்சனை செய்வது மட்டும்தான் பக்தர்களின் பணி. மந்திர உச்சாடனங்கள் பிழைபடக் கூடாது என்பதற்காக அர்ச்சனை மந்திரங்களை ஆலயத்தின் அன்பர்களே சொல்வார்கள்.

நவராத்திரி விழாக் காலத்தில் ஸ்ரீசக்ர பூஜை சிறப்பிடம் பெறுகிறது. இந்த ஸ்ரீசக்ரமே மெய் சிலிர்க்கும் வரலாற்றுப் பின்னணியுடைய ஒன்று. இந்த ஸ்ரீசக்ரத்தை ஒரு தேவி உபாஸகர் பகவான் ரமணமகரிஷியிடம் சமர்ப்பித்தார். மகரிஷியும் அதைத் தமது திருக்கரங்களால் தொட்டு அருளி, அந்த உபாஸகரிடமே திருப்பித் தந்தார். அந்த ஸ்ரீசக்ரம் பிற்காலத்தில் பார்த்தசாரதியிடம் வந்து இப்போது வைஷ்ணவி தேவி ஆலயத்தில் உள்ளது. நவராத்திரி நாட்களில்



● சிம்மவாகனம்

ஐம்பது அறுபது பேர் அமர்ந்து இந்த ஸ்ரீசக்ரத்துக்குப் பூஜை செய்கிறார்கள். ஒவ்வொருவரும் பூஜைக்குரிய மலர்களுக்காக ஒரு ரூபாய் மட்டும் தந்தால் போதும். இப்படி தினமும் ஐந்து ஆறு ஆவர்த்திகள் பூஜை நடைபெறுகிறது.

அம்பிகையின் ஜன்ம நக்ஷத்திரம் பூரம். எனவே ஒவ்வொரு மாதமும் பூரத்தில் இங்கே சிறப்பான வழிபாடு. வெள்ளிக் கிழமைகள், அதுவும் பௌர்ணமி சேர்ந்து அமைகிற போது பக்தர்களின் எண்ணிக்கை கட்டுக்குள் அடங்காது.

தரிசனம் முடித்துக் கொண்டு திரும்புகையில் எதிர்ப்பட்ட ஓர் அன்பர் சொன்னது: ''மயிலாப்பூரிலிருந்து நேற்று வந்தேன். இங்கேயே இருக்கிறேன். மனம் நிம்மதியாகிறது. அதுவும் இங்கே அர்ச்சனை, பூஜை பண்ணுகிற போது மந்திரப் பிரயோகம் இருக்கே, அதைக் கண்டு கேட்டு ஆனந்தித்தாலே போதும்; வேறு ஏதும் தேவையிராது.''

- சுப்ர பாலன்

படங்கள் : கோபிநாத்

அம்பிகை படம் உதவி :

ஆலய நிர்வாகம்

யார் வேண்டுமானாலும் கோபப்படலாம். அது ரொம்ப எளிது. ஆனால் சரியான நபரிடம், சரியான அளவில், சரியான நேரத்தில், சரியான காரணத்திற்காக, சரியான வழியில் கோபப்படுவது எளிதல்ல.

- யாரோ

தகவல் : ப்ரியா

சாண்டில்யன்

பாண்டியன் மகள்

40. பாண்டிய அமைச்சர், பழகிய சிறை

இரண்டு இளவரசிகள் செல்கிறார்கள் என்று சாலையோரத்து மரங்கள் கவரி வீச, சில தம்மிடமிருந்த மலர்களையெல்லாம் உதிர்த்து ஆங்காங்கே நடைபாவாடை விரித்து வரவேற்பளிக்க, உறையூரிலிருந்து கிளம்பிய அந்த ரதம் கன வேகமாக மதுரையை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. அதிகம் காவலின்றி தங்களை அழைத்துக் கொண்டு செல்ல முற்பட்டதால் இரு இளவரசிகளுக்கும் ஏற்பட்ட ஐயம் அன்று பிற்பகலுக்குள் விலகியது. வழியில் எதிர்ப்பட்ட ஒவ்வொரு ஊரிலும் சோழரின் படைப் பிரிவுகள் தென்பட்டன. ஊரை அடுத்திருந்த பகுதிகளில் கூடாரங்களையும் வீரர்களின் நடமாட்டத்தையும் காண முடிந்தது. போகப் போக அந்தப் படைப் பிரிவுகளின் எண்ணிக்கை கூடிக் கொண்டே வருவதையும், அந்த படைச் சங்கிலிகளை இணைத்தால் பெரும் படை ஒன்று உருவாகி விடுமென்பதையும் அம்மங்கையும் கார்குழலியும் உணர்ந்ததால் பெரும் வியப்பையே அடைந்தனர். படைப் பிரிவுகள் ஒரே சீரான வேகத்தில் தெற்கு நோக்கி நகர்வதைக் கவனித்த கார்குழலி, அதைப் பற்றி அம்மங்கையிடம் கேட்கவும் செய்தாள்.



''வழியெங்கும் சோழப் படைப் பிரிவுகளிருப்பதைக் கவனித்தாயா?''

''ஆம், கவனித்தேன்.''

''சரி. இவரை இதற்கு முன் நீ அறிவாயா?''

''யாரை?''

''ரதம் செலுத்துபவரை.''

சற்று சிந்தித்த அம்மங்கை, ''இந்தப் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன். தந்தைக்கு மிகவும் வேண்டியவர் என்பது தெரியும். ஆனால் இதுவரை நேரில் கண்டதில்லை. இந்தப் பெயரைப் பயன்படுத்திக் கொண்டவரைத்தான் கண்டிருக்கிறேன்.'' என்றாள். அவள் முகத்தில் லேசான சிவப்பு பரவியது.

''வழியில் படைப்பிரிவுகளின் தலைவர்கள் இவருக்குக் காட்டிய அபரிமிதமான மரியாதையைக் கவனித்தாயா?'' - கார்குழலி மீண்டும் வினவினாள்.

''ஆம். கவனித்தேன்' அம்மங்கையின் குரல் சிந்தனையில் தோய்ந்திருந்தது.

இருவரும் தன்னைப் பற்றிப் பேசுவது அரைகுறையாகக் காதில் விழுந்தாலும் கவனியாதது போல் ரதத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான் ராஜ நாராயணன்.

''விண்ணுறவோங்கிய பல்படைப் புரிசை'' என்று மதுரைக் காஞ்சி வர்ணிக்கும் மதுரைக் கோட்டையின் பெரு மதில்கள் கண்களுக்குப் புலப்பட்டன. நல்ல அகலத்துடனும் ஆங்காங்கே பொறிகள் பல அமைக்கப்பட்ட மாடங்களுடனும் சதா மேலே உலவிய வீரர்களுடனும் காட்சியளித்தது கோட்டை மதில். முன்புறத்தில் வெட்டப் பட்டிருந்த அகழியில், நீரின் மேல் மட்டத்தில் வாளைப் பயங்கரமாகப்

பிளந்தபடி இருந்த முதலைகள் பார்வைக்குச் சற்று அச்சத்தையே விளைவித்தன. திடீரெனத் திரும்பி வாலால் பளீர் என்று நீரில் அறைந்த விதம் அகழியில் தப்பித் தவறி விழுந்தவர்கள் நேராக மோட்சத்தை அடைந்து விடலாமென்பதைத் தெளிவாக்கின.

ரதம் அகழியை அடுத்து வந்து நின்ற இரண்டாவது வினாடியில் இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்த கனமான மரப்பாலமொன்று பெரும் சப்தத்துடன் இறங்கியது. கோட்டையின் பெரும் கதவுகளும் மெல்ல மெல்லவே திறக்கப்பட்டன. தடதடவென்ற ஒலியுடன் பாலத்தைக் கடந்த ரதம், கோட்டையின் உட்புறத்தில் வந்து நின்றதும் கண்ணெதிரே விரிந்த காட்சி இரு இளவரசிகளையும் பிரமிக்க வைத்தது.

மதுரையிலிருந்த சோழ காவற்படை எதிரில் முழு போர் சன்னத்துடன் அணிவகுத்து நின்றிருந்தது. முகப்பில் பறந்த பெரும் புலிக் கொடி படபடத்து, அவர்களை வரவேற்றது.

கோட்டைக் கதவுகளைத் திறக்க ஏற்பட்ட தாமதம் அம்மங்கையின் சினத்தைக் கிளறியிருந்தது. திறந்த வாயில்களையும், சம்பிரதாயமான வரவேற்பையுமே அதிகமாகக் கண்டிருந்தவளுக்கு இந்த வரவேற்பு சினத்தை ஏற்படுத்தியது. ஆனால் அவள் கோபம் உள்ளே விரிந்த காட்சியைக் கண்டதும் வியப்பாக மாறிவிட்டிருந்தது.



ரதத்தை ஒருபுறமாக நிறுத்திய ராஜநாராயணன் ரதத்தை விட்டுக் குதித்து இறங்கினான். ரத சாரதியைக் கண்ட அந்த படைப்பிரிவின் தலைவன் அவசர அவசரமாக விரைந்து எதிரில் வந்து பரம அடக்கத்துடன் நின்றதைக் கண்ட அம்மங்கையும் கார்குழலியும் மேலும் திகைத்தனர். ராஜநாராயணன் படைப்பிரிவின் தலைவனுக்கு ஏதோ உத்தரவுகளும் பிறப்பித்துக் கொண்டிருந்தான்!

அடுத்த ஒரு நாழிகையில் அந்தப் படைப்பிரிவு, புழுதியைக் கிளப்பியபடி கோட்டை வாயிலினின்று வெளியேறியது. ரதங்களும் புரவிகளும் வீரர்களும் தரித்திருந்த ஆயுதங்கள் கண்களைப் பறித்தன. படைகள் முழுவதுமாக வெளியேறிய பின், ராஜ நாராயணன் அரண்மனையை நோக்கி மீண்டும் ரதத்தைச் செலுத்தினான்.

அரண்மனையின் படிகளிலேயே கோட்டைத்தலைவனும், பாண்டிய அமைச்சர் சோமேஸ்வர வர்மரும் நின்றிருந்தனர்.

ரதத்திலிருந்து இறங்கிய அம்மங்கையை வரவேற்ற அமைச்சரின் பார்வை

கார்குழலியைக் கண்டு ஒரு கணம் தடுமாறியது. உள்ளே அழைத்துச் சென்றவர், இருவரும் தூங்கி இளைப்பாற ஏற்பாடுகளைச் செய்தார். அனைத்திலும் அவசரமிருந்ததைக் கண்ட அம்மங்கை தங்கள் வருகையை அவர் சற்று முன்புதான் அறிந்திருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டாள்.

வாயிலிலேயே நின்றுவிட்ட ராஜ நாராயணனை அவர் அத்தனை உன்னிப்பாகக் கவனித்ததாகத் தெரியவில்லை. கோட்டைத் தலைவனுடன் பேசியபடியே மீண்டும் வாயிலை நோக்கி நடந்து கொண்டிருந்தான் அவன்.

தனித்து அரண்மனையின் அறையொன்றில் விடப்பட்ட இரு இளவரசிகளும் நீராடி, உணவருந்தியதும் அந்த அரண்மனையில் சென்றமுறை தாங்கள் வந்த போதிருந்த நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் கண்டனர். அரண்மனையெங்கும் உலவிய வீரர்களில் ஒருவன் கூட பாண்டிய வீரன் இல்லையென்பதையும் அனைவருமே சோழ வீரர்கள் என்பதையும் பணியாட்கள் கூட சோழ நாட்டைச் சார்ந்தவர்களென்பதையும் கவனித்தனர்.

அம்மங்கையின் சித்தம் ஏனோ அமைதியற்றுக் கிடந்தது. சாளரத்தின் வழியே வீசிய தென்றல் அவளுக்கு மன நிம்மதி அளிக்க முயன்று தோற்றது. கார்குழலியின் முகத்தில் உணவருந்திய பின்னும் பயணக் களைப்பு அதிகமாகத் தெரிந்ததைக் கவனித்த அம்மங்கை, அவளை ஓய்வெடுக்குமாறு கூறவே, அடுத்த அரை நாழிகையில் கார்குழலி உறங்கத் தொடங்கி விட்டாள். பஞ்சணையில் நிம்மதியாக உறங்கிய கார்குழலியைக் கண்ட அம்மங்கைக்குச் சற்றுப் பொறாமையாகக் கூட இருந்தது.

சாளரத்தை அடைந்தவள், வெகு கம்பீரமாக நின்ற மீனாட்சி ஆலயத்தில் தீபங்களைப் பார்த்தபடி சிந்தனையில் மூழ்கினாள். தான் வழியில் கண்ட படைப் பிரிவுகளும் மதுரையிலிருந்து கிளம்பிய படையும் தெற்கே செல்கின்றன என்பது புரிந்தது அவளுக்கு. இதைத் தவிர காலிங்கராயன் தலைமையில் ஒரு பிரிவு சேர நாட்டில் செயல்படுவதையும் அறிந்திருந்தாள் அவள். நாகையில் போர்க்கலங்கள் காத்து நிற்பதையும், அவை கொற்கை நோக்கிச் செல்லும் என்பதும் அவள் அறிந்தவை தான்.

அத்தனை படைப்பிரிவுகளையும் ஒருசேர இயக்குபவர் தனது தந்தைதான் என்பது பல்லவராயரும், காலிங்கராயனும், ஏன் விக்கிரமனும் கூட அவர் இயக்கும் ஆயுதங்கள்தாம் என்பது புரிந்ததும் அவள் மனத்தில் தந்தையைக் காணும் ஆவல் பிறந்தது.

குலோத்துங்கனைப் பற்றிய நினைவும் அவன் உருவமும் நினைவில் எழுந்ததும் அவள் மனம் ஒரு தெளிவைப் பெறத் தொடங்கியது. அந்த மகா வீரனின் நெடிய உருவமும், தெளிவாக சிக்கல்களை அலசும் திறமையும், நிதானமாக தர்க்கிக்கும் கூரிய அறிவும் அவள் மனத்தில் பெரும் துணிவையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தின. அது வரை ஏதேதோ சிந்தனையில் மூழ்கி கூம்பியிருந்த முகம், மலர் போல விகசிக்கத் தொடங்கியது.

போர்க்களத்து ரதத்தில் தங்களைப் புயல் வேகத்தில் மதுரைக்கு அழைத்து வந்த மனிதரின் நினைவும் வந்தது அவளுக்கு.

ஸ்ரீ கந்தசுவாமி

பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம்:1990
பதிவு அலுவலகம்:60, சாமிபண்டாரம் தெரு, சிந்தாதரிப்பேட்டை, சென்னை-600 002.
கிளை அலுவலகம்:36, ஜீனிஸ் ரோடு, சென்னை-600 015.

பிக்சட் டிபாசிட் திட்டம்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	●5 ஆண்டு
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

மாத வட்டிக்கான செக்குகள் முன்கூட்டியே கொடுக்கப்படும் உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது 90 மாதங்களில் 4 மடங்காகிறது.

காமதேனு மணி பேக் திட்டம்

வைப்புத்தொகை	முதல் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை	இரண்டாம் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை	மூன்றாம் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை
ரூ.6,320/-	ரூ.6,000/-	ரூ.6,000/-	ரூ.56,320/-
ரூ.12,640/-	ரூ.12,000/-	ரூ.12,000/-	ரூ.1,12,640/-
ரூ.25,280/-	ரூ.24,000/-	ரூ.24,000/-	ரூ.2,25,280/-
ரூ.50,560/-	ரூ.48,000/-	ரூ.48,000/-	ரூ.4,50,560/-

பொற்குவியல் திட்டம்

ரூ.100 மட்டுமே பிரதி மாதம் செலுத்தி 25 வருட முடிவில் ரூ.3,00,000 பெறுவீர்!

பென்ஷனர் நல்திட்டம்

வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்

ரூ.10,000/-மும் அதற்கு மேலும்	12 மாதங்கள்	வட்டி 19.5%
ரூ.10,000/-க்கு கீழ்		வட்டி 18.5%

ரெக்கரிங் டிபாசிட் திட்டம்

மாதம் ஒன்றுக்கு ரூ.25-ம் அதன் பெருக்கமும் பெற்றுக் கொள்ளப்படும்

மாதம்	12	24	36	48	60	72	80
ரூ.100	1,320	2,860	4,720	7,200	10,050	13,400	17,500

செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா. இதோ
ரூ.7500ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ.1,25,000 பெறலாம்
ரூ.9000 ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ.1,50,000 பெறலாம்
சேவிங்ஸ் கணக்குகள் மீது 10% வட்டி

கடன்	நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும். சென்னை மாநகரில் உள்ள கட்டிடங்கள் பேரிலும் வழங்கப்படும்	வட்டி விதம் ரூ.1.85

(Friday Weekly Holiday)
பங்குதாரர்களுக்கு மட்டும்
Business Hours
Week Days 9 A.M. - 12 Noon &
2.30 P.M. - 6.00 P.M.

சேர்மன் P. பாலசுப்பிரமணியம் B.Sc.
சீனியர் டிரஸ்டி
ஸ்ரீ கந்தகோட்டம்
சென்னை-3.

பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு

SURESH

அருள்வாக்கு



ஒருவர் பையனைப் பட்டணத்தில் படிக்க வைத்திருந்தார். அவன் பரீட்சைக்குப் பணம் கட்ட வேண்டியிருந்தது. அதுவும் மறுநாளே கட்ட வேண்டியிருந்தது. உடனே அப்பாவுக்கு, 'தந்தி மணியார்டரில் பணம் அனுப்பு' என்று எழுதினான். அப்பாவுக்குத் தந்தியும் மணியார்டரும் தனித் தனியாகத் தெரியும். பிள்ளையோ 'தந்தி மணியார்டர்' அனுப்பும்படி எழுதியிருந்தான். அப்பா தபாலாபீஸுக்குப் போனார். ரூபாயைக் கொடுத்துவிட்டுத் தந்தி மணியார்டர் பண்ண வேண்டும் என்றார். அவர், தபாலாபீஸ் குமாஸ்தா ரூபாயில் ஓட்டை பண்ணித் தந்திக் கம்பியில் கட்டி அனுப்புவார் என்று எண்ணினார். ஆனால் பணம் வாங்கிக் கொண்ட குமாஸ்தா, பணத்தை வாங்கிப் பெட்டியில் போட்டதையும், ஓட்டை பண்ணிக் கம்பியில் கோக்காமல் இருப்பதையும் பார்த்த அப்பாக்காரர், "என் பணம் இங்கேதானே இருக்கிறது? அதில் ஓட்டை ஒன்றும் போட்டு அனுப்பவில்லையே! அது எப்படிப் போய்ச் சேரும்?" என்று கேட்டார். "அது போய்ச் சேர்ந்துவிடும்" என்று மறுபடியும் குமாஸ்தா சொன்னார். 'கட்டுக் கடகட' என்று தந்தியும் அடித்தார். "ஏதோ லொட்டு லொட்டென்று சப்தம் பண்ணுகிறான். சேர்ந்து விடும் என்று சொல்லுகிறான். ரூபாய் இங்கேயே இருக்கிறது. லொட்டு லொட்டென்று கட்டையை இங்கே அடித்தால் அங்கே எப்படிப் போய்ச் சேரும்?" என்று அப்பாவுக்குச் சந்தேகம் வந்து விட்டது.

ஆனாலும் பணம் போய்ச் சேர்ந்து விட்டது.

தர்ப்பணம் முதலியன பண்ணுவதும் அந்த மாதிரியே ஆகும். நாம் எதைக் கொடுத்தாலும் அதற்கான சட்டப்படி கொடுக்க வேண்டும். சாஸ்திரம் என்கிற சட்டம் விதித்தபடி நாம் கொடுப்பதைத் தெரிந்து கொள்ளுகிற பிதுர் தேவதைகள் அது யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குச் சேர்த்து விடுவார்கள்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

ராஜ நாராயணன் என்றும், உண்மையான சமுத்திரபந்தன் என்றும் விக்கிரமனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட அந்த சாரதியை நயமாக விசாரித்தால் தந்தையின் இருப்பிடமும், ஏன் அரையனின் இருப்பிடமும் கூடத் தெரிய வர வாய்ப்புக்கள் உண்டு என்ற எண்ணம் தோன்றியது இளவரசிக்கு.

எண்ணத்தைச் செயலாக்கும் நோக்கில் வாயிலை நோக்கித் திரும்பியவள், அப்பொழுதுதான் பஞ்சணையிலிருந்து எழுந்து வந்த கார்குழலியின் மீது பலமாக மோதிக் கொண்டாள். கார்குழலியின் வியப்பு நிறைந்த விழிகள் அம்மங்கையை ஏறிட்டன.

"இளவரசிக்கு என்ன இத்தனை வேகம்?"

அதற்குப் பதில் கூறாது, வாயிலிலிருந்த பணிப் பெண்ணைக் கை தட்டி அழைத்த அம்மங்கை, "அமைச்சரை நான் விளித்ததாகக் கூறிவிட்டு வா" என்றாள்.

சற்று நேரத்தில் உள்ளே நுழைந்த அமைச்சர் அம்மங்கையையும் கார்குழலியையும் வணங்கி நின்றார்.

"அமைச்சரே! எங்களுடன் வந்த சாரதி எங்கே?" என்று கேட்டாள் அம்மங்கை.

அமைச்சரின் முகத்தில் லேசான குழப்பம் படர்ந்தது.

"இளவரசி, உங்களை அழைத்துக் கொண்டு நான் அரண்மனையின் உள்ளே வந்தபின் அவரைக் காணவேயில்லை" என்றார் அவர்.

"அப்படியா?"

"ஆம் இளவரசி, அவர் கோட்டைத் தலைவனுடன் வாயிலை நோக்கிச் சென்றதைக் கவனித்தேன்."

"சரி அமைச்சரே, ஒரு வீரனை அனுப்பி நான் அவரைக் காணவிரும்புவதாகத் தெரிவியுங்கள்."

"உத்தரவு" என்று வணங்கிய அமைச்சர் சற்றுத் தயங்கினார். அவர் தயக்கத்தைக் கண்ட அம்மங்கை, "ஏன் தயங்குகிறீர் அமைச்சரே?" என்றாள்.

"அவர் பெயர் கூட எனக்குத் தெரியாது இளவரசி. வீரனிடம் யாரை அழைத்து வர வேண்டுமென்று கூறுவது?"

"அவர் பெயர் சமுத்திர பந்தன்."

அந்தப் பெயர் அமைச்சருக்குத் திகைப்பை அளித்திருக்க வேண்டும். சற்று நேரம் மிரள மிரள விழித்தவர், வாயிலை நோக்கித் தயங்கியபடியே நடந்தார்.

அவர் விழித்ததையும் குழப்பத்துடன் வெளியேறியதையும் கவனித்த இரண்டு இளவரசிகளும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

மாலையில் சென்ற அமைச்சர் இரவு

முதல் ஜாமம் முடியும் வரை திரும்ப வில்லை. சமுத்திர பந்தனும் வரவில்லை.

சமுத்திர பந்தன் என்ற பெயரில் மூடு மந்திரம் ஏதோ இருக்க வேண்டும் என்று எண்ணினாள் அம்மங்கை.

தன் எண்ணத்தைக் கார்குழலியிடம் பகிர்ந்து கொள்ளவும் செய்தாள் அம்மங்கை. அப்போது அவர்கள் உணவை முடித்துக் கொண்டு மேல் மாடத்தில் அமர்ந்து கொண்டிருந்தனர்.

''கார்குழலி, சமுத்திர பந்தன் என்ற பெயரைக் கேட்டதும் அமைச்சர் விழித்த தைக் கவனித்தாயா?''

''ஆம். கவனித்தேன்.''

''அந்தப் பெயரில் ஏதோ மர்மமிருக்க வேண்டும்.'' என்ற அம்மங்கை சொற்களை முடிக்குமுன் மேன் மாடத்தின் படிகளில் யாரோ திடமான காலடியோசையுடன் ஏறி வரும் ஓசை கேட்டது.

படிகளில் ஏறி வந்தவனைக் கண்ட அம்மங்கையும் கார்குழலியும் திகைத்தனர். உறையூர் வைகுந்தன் ஆலய வாசலில் திடீ ரென்று தோன்றி, உண்மையான சமுத்திர பந்தன் வந்திருப்பதாகக் கூறிய ஜெயந்தன், திடீரென்று மதுரை அரண்மனையில் மறு படியும் தோன்றுவான் என எண்ணிக் கூடப் பார்க்காத இளவரசி பிரமித்தாள். இவன் என்ன யட்சனா? எப்படி இத்தனை விரை வில் இங்கு வந்தான்? என்று வியந்தாள்.

வழக்கமான விஷமப் புன்னகையுடன் வணங்கியவனை அம்மங்கையின் வியப்பு நிறைந்த விழிகள் ஏறிட்டு நோக்கின. அவன் கூறிய செய்தியோ அவள் வியப்பை இன் னும் அதிகரித்தது.

''இளவரசியார் பாண்டிய அமைச்சரை அழைத்ததாகத் தெரிகிறது...''

''ஆம் ஜெயந்தா.''

''மன்னிக்க வேண்டும். அவர் வரக்கூடிய நிலையில் இல்லை?''

''நான் அழைப்பதாகக் கூறினாலும் வர மாட்டாரா?''

''வர மாட்டார்.''

''ஏன்?''


''அவர் தற்போது சிறையில் இருக்கி றார்!''

ஜெயந்தன் கூறிய பதில் அவர்களை இருக்கையை விட்டு எழ வைத்தது.

''என்ன? சிறையிலிருக்கிறாரா? யார் அவரைச் சிறையில் அடைத்தது?'' அம்மங் கையின் குரலில் அனல் பறந்தது.

''அவரைச் சிறையிலடைத்தது சமுத்திர பந்தன்.'' ஜெயந்தனது பதில் பரம நிதான மாக வந்தது.

(தொடரும்)



புதுக் கவிதை

ஒலிக்கைகள் மிகநீட்டி
ஒருவனையே தொழுதபடி
வெளிச்சமுகம் காட்டி, அதோ,
வருகின்ற சூரியன்தான் -
பனிச்சென்று தெரிகின்ற
புதுக்கவிதை! உலகத்தின்
விழிகளெல்லாம் முதன் முதலாய்
வாசித்த புதுக்கவிதை!

யார் தடுத்தும் கேளாமல்
அவன் பெயரை உறவாக்கி
வேர்வையிலே நனைந்தாலும்
மேற்கில் மறையும் வரை -
பார்த்துக்கொண் டே படிப்பான்!
படித்துக் கொண்டே பார்ப்பான்!
சூரியகாந்திக்(கு) அந்தச்
சூரியனே புதுக்கவிதை!


கரைக்குவந்து வந்து வந்துக்
கடலலைகள் எழுதுகிற
நுரைக் கவிதை ஒவ்வொன்றும்
விரைந்தோடும் நண்டுகளால்
வார்த்தையெல்லாம் அழிந்தாலும்
இரைந்து வந்து மீண்டும் மீண்டும்
எழுதிவிடும் புதுக்கவிதை!

பாதம் முதல் கூந்தல்வரை
பார்க்கின்ற பரவசத்தில்
வேதத்தைப் படிப்பது போல்
வரிவரியாய்ப் படிக்கின்ற
காதலனுக் கெப்போதும்
காதலிதான் புதுக்கவிதை!
சாதல்தீ அழித்தாலும்
தாஜ்மகலாய் எழுங்கவிதை!

காந்திஜிக்குச் சாகும்வரை
சுதந்திரமே புதுக்கவிதை!
காமராசர் கண்களுக்குக்
கர்மந்தான் புதுக்கவிதை!
சாந்தமுள்ள மனத்துக்குச்
சத்தியந்தான் புதுக்கவிதை!
சாதிக்கும் கரங்களுக்குச்
சரித்திரந்தான் புதுக்கவிதை!

- நெஞ்சத்தரசு

போட்டிக் கதை - 8



காலை யிலிருந்தே மூர்த்தியின் மனத்தில் சந்தோஷம் ஊற்றெடுத்துக் கொண்டிருந்தது.

'ஞாயிற்றுக் கிழமை ஸ்பெஷல்' தூக்கத்தையும் தியாகம் செய்து விட்டு அதிகாலையிலேயே எழுந்து விட்டான். நல்ல காப்பி சாப்பிட வேண்டும் போலிருந்ததால், கார்த்திகா எழுந்திருப்பதற்குள் தானே போட்டுக் கொண்டான். தொட்டியில் மொட்டவிழ்க்க யோசித்துக் கொண்டிருந்த ரோஜாவை ரசித்தான். பேப்பரில் விளம்பரங்களைக் கூட விடாமல் படித்தான்.


இந்த உற்சாக உற்சவத்துக்குக் காரணம் பாகீரதி.

'இப்படி ஒரு மனைவி கிடைக்க நீங்க கொடுத்து வச்சிருக்கணும் பாஸ்கர்' என்று ஆயிரம் தடவை பொறாமையுடன் மூர்த்தியைச் சொல்ல வைத்த பாகீரதி.

'இப்படி ஒரு மனைவி எனக்குக் கிடைத்திருந்தால்....' என்று அவனை ஏங்க வைத்த பாகீரதி.

இன்று மாலை மூர்த்தி பாகீரதியைப் பார்க்கப் போகிறான். 'பார்க்க' என்பதை விட 'தரிசிக்க' என்பது பொருத்தமாக இருக்கும். அந்த அளவு அவன் மனத்தில் ஒரு உயர்ந்த பீடத்தில் இருந்தாள் பாகீரதி.

இதுவரை அவன் அவளை நேரில் சந்தித்ததில்லை. இன்று மாலை 'இலக்கியச் சிந்தனை'க் கூட்டத்தில்தான் சந்திக்க இருக்கிறான்.



பாகீரதி எழுதிய கதை இந்த மாதத்தின் சிறந்த சிறுகதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இன்று மாலை பாராட்டு விழா. விழாவுக்கு வருமாறு பாகீரதியின் கணவன் பாஸ்கர், நான்கு நாட்களுக்கு முன்னரே மோகனை அழைத்திருந்தான்.

பாஸ்கர் மோகனுடன் கல்லூரியில் பணிபுரிகிறான். சமீபத்தில்தான் கோவையிலிருந்து மாற்றலாகி வந்திருந்தான்.

ஷேவ் பண்ணி முடித்து லோஷனை முகத்தில் தடவிய போது இதமாக இருந்தது.

காதோரம் எட்டிப் பார்த்த நரையைக் கத்திரிக்கு இரையாக்கினான் மூர்த்தி. மீசையை 'ட்ரிம்' செய்ய முழுசாக ஐந்து நிமிடம் ஆயிற்று.

கார்த்திகா, வீடியோவில் படம் பார்த்துக் கொண்டிருந்தாள் 'இரு கோடுகள்'!

மூர்த்தியைப் பொறுத்த வரை கார்த்திகாவும் பாகீரதியும் கூட 'இரு கோடுகள்' தான்.

கார்த்திகாவைச் 'சின்னக் கோடு' ஆக்கி விட்ட 'பெரிய கோடு' பாகீரதி.

இருவருக்கும்தான் எத்தனை வித்தியாசம்! வித்தியாசம் டீ.வி பார்ப்பதில் கூட.

பாகீரதிக்கு டீ.வி பார்க்க நேரமில்லை - அதாவது, நேரம் கிடைக்கவில்லை. வேறு உபயோகமான வேலை எத்தனையோ இருப்பதால்.

கார்த்திகாவுக்கு டீ.வி பார்க்க நேரமில்லை - அதாவது ஒரு நேரம் என்பதே இல்லை. எந்நேரமும் டீ.விதான். வேறு உபயோகமான வேலை எதுவும் இல்லாததால்.

படத்தில் நாகேஷ் காமெடியை ரசித்துச் சிரித்துக் கொண்டிருந்தாள் கார்த்திகா. படம் பார்க்க ஆரம்பித்து விட்டால் உலகத்தையே மறந்து விடுவாள். அவளைப் பொறுத்த வரை உலகம் உருண்டையானது அல்ல. செவ்வக வடிவமானது. செவ்வக வடிவச் 'சின்னத் திரை' தான் அவள் உலகம்.



கல்யாணமான முதல் மாதம் வீடியோ லைப்ரரியிலிருந்து இரு நூறு ரூபாய்க்கு பில் வந்தபோது அதிர்ந்து போனான் மூர்த்தி.

''என்ன கார்த்திகா இது? வீடியோ லைப்ரரி பில் இருநூறு ரூபாயா?'' என்று கேட்டான் கோபத்தை அடக்கிக் கொண்டு.

''வி.சி. ஆரும் கலர் டீ.வியும் சீர் வரிசையா வேணும்னு கேட்டு வாங்கி னீங்களே, அது ஹாலை அலங்கரிக்கவும் வேடிக்கை பார்க்கவும்தானா?'' என்று சிரித்தபடி கேட்டு அவன் வாயை அடைத்தாள் கார்த்திகா. ''எனக்கு வீடியோன்னா ரொம்ப இஷ்டம். உங்களுக்குப் பத்திரிகைகள் போல.''

மூர்த்தி எதுவும் பேசவில்லை. அவனுக்கு இந்த வி.சி.ஆர் போன்ற ஆடம்பரங்களில் விருப்பம் இல்லை. அவனுடைய ஆர்வம் இலக்கியத்தில், கவியரங்கத்தில், பட்டி மன்றத்தில்.....

இவையெல்லாம் அவன் பெற்றோரின் ஆசைகள். அவர்களுக்கு இந்த ஆடம்பரப் பொருள்கள்தான் பெருமையின் அளவுகோல்.

சின்ன வயசிலிருந்தே பெற்றோர் கிழித்த கோட்டைத் தாண்டியறியாதவன் மூர்த்தி. அது சின்ன விஷயமாக இருந்தாலும் சரி, பெரிய விஷயமாக இருந்தாலும் சரி.

கிரிக்கெட் விளையாட நண்பர்கள் கூப்பிடுவார்கள். ஆசையாகப் புறப்படுவான் மூர்த்தி.

'மழை வரும் போலிருக்கு மூர்த்தி. விளையாடப் போக வேண்டாம்.'

'சரிம்மா... நீங்க போங்கடா. நான் வரலை.'

'காலேஜ் நாலு மணிக்கு முடியுதா? நீ ஐந்து மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துடணும்'.

நாலே முக்காலுக்கெல்லாம் அவன் வீட்டில் ஆஜர்.

எம்.எஸ்ஸி முடித்த போது பம்பாயில் ஒரு மருந்து கம்பெனியில் நல்ல வேலை கிடைத்தது மூர்த்திக்கு. குவாலிடி கன்ட்ரோல் ஆபீஸராக.

'வடக்கே எல்லாம் எதுக்குப்பா? மெட்ராஸில் வேலை கிடைக்காதா?'

அம்மா சொல்லி முடித்த போது ஆர்டரைக் கிழித்துப் போட்டிருந்தான் மூர்த்தி.

'இந்தக் காலத்துப் பசங்கல்லாம் எங்கே நம்ம பேச்சைக் கேட்கறாங்க?' என்று ஆரம்பித்து மற்ற பெண்கள் புலம்பும்போது, 'எங்க மூர்த்தியும் இந்தக் காலத்துப் புள்ளை தான். நாங்க கிழிச்ச கோட்டைத் தாண்ட மாட்டான்' என்று அம்மா கூறுவதைக் கேட்க மூர்த்திக்கு மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கும்.

ஓடிகோலின் வாசனையையும் மீறி ஏதோ ஒரு வாசனை மூக்கை நெருடிற்று.

''கார்த்திகா, ஏதோ தீயற வாசனை வருது பார்'' என்றான் மூர்த்தி.

கார்த்திகா எழுந்து சமையலறைக்குப் போனாள்.

''சாம்பார் கொஞ்சம் தீஞ்சு போச்சு.''

'தீஞ்சால் என்ன? பெரிய நளபாகமா கெட்டுப் போய் விட்டது' என்று நினைத்துக் கொண்டான் மூர்த்தி.

கார்த்திகாவின் சமையல் மீது அந்த அளவு வெறுப்பு அவனுக்கு. எப்பொழுதாவது அவளுக்குச் சமைக்க முடியாமல் போனால் ஏக சந்தோஷம் ஏற்படும். ஓட்டலில் நல்ல சாப்பாடு சாப்பிடலாமே.

'சாம்பாரில் கொஞ்சம் உப்பு அதிகம். ரசத்தில் புளிப்பு குறைச்சிருக்கலாம். சாதத்தை இன்னும் ரெண்டு நிமிஷம் முன்னால் இறக்கியிருக்கலாம்....'

'சமையலில் எல்லாம் இருக்கு. ஒண்ணே ஒண்ணுதான் இல்லை.... ருசி'.

'வாயில் வைக்க வழங்கலை.'

- உற்சாகப்படுத்தி, கிண்டலடித்து, திட்டி.... என்னென்னவோ செய்து பார்த்து விட்டான் மூர்த்தி. கார்த்திகாவுக்கு சமையலில் மையல் வரவே இல்லை.

ஒரு நாள் மத்தியானம் வழக்கமான தயிர் சாதமும் எடுத்துக் கொண்டு

போகாமல், கான்டீனுக்குப் புறப்பட்ட போது, "வெயில் கொளுத்துதே. கான்டீனுக்கு ஏன் போறீங்க? வாங்க என்னோடு சாப்பிடலாம். நெறைய இருக்கு" என்று அழைத்தான் பாஸ்கர். காரியரில் முழுச் சாப்பாடு வரும் அவனுக்கு.

செத்துப் போன நாவின் சுவையரும்புகள் திடீரென்று உயிர் பெற்றெழுந்து நடனமாடுவது போல் உணர்ந்தான் மூர்த்தி.

சமையல் என்றால் அது சமையல். ருசி என்றால் அது ருசி. கத்திரிக்காயைக் கூட இத்தனை ருசியாக சமைக்க முடியுமா?

"சமையல் ரொம்பப் பிரமாதம். உபசாரத்துக்காகச் சொல்லலை."

"தெரியும். பாரிஜாதிக்கு சமையலில் ரொம்ப ஆர்வம். புதுசு புதுசா ஏதாவது சமைப்பா. கோயமுத்தூர்ல இருக்கும்போது லேடீஸ் கிளப் மெம்பர்களுக்கு சமையல் கிளாஸ் நடத்துவான்னா பார்த்துக்கங்களேன்."

"நீங்க கொடுத்து வச்சவர் பாஸ்கர்" என்று மூர்த்தியின் வாய் சொல்ல, 'இது போல் ஒரு மனைவி எனக்குக் கிடைத்திருந்தால்...' என்று மனது நினைத்துக் கொண்டது - முதன் முதலாக.

விளம்பரங்களில் வருவது போல் தினமும் பளபளக்கும் ஷூ அணிந்து வருவான் பாஸ்கர்.

"எப்படி உங்களால் பொறுமையாக தினமும் பாலீஷ் பண்ண முடிகிறது?" ஆச்சரியத்துடன் கேட்டான் மூர்த்தி.

"நான் மகா சோம்பேறி. எல்லாம் பாரிஜாதிதான். எல்லாமே 'பளிச்'னு இருக்கணும் அவளுக்கு. தூசி அப்பழுக்குக் கூடாது. என் சட்டை, பாண்ட்டைப் பாருங்களேன். தினமும் துவைச்சு நீட்டா அயர்ன் பண்ணிடுவா."

ஒட்டடை பற்றியோ, டேபிள், பீரோ, டி.வி. மீது படியும் தூசு பற்றியோ, முகம் பார்க்கும் கண்ணாடியில் படியும் அழுக்கு பற்றியோ கூடத் துளியும் கவலைப்படாத

அவமான அறிக்கை!

பழனி, ராணிப்பேட்டை தேர்தல்கள் முடிந்து, வெற்றி பெற்றவர்கள் ஜெய விழா நடத்த, தோல்வி கண்டவர்கள் அதற்கான காரணங்களைத் தேடிக் கண்டுபிடித்துக் களிம்பாக்கிக் காயங்களுக்குத் தடவி வருகிறார்கள். இனி பி.ஜே.பி. ஆண்ட வடமாநிலங்களில் அடுத்த இடைத் தேர்தல் தொடங்கும் வரை சற்றே அரசியல் சூடு தணிய, வேறு திசைகளிலும் கவனம் செலுத்தலாம். அப்படிப் பார்க்கும் போது ஐ.நா. சபையின் ஓர் அங்கமான யூனிசெஃப் (United Nations Children's Emergency Fund) வெளியிட்டுள்ள ஓர் அறிக்கை அதிர்ச்சியை அளிக்கிறது. அறிக்கையின் ஒரு வாக்கியமே போதும் நம்மை வெட்கித் தலைகுனியச் செய்வதற்கு :

"படிப்பறிவற்றவர்களை உற்பத்தி செய்வதில் உலகிலேயே இந்தியாதான் முதலிடம் வகிக்கிறது! இந்த நிலை தொடருமானால் கி.பி. 2000ம் ஆண்டில் உலக முழுவதற்குமான மொத்த படிப்பறிவற்றவர்களில் சரி பாதிப் பேர் இந்தியாவில்தான் இருப்பார்கள்!"

சுதந்திரம் பெற்று 46 ஆண்டுகளுக்குப் பிறகு எப்பேர்ப்பட்ட சர்ட்டிஃபிகேட் கிடைத்திருக்கிறது, பாருங்கள்! நமது தேசம் குடியரசான போது அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்கி நிறைவேற்றினோம். அது சொல்கிறது : "அடுத்த பத்தாண்டுகளுக்குள், பதினான்கு வயது வரையிலான எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசமாகவும் கட்டாயமாகவும் கல்வி கற்பிக்க அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும்."

பல பத்தாண்டுகள் சென்று விட்டன. முயற்சி இன்றும் நடக்கிறது; வெற்றிதான் கிட்டவில்லை! யூனிசெஃப் அறிக்கை காரணத்தையும் சுட்டிக்காட்டுகிறது : "பள்ளியில் சேர்க்கப்படும் குழந்தைகளின் 52 சதவிகிதத்தினர்தான் ஐந்தாண்டு தொடக்க நிலைப் படிப்பை முடிக்கிறார்கள். மற்றவர்கள் ஓரிரு ஆண்டுகளிலேயே பள்ளிக்குப் போவதை நிறுத்தி விடுகிறார்கள். திரும்பவும் திரட்சரகுட்டியாகவே மாறுகிறார்கள். தொடக்க நிலைப் படிப்பை முடித்தவர்களிலும் கூட ஏராளமான பேர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள்; காரணம் கல்வி போதனையின் தரம் அவ்வளவு மோசமாக உள்ளது!"

இந்தப் பரிதாப நிலையை அடிக்கோடிடும் அறிக்கை, இன்னொரு முக்கியமான விஷயத்தையும் கூறுகிறது : "கல்வி அளிப்பதில் இந்தியா வெற்றி பெறவில்லையென்றால் அதன் பல்வேறு சமுதாய நலத் திட்டங்களும் வெற்றி பெற முடியாது!" உதாரணமாக குடும்பக்

கார்த்திகாவின் நினைவு எழுந்ததை மூர்த்தியால் தவிர்க்க முடியவில்லை.

''நீங்க கொடுத்து வச்சவர் பாஸ்கர்'' என்றான் மனதார. ''பாகீரதி போல் ஒரு மனைவி கிடைத்திருந்தால்...'

'பெரிய கோடு' மேலும் உயர, 'சின்னக் கோடு' குறுகிற்று.

விதம் விதமாக எம்ப்ராய்டரி செய்யப்பட்ட கைக் குட்டைகளை பாஸ்கர் எடுத்து வருவதைக் காணும் போது சட்டைக்கு பட்டன் தைக்கத் தெரியாத கார்த்திகாவை நினைத்து எரிச்சல் கொள்வான் மூர்த்தி.

கோடுகளின் உயரங்கள் வேறுபடும்.

ஒரு நாள் பால் பாயசம் கொண்டு வந்தான் பாஸ்கர்.

''என்ன விசேஷம்? பால் பாயசம் கொண்டு வந்திருக்கீங்க?''

''பாகீரதி எம்.காம் பாஸ் பண்ணியிருக்கா. கரஸ்பாண்டன்ஸ்ல. அதோடு அவளுக்கு பாங்கில் வேலையும் கிடைச்சிருக்கு.''

''வெரி குட். இனி இரட்டை வருமானமா? கொடுத்து வச்சவர் சார் நீங்க'' என்று பாராட்டும் போதே 'இனிமேல் பாஸ்கருக்கும் தயிர் சாதம்தான். இனிமேல் ஷூ பாலீஷாவது இன்னொண்ணாவது' என்றெல்லாம் நினைத்துக் கொண்டான் மூர்த்தி.

அவன் கணிப்பு தவறானது என்று சீக்கிரமே புரிந்தது.

''வேலைக்கும் போய்க் கொண்டு எப்படி உங்கள் மனைவியால் இதெல்லாம் செய்ய முடியுது பாஸ்கர்?''


''நான் கூடச் சொல்லிப் பார்த்தேன். 'ரொம்பச் சிரமப்பட வேண்டாம். ஒய்வெடுத்துக்கோ'ன்னு. அதுக்கு பாகீரதி என்ன சொல்றா தெரியுமா? 'ஒய்வுங்கறது சும்மா உட்கார்ந்திருக்கறதில்லை. ஒரு வேலை சலிக்கப் போச்சுன்னா அதை விட்டுட்டு வேற வேலை செய்யறதுதான் ஒய்வு'ன்றா.''

''ஒண்டர்புல். நீங்க கொடுத்து வச்சவர்.''

கட்டுப்பாடு திட்டத்துக்குக் கோடிக்கணக்கில் செலவாகிறது. சிறந்த கல்வி அளிக்கப்படாத போது இந்தப் பணமெல்லாம் வீண் விரயமாகத்தான் போகிறது. திட்டம் வெற்றி பெற வாய்ப்பில்லை. "சூழாலை மூடாமல் தரை ஈரத்தைத் துடைத்தெடுக்க முடியாது" என்கிறது அறிக்கை. இதைவிட அழகாக யார் எடுத்துச் சொல்ல இயலும்?

இதற்கு மறுபுறமாக சிறந்த கல்வி அளிப்பதன் மூலம் பல்வேறு திட்டங்களுக்குச் செலவிடப்படும் பணத்தை மிச்சப்படுத்தலாம். தேசிய ஒருமைப்பாடு, சுற்றுச்சூழல் பராமரிப்பு, தேக ஆரோக்கியம் போன்ற பல அம்சங்களுக்குச் செலவிடப்படும் தொகை கணிசமாகக் குறையும்.

"நல்ல கல்வி வழங்கப்படாத வரை ஏழை ஏழையாகவேதான் இருப்பான்; அவன் வாழ்க்கைத் தரமோ ஆரோக்கியமோ உயரவே செய்யாது" என்கிறது யூனிசெஃப் அறிக்கை.



நமது தலைவர்கள் அற்பத்தனமான அரசியல் போட்டிகளில் இறங்கி, மக்களிடையே வேற்றுமைகளை வளர்ப்பதற்குப் பதில், அனைவருக்கும் தரமான கல்வி என்ற ஓர் அம்சத்தில் கைகோத்துச் செயல்பட்டாலன்றி தேசம் முன்னேறாது; எத்தனை புதிய பொருளாதாரத் திட்டங்களைக் கொணர்ந்து, எத்தனை கோடி கடன் வாங்கிச் செலவு செய்தாலும் இங்கு சாமானியன் நிலை உயராது.

தரமான கல்வியே தாரக மந்திரம் – இதைத் தலைவர்கள் புரிந்து கொள்வது எப்போது?

– குமரன்

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல் 'பெரிய கோடு' வானவில்லாக உயர்ந்தது போன வாரம்தான்.

''பாகீரதி எழுதின கதையை இந்த மாசம் சிறந்த கதையா 'இலக்கியச் சிந்தனை'யில் தேர்ந்தெடுத்திருக்காங்க'' என்று பாஸ்கர் சொன்ன போது மூர்த்திக்கு ஏற்பட்ட வியப்புக்கு அளவே இல்லை.

அவனுக்குக் கதை, கவிதை இதிலெல்லாம் மகா ஆர்வம்.

''கதை கூட எழுதுவாங்களா?''

''ம்... 'ரதி'ங்கற பேர்ல எழுதறது இவதான்.''

மூர்த்தி மிக அதிகமாக வியந்தான். 'ரதியின் கதைகளைப் படித்து ரசித்திருக்கிறான். அந்த அழகான நடையை வியந்திருக்கிறான்.

''மனசார சொல்றேன் பாஸ்கர். உங்களைப் பார்க்க எனக்குப் பொறாமையா இருக்கு. இப்படி ஒரு மனைவி கிடைக்க நீங்க ரொம்ப கொடுத்து வச்சிருக்கணும்.''

'பாகீரதி போல் ஒரு மனைவி எனக்குக் கிடைத்திருந்தால்... எதுக்கும் கொடுத்து வச்சிருக்கணும்' ஏக்கப் பெருமூச்சு எழுந்தது மூர்த்தியிடம்.

'இலக்கியச் சிந்தனை'க் கூட்டத்துக்குப் புறப்பட ஆயத்தமானான் மூர்த்தி. கூட்டம் ஆறு மணிக்கு. இப்பொழுதே கிளம்பினால்தான் சரியாக இருக்கும்.

பீரோவிலிருந்து சட்டையை எடுத்த போதுதான் பல் விழுந்த சிறுவன் வாயாக இரண்டு பட்டன்கள் இல்லாமலிருப்பது தெரிந்தது. நல்ல வேளையாக ஊசியும் நூலும் இருந்தன. அவசரம் அவசரமாகத் தைத்துக் கொண்டான்.

கார்த்திகா வீடியோவில் படம் பார்த்துக் கொண்டிருந்தாள். - 'எதிர் பாராதது'.

பஸ்ஸில் போகும் போது பாகீரதியின் உருவத்தைக் கற்பனை செய்து பார்க்க முயன்றான் மூர்த்தி.

'அழகான முகம். அடக்கமான தோற்றம். மிகுந்த புத்திசாலித்தனத்தைப் பிரதிபலிக்கும் கண்கள். மாறாத புன்னகை....'

ஏதோ ஊர்வலம் குறுக்கிட்டதால் டிராஃபிக் ஜாம் ஆகி விட்டது.

ஒரு வழியாக ஊர்ந்து போய்ச் சேர்ந்த போது, கதையைத் தேர்வு செய்தவர் முடிக்கும் தறுவாயில் இருந்தார்.

''....'ரதி' எழுதிய இந்தக் கதையை இந்த மாதத்தின் சிறந்த சிறுகதையாகத் தேர்ந்தெடுப்பதில் நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.''

அவசரமாகப் போய் நின்று மேடையைப் பார்த்தான் மூர்த்தி.

மிக அடக்கத்துடன் வந்து பரிசைப் பெற்றுக் கொண்டாள் பாகீரதி.

'ரதி' என்பது காரணப் பெயர் என்று நிரூபிப்பது போலிருந்தது அவள் தோற்றம்.

பாகீரதியின் முகத்தைப் பார்த்த மூர்த்தி திகைத்துப் போய் சிலையாக அசைவற்று நின்றான். அவன் மனத்தில் முட்டி மோதிய உணர்ச்சிகளை விவரிக்கவே முடியாது.

இவளா?....

கோடு கோடாக இதயம் கிழிபடுவது போல் உணர்ந்தான் மூர்த்தி.

அவசரமாக அங்கிருந்து அகன்றான். பாகீரதியைச் சந்திக்கக் கூடாது. இன்று மட்டுமல்ல. என்றுமே சந்திக்கக் கூடாது.

மெயின் ரோடுக்கு வந்து, பெட்டிக்கடையில் வாங்கி அருந்திய 'தம்ஸ் அப்' அவன் தொண்டையை மட்டும்தான் குளிர்வித்தது. இதயத்தை அல்ல.

இனி அவன் ஒருபோதும் பாஸ்கரிடம், 'நீங்கள் கொடுத்து வைத்தவர்' என்று சொல்ல மாட்டான்.

'நான் கொடுத்து வைக்காதவன்' என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் அது நாகரிகமாக இருக்காது.

அப்படிச் சொன்னால் அப்புறம், அவன் திருச்சிக்குப் போய் பாகீரதியைப் பெண் பார்த்ததைச் சொல்ல வேண்டி வரும். பெண்ணை அவனுக்கு மிகவும் பிடித்து விட்டதைச் சொல்ல வேண்டி வரும். அவன் பெற்றோர் கேட்ட வரதட்சணையை அவர்களால் தர முடியவில்லை என்ற ஒரே காரணத்துக்காகக் கல்யாணத்தை நிறுத்தி விட்டதைச் சொல்ல வேண்டி வரும்.

'பெற்றோர் கிழித்த கோட்டைத் தாண்டாதவன்' என்பதில் பெருமை கொண்டிருந்த மூர்த்தி, முதன் முறையாக அவர்கள் கிழித்த 'வரதட்சணைக் கோட்டை'த் தாண்டியிருக்கலாமோ என்று நினைத்தான். தாண்டியிருந்தால் பாகீரதி என்னும் புதையலை அடைந்திருக்கலாமே.


பஸ்ஸில் ஏறியபோது, மூர்த்தியின் உதடுகள் முணு முணுத்தன : 'சில கோடுகளைத் தாண்டாதததுதான் தப்பு. எல்லாமா லக்ஷ்மணன் கோடு?'




''பகவத் கீதை ரயில்வே கைடு போன்றது. பயணத்துக்கு உதவியாக, அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர, வெறுமனே பாராயணம் செய்து பயனில்லை.''

ஆதாரம் : ராஜாஜி உதிர்த்த முத்துக்கள்

தகவல் : எஸ். முகம்மது யூசுப்





நவராத்தி

''பிள்ளையார் பொம்மை ஏன் இரு
இருக்கு?''
''எனக்கு ஒண்ணும் தெரியாதுப்ப
அம்மா சுண்டல் கொண்டு வந்ததை
தான் பார்த்தேன்!''

- ஆர். பி. சாரதி

பத்திரிகையாசிரியர் வீட்டு கொலு
வில்:
''இந்தப் பொம்மைகளில், குறைந்
பட்சம் ஆறு தவறுகள் இருக்கு
கண்டுபிடிச்சுச் சொன்னால் ரவிக்கை
துண்டு பரிசு! ஆறுதல் ப
சுண்டல்.''

''எங்க வீட்ல கொலு! அ
வந்துடுங்க.''
''வழக்கமா வேகாத பட்
சுண்டல் பண்ணுவீங்களே, அது
ணாம இருந்தா கண்டிப்பா வரோம்

''ரெண்டு' வருஷம் முன்
ராஜீவ்காந்தி படுகொலையை கொ
வுல வெச்சிருந்தீங்களே!
வருஷம் என்ன ஸ்பெஷல்?'' இ
''ஹர்ஷத் மேத்தா
விவகாரம்தான்!''

- குட்கேஸ்

கிண்டல்!


"வர வர மந்திரிக்க எதைத்தான் திறந்து வைக்கறதுன்னு இல்லாம போயிடுச்சி!"
"அப்படி எதைத் திறந்து வெச்சாங்க?"
"எதிர் வீட்டுக் கொலுவைத் தான்!"

- ராஜி ராதா

"என்ன, எமதர்மன் பொம்மை இருக்கு, எருமை மாட்டுக் காணோம்?"
"அதான் மெட்ரோ வாட்டர் லாரி பொம்மை வெச்சிருக்கோமே!"

"வழக்கமாய் தஞ்சாவூர் பொம்மை வைப்பீங்களே! இப்போ காணோமே?"
"அதான் ஜெ. மந்திரிகள் பொம்மை வெச்சிருக்கோமே!"

- ஜீவி



கன்ஸ்யூமர்

பாரீஸில் திருவள்ளுவரில் ஏறியவன் சைதாப்பேட்டை வரும்வரை 'புஷ்பேக்' இருக்கையைப் பின்னால் தள்ள மல்லாடிக் கொண்டிருந்தேன். சின்ன பிரீஃப் கேஸு"ம் கையுமாக சைதாப் பேட்டையில் ஏறிய ஜம்பதைக் கடந்த அந்த ஆஜானுபாகுவான மனிதர் காலியாயிருந்த எனக்கடுத்திருந்த சீட்டில் உட்கார்ந்து கொண்டார். அவருக்கு மட்டும் புஷ்-பேக் லீவர் லகுவாக விழ, ஜிங்கென்று சாய்ந்து கொண்டவர், என் 'புஷ்-பேக்' போராட்டத்தை ஏதோ சினிமா பிளாஷ் பேக் காட்சியைப் பார்ப்பது போல் ரசித்துக் கொண்டிருந்தார்.

''ஏன் சார் புஷ்-பேக் விழலையா?'' குரல் கட்டையாக இருந்தது. அவர் கேட்டது எனக்கு வெட்கமாக இருந்தது. பேச வில்லை.

''நான் டிரை பண்றேன்'' தன் உலக்கையான பருமன் கையினால் லீவரை பலமாக ஆட்டினார். அசைய வில்லை. லீவரின் குமிழ்தான் அவர் கையோடு கழன்று வந்திருந்தது.

''சே! என்ன மெய்ன்ட்டெனன்ஸோ...'' அலுத்துக் கொண்டே, அருகே வந்த கண்டக்டரிடம் ''எம்பா புஷ்-பேக் சீட்டுன்னு எக்ஸ்டிரா சார்ஜ் வாங்குதே கார்ப்பரேஷன், ஒழுங்கா ஃபங்ஷன் ஆகுதான்னு பார்க்க வேணாமா... பஸ் நம்பரை குறிச்சிட்டு கன்ஸ்யூமர் கோர்ட்டுக்கு இழுக்கறேன் பாரு!''

கண்டக்டர் அதை லட்சியம் செய்ததாய்த் தோன்றவில்லை. விழுப்புரத்திற்கான டிக்கெட்டை அவரிடம் கொடுத்து விட்டு நகர்ந்தார்.

''ஹி.... ஹி.... இதுக்கெல்லாம் கன்ஸ்யூமர் கோர்ட்டுக்குப் போகிற அளவுக்கு இன்னும் முன்னேறலையே சார்'' செங்குத்தாக இருந்த என் சீட்டிலிருந்து, சாய்மானமாக உட்கார்ந்திருந்தவரிடம் சற்று சிரமப்பட்டு பேசினேன்.

''அட, என்ன சார் அப்படி சொல்லிட்டீங்க.... ஜனங்ககிட்டே 'கன்ஸ்யூமர் அவேர்னஸ்' கிடுகிடுன்னு வளருது... ஏதோ நீங்க கேட்டதுக்காகச் சொல்றேன்னு நினைக்காதீங்க. எங்க ஊரிலே என் பேரை 'கன்ஸ்யூமர் கருணாகரன்'னு சொன்னாத்தான் தெரியும். கிட்டத்தட்ட நாப்பது கேஸை கன்ஸ்யூமர் கோர்ட்டுக்குக் கொண்டு போயிருக்கேன்'' தன் இருக்கையையும் செங்குத்தாகவே தள்ளிக் கொண்டு பேச ஆரம்பித்தவர்தான், விடுபவராகத் தெரியவில்லை.

கருணாகரனும் ஒரு காலத்தில் கல்லானாலும் அரிசி, புல்லானாலும் புளி என்று கலப்படங்களைப் பற்றி புலப்பட்டுக் கொள்ளாமல்தான் இருந்திருக்கிறார். கண்டதே டி.வி, கொண்டதே குடை என்று வாங்கும் சாமான்களின் குறையை அறியும் பிரக்ஞை இல்லாத பிரஜையாக காலம் தள்ளிய சாது கன்ஸ்யூமரை, எதற்கும் மோதும் கன்ஸ்யூமராக மாற்றிய சம்பவத்தை விவரித்தார்.

மனைவியும் கையுமாகத் தன் மகளுக்கு வரன் தேடி நகரத்துக்கு வந்திருக்கிறார் கருணாகரன். தரகர் தந்த தி.நகர் வரன் தோதுப் படவில்லை. அடுத்த வரன் இருக்கும் விலாசத்தை ஆராய்ந்தவர், அது 'கன்ஸ்யூமர் கோர்ட்' ஸ்டாப்பிங்கில் இறங்கி, எதிர்த் தெருவில் இருப்பதாகத் தரகர் குறிப்பிட்டிருப்பதை மனத்தில் இருத்தினார்.

''எங்க இந்த வரன் தான் தட்டிப்போச்சி.... அடுத்ததாவது அமைய வேணாமா... சுத்த ராவு காலமா இருக்கே...ஒரு மணி நேரம் கழிச்சி பஸ்ஸைப் பிடிக்கலாமே'' என்று அவர் மனைவி சொன்னது சரி என்று படவே சொற்ப நேரத்தை



எப்படிக் கழிக்கலாமென எண்ணிக் கொண்டிருந்தவருக்கு எதிரே அந்த ஏ.வி. சொர்ணமாளிகை தென்பட்டது.

பொழுதுபோக புகவிடம் கிடைத்ததில் பூரித்து, அவர் மனைவியும் அந்த நகைக் கடையில் கையில் பயணச் செலவிற்கு வைத்திருந்த நூறே ரூபாயோடு, நூற்றெட்டு அணிகலன்களை அலசிக் கொண்டிருந்தாள். அதோடு விடவில்லை.

''சுத்தமா இருப்பத்தி ரெண்டு காரட் இருக்குமில்லே'' என தன் உருட்டல் முழியோடு, மிரட்டல் குரலில் கடைச் சிப்பந்தியைக் கேட்டிருக்கிறாள். அந்த சமயம் பார்த்து



கருணாகரன்

கருணாகரனும், ''அதைப் பத்தியெல்லாம் என்னடி கவலை... சீக்கிரம் முடி! 'கன்ஸ்யூமர் கோர்ட்' போயாகணும்'' என அடுத்தவரனை விசாரிக்க அவசரப்படுத்தியிருக்கிறார். கடைச் சிப்பந்தி விரித்த நகைப் பெட்டிகளை அப்படியே விட்டு விட்டு முதலாளியிடம் ஓட்டமாக ஓடி அவர் காதில் ஏதோ ஓத, முதலாளியும் பீதியோடு கருணாகரனிடம் வந்து,

''வியாபாரம்னா முன்னே பின்னேதான் இருக்கும். 'கன்ஸ்யூமர் கோர்ட்' அது இதுன்னு போனா எப்படி சார்... நமக்குள்ளே முன்னே பின்னே முடிச்சுக்கலாம்... பவுனுக்கு ஐநூறு குறைச்சி போடறேன்... செய் கூலி கூட வேணாம்... சுத்தமா இருபத்திரெண்டுக்கு எங்க சார் போறது'' அழாக்குறையாக முறையிட்டார். அதோடு விடாமல் அரைகிராம் நகை வாங்காதவருக்கு காப்பி வரவழைத்து, 'காம்ப்ளிமெண்ட்டை'யையும் கொடுத்து அனுப்பியிருக்கிறார். கன்ஸ்யூமர் கோர்ட் என்ற பதத்தின் மகிமையை உணர்த்திய அதே சம்பவம் நுகர்வோர் விழிப்பை அவர் மனத்தில் சம்பவித்திருக்கிறது!

''முதல்லே ஒரு பல் டாக்டர் மாட்டினான். சொத்தைப்பல்லை பிடுங்கறேன் பேர்வழின்னு பாதியை விட்டுட்டான். அன்னிக்கு ராத்திரி பூரா உயிர் போறா மாதிரி வலி. அடுத்த நாளே வலியோட பல்லைக் கடிச்சிட்டு கன்ஸ்யூமர் கோர்ட்டுக்கு ஓடினேன். பாதி சொத்தைப் பல்லை பிடுங்கின டாக்டர் மேலே, அவன் பாதி சொத்தை காம்பன்சேஷனா கேட்டு நோட்டீஸ் போக்க. டாக்டர் காம்ப்ரமைஸ"க்கு வந்து ஒரு தொகைக்கு ஒத்துக்கிட்டார். கேஸை வித்டிரா பண்ணிக்கிட்டேன்... கன்ஸ்யூமர் கோர்ட்டிலே மூணு மாசத்துக்குள்ளே விவகாரம் தீர்த்தாகணும் தெரியுமில்லே'' கருணாகரன் சொன்ன போது ஒரு வேளை அளக்கிறாரோ என்று கூட நினைத்தேன். பஸ் செங்கல்பட்டை நெருங்கியிருந்தது.

வயிற்றில் லேசாகப் பசி எடுக்க ஆரம்பித்திருந்தது. ஒரு நல்ல ஹோட்டலில் நிறுத்தினால் சாப்பிடலாமென்று நினைத்துக் கொண்டேன். கருணாகரன் விடுவதாயில்லை. பஸ்ஸ"ம் நிற்கவில்லை.

''நல்ல தோலில் செஞ்ச செருப்பா இருந்தா காலைக் கடிக்காது தெரியுமா சார்... கனையா நூற்றியிருபது கொடுத்து வாங்கின புதுச் செருப்பு கடிக்கது... அப்புறம் என்ன, 'கன்ஸ்யூமர் கோர்ட்'தான்! கான்பூரிலிருந்து

அகிலா கார்த்திகேயன்



"சார்... சாயந்திரம் நாலு மணிக்கு வீட்டுக்குப் போகணும் சார்."

"பர்மிஷன்தானே வேணும்...? தாராளமாப் போங்களேன்!"

"அதுக்கில்லே சார்... நீங்கதான் மறக்காமல் கரெக்டா எழுப்பி விடணும்!"

– சீர்காழி வி. ரேவதி

கதறிண்டு வந்தான் 'கம்பெனி'க்காரன். காலில் விழாத குறைதான்...." என கூறியவர் என் முகத்தை அந்த லேசான பஸ் இருட்டில் பார்த்தார். சந்தேக ரேகைகள் ஓடியதைக் கண்டிருப்பார் போலும்.

''சொன்னா நம்ப மாட்டீங்க'' என்றபடி தன் பிரீஃப்கேஸை எடுத்து மடியில் வைத்துத் திறந்தார். மங்கிய வெளிச்சத்தில் அவர் காட்டிய ஆவணங்களைப் பார்த்தேன். அம்புட்டும் கன்ஸ்யூமர் கோர்ட் விவகாரங்கள்!

என் பசி மிஞ்சியிருந்தாலும், கருணாகரன் செவிக்கு உணவாய் நுகர்வோர் சமாசாரங்களைப் பரிமாறிக் கொண்டிருந்தார்.

''இப்ப நான் மெட்ராஸ் வந்துட்டுப் போறது கூட இத மாதிரி ஒரு கேஸ்தான். இருபத்தி நாலு ஊட்டச்சத்து, அறுபத்தெட்டு ஊட்டச் சத்துன்னு விளம்பரம் செய்யறானே, எங்கே அத்தனை ஊட்டச்சத்து இருக்குன்னு 'புருவ்' பண்ணு பாப்போம்'னு ஒரு பாம்பேக் காரனைப் பிடிச்சி இழுத்திருக்கேன்.... சும்மா விளம்பரம் பண்ணி ஜனங்களை ஏமாத்த முடியாது. இப்பெல்லாம் நுகர்வோர் பாதுகாப்பிலே தோண்டிடலாம்.''

கருணாகரன் சொல்லச் சொல்ல அவர் மேல் ஒரு உயர்ந்த அபிப்பிராயமே ஏற்பட்டு விட்டது. வாட்ட சாட்டமான உடல்வாகு வெள்ளைவெளேர் ஜிப்பா, வேஷ்டி.... தங்க ஃபேரம் மூக்குக் கண்ணாடி! மிடுக்கான தோற்றம். ஆகா மிடுக்கான எண்ணங்கள் கொண்ட கன்ஸ்யூமர்!

''பத்து 'ஷேவ்' பண்ணலாம்னு போட்டு பிளேடை விக்கறான். ரெண்டாவது ஷேவ்லேயே பல்லை இளிக்குது... கம்பெனிக்காரனை சும்மா விட்டா எப்படி? 'ஓய்ஃப் டெலிவர்டு'னு கொடுத்த தகவலை 'ஓய்ஃப் எக்ஸ்பையர்டு'னு தந்தியா கொடுத்தான் எங்க ஊர் தபால் ஆபீஸ்காரன். தந்தி வாங்கினவன் வீட்டிலே ஒரே களேபரம்... உண்மையான விஷயம் தெரிஞ்சதும் போனா போவட்டும்னு அவங்க விட்டுட்டாங்க. நான் விடறதா இல்லே... கன்ஸ்யூமர் கோர்ட்டிலே கணிசமா நஷ்ட ஈடு வாங்கித் தந்தேன். இது வரைக்கும் கொறைஞ்சது நாற்பது கேஸ்! பாதி என் சொந்தம்... மத்தது எங்க ஊர் ஜனங்களுக்கு... அடிக்கடி இதுக்காக மெட்ராஸ் வந்து போக வேண்டியிருக்கு.''

அந்த விழுப்புரத்துக்காரரின் விழிப்புணர்ச்சியை நினைத்து புளகாங்கிதமடைந்து கொண்டிருந்போது என் பசியுணர்ச்சி என்னைப் படுத்தியது. பஸ் மதுராந்தகத்தைத் தாண்டி, தந்தை பெரியார் மோட்டலையும் தாண்டிவிட்டது. பஸ்ஸில் யாருக்கும் பசியில்லையா? டிரைவருக்கு பசிக்காதா... சே! வீட்டில் சப்பாத்தி கட்டிக் கொண்டு போங்கள் என்றாள். அதை வேறு சுமக்கணுமான்னு வந்துவிட்டது தவறு.

''ஜெர்மன் ஃபார்முலா, ஜப்பான் ஃபார்முலான்னு விக்கற டிடர்ஜெண்ட் பவுடர், ஓசையே வராதுன்னு சொல்ற கிரைண்டர் மிஷின், கொசு டபாய்க்கும் கொசுவிரட்டி இப்படி எதையும் நான் விட்டதில்லே. எங்க ஊர்லே நுகர்வோர் பாதுகாப்புக் கமிட்டிக்கு நான்தான் தலைவர். ஊர் பால்காரன், ரேஷன்காரன், பலசரக்குக் காரன் எல்லார் கண்ணிலும் விரலை விட்டு ஆட்டிடுவேன். காய்கறிகாரர் கூட, கொத்தமல்லிக் கட்டு என் கிட்டே விக்கும் போது புல் பூண்டை எடுத்துட்டுதான் பயத்தோட கொடுப்பான்னா பாருங்களேன்..... இப்ப எல்லார் கிட்டேயும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டாச்சி...'' என்று சொல்லிவிட்டு சிரித்தார்.

பசி மயக்கத்தில் அவர் பேச்சு 'போர்' அடிக்க ஆரம்பித்தது. திண்டிவனத்தில் பசி தீர்க்கலாமென்று நினைத்ததில் மண் விழுந்தது. யாரும் இறங்கிப் போக வேண்டாமென்று சொல்லி எழுந்து போனார் நடத்துனர். பழியாக ஓட்டுநரும் பஸ்ஸைவிட்டு எழுந்திருக்கவில்லை.

பஸ் திரும்பவும் புறப்பட்டபோது, கருணாகரன் சாரின் வழுக்கு மண்டை 'டொம் டொம்' என்று என் தோள்பட்டையில் இடித்தது. தூங்கிப் போய்விட்டார். எனக்கும் பசி மயக்கத்தில் சொக்கிக் கொண்டு வந்தது.

ஏதோ ஒரு துர்நாற்றம் மூக்கைத் துளைக்கவே விழித்துக் கொண்டேன். பஸ் எங்கோ நிறுத்தப்பட்டிருந்தது. ஜன்னல் வழியே பார்த்தேன். ஒரு வெட்ட வெளி. விளிம்பில் வரிசையாக ஆங்காங்கே நின்று பயணிகள் உபயம் செய்து கொண்டிருந்த சிறுநீரின் வீச்சம்.

பக்கத்தில் பார்த்தேன். கருணாகரன் சாரைக் காணவில்லை. பல இருக்கைகள் காலியாக இருந்தன. பஸ்ஸிலிருந்து நானும் இறங்கினேன். கோரமான பசி!

''ஜிக்குபுக்கு... ஜிக்குபுக்கு ரயிலே... கலக்குது பாரிவ ஸ்டைலே'' ஒரு நாலாம்தர டேப்ரிகார்டர் தாராசமாகக் கீச்சிட, அந்தப் பக்கம் திரும்பினேன். ஹோட்டல்... சூழ் நிலை கலக்கினாலும் இனி பசி தாள முடியாத நிலை... வழி நெடுக அத்தனை சுமாரான ஹோட்டல்களை விட்டுவிட்டு இப்படிக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கும் ஓட்டுனரைச் சபித்துக் கொண்டே உள்ளே நுழைந்தேன்.

''சே... படுபாவிங்க! ஓசியிலே இவனுங்களுக்குக் கொடுக்கறாங்கன்னு கண்ட இடத்திலே போடறானுங்க... என்ன கண்றாவி மாவையும், எண்ணெயையும் ஊத்திப் பண்றானோ தெரியலே! வாயிலே வைக்க முடியலே... நாய் கூடத் தின்னாது'' எதிரே எண்ணெய்ப் பிசுக்கு டேபிளில் இருந்த செட் தோசை என்ற வஸ்துவைப் படு எரிச்சலோடு உதறிவிட்டு எழுந்து சென்ற சக பிரயாணி என்னை எச்சரித்தார்.

அழுக்கு மூட்டையாய் அருகில் வந்து, ஆழமாக விரல்களை உள்ளே விட்டு தண்ணீர் தம்ளரை என்முன் வைத்த சர்வரிடம்,

''ஒரு காப்பி போதும்பா'' என்றேன். அதையும் ஏன் கேட்டோமென்று ஆகிவிட்டது. திரிந்து போன பாலில் கலந்திருந்த காப்பியில் புளியங்கொட்டை வாசம்! கொஞ்சம் கூடக் கூசாத கலப்படம்!

''இவனுங்களைக் கேட்க ஆளே இல்லப்பா'' யாரோ பக்கத்தில் முணு முணுக்க, இதுவரை கருணாகரன் சார் ஊட்டிவிட்ட நுகர்வோர் சிந்தனை என்னுள் ஒட்டு மொத்தமாகத் திரண்டு வந்திருந்தது.

ஹோட்டல் முதலாளியைப் பார்த்து நாலு வார்த்தை நறுக்கென்று கேட்க வேண்டுமென்ற உந்துதலோடு கல்லாப் பெட்டியை நோக்கி ஒரு உணர்ச்சி நடை போட்டேன். கூடவே வள்ளுவர் கழக ஓட்டுநர்களைக் கருணாகரன் சாரிடம் சொல்லி, வழக்குப் போட வழியிருக்கிறதா என்று கேட்க நினைத்துக் கொண்டே கல்லாவை நெருங்கினேன்.

''என்னத்தையா தின்றீங்க, பரதேசி நாய்ங்களா... உங்களாண்ட ஹோட்டலை ஒப்படைக்க ஒரு நாள் பட்டணம் போயிட்டு வர்றதுக்குள்ளே வியாபாரத்தை கவுத்து முக்காடு போட்டு அனுப்பிடுவீங்கடா... மணி பன்னண்டு கூட ஆவலே... இன்னும் பாதி நைட் பஸ்லாங்க வந்தாகணும்! இப்போ பாலெல்லாம் சரியாப் போச்சன்னா எப்படி... முதல்லயே ஒண்ணுக்கு ரெண்டுன்னு எடை கட்டி அடிச்சிருக்கணும்... உங்களுக்கென்னடா மாசமானால் சம்பளம்... முதல் போட்டு வியாபாரம் செஞ்சாயில்லே கஷ்டம் தெரியும்.''

ஹோட்டல் சிப்பந்தியை விரட்டிக் கொண்டிருந்த கல்லாவில் அமர்ந்திருந்தவரைக் கண்டதும் அதிர்ந்து கல்லானேன்!

அடக் கடவுளே! கன்ஸ்யூமர் கருணாகரன்!

செல்வத்தைப் பெருக்க, சில யோசனைகள்

பங்கு மார்க்கெட்டில் ஒரு சூதாட்டம் போல் இறங்கி, இன்று வாங்கி நாளை விற்பதிலே ''ரிஸ்க்'' அதிகம். இப்படிப் புகுந்து விளையாடாமல், பிரதான மார்க்கெட்டுக்கு நிறுவனங்கள் வரும் போது நல்லனவற்றைத் தேர்ந்தெடுத்து முதலீடு செய்வதில் ஆபத்து அதிகம் இல்லை. டிவிடெண்ட் எதிர்பார்க்கலாம். பங்குகளின் விலை உயர, கணிசமான லாபமும் பெறலாம். அண்மையில் பிரதான மார்க்கெட்டுக்கு வரப் போகும் பின்வரும் நிறுவனங்கள் வாசகர்களுக்குச் சிபாரிசு செய்யப்படுகின்றன :

PENNAR PATERSON SECURITIES LTD :

ஹைதராபாத்தைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற தொழிலதிபர் நிருபேந்தர் ராவ் தொடங்கிய பெண்ணார் குரூப் நிறுவனங்களில் ஒன்று இது. இந்த குரூப்பைச் சேர்ந்த இதர நிறுவனங்கள் : பெண்ணார் அலுமினியம்; பெண்ணார் எஃகு முதலியவை.

இன்று இந்தியா முழுவதும் தொழில்துறையில் தவணை முறையில் இயந்திரங்களைப் பெறுவது அல்லது வாடகைக்குப் பெறுவது என்பது சகஜமாகி விட்டது. இன்றியமையாததாகி விட்டது என்றும் கூறலாம். பெண்ணார் பாட்டர்ஸன் முக்கியமாக இந்தப் பணியில்தான் ஈடுபட்டிருக்கிறது. அந்நியச் செலாவணிக்கு நாணய மாற்று செய்தும் தருகிறது. கடந்த சில ஆண்டுகளில் இந்த நிறுவனமும் மிகச் சிறப்பாக இயங்கியுள்ளது. இன்று தனது செயல்பாடுகளை மேலும் விஸ்தரிக்க மூலதனம் கோருகிறது. பத்து ரூபாய் பெறுமானமுள்ள 50 லட்சம் பங்குகளை ரூ 5 கூடுதல் விலைக்கு விநியோகிக்கிறது. அக்டோபர் 18-ம் தேதி முதல் விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. நிறுவனத்தின் கடந்த கால திருப்திகரமான செயல்பாடு, எதிர்கால வளர்ச்சித் திட்டம் என்று நோக்கும் போது பங்குகளின் விலை உயர வாய்ப்புண்டு.

SUPREME PETROCHEM LTD.

மகாராஷ்டிரத்தில் ஸுப்ரீம் இண்டஸ்ட்ரீஸ் மிகவும் பிரபலம். இந்நிறுவனம் இன்று ஒரு பெட்ரோகெமிக்கல் ஆலை நிறுவ எண்ணுகிறது. உற்பத்தியாகப் போகும் பாலிஸ்டிரீன் எனும் ஒரு வகை பிளாஸ்டிக்குக்கு ஏராள உபயோகங்கள் உண்டு. பண்டங்களை 'பாக்' செய்யவும், அலங்கார சாதனங்களுக்குக் குப்பிகளாகவும், ஆடியோ டேப் மேலுறைகளாகவும், விளக்கு ஷேட்களாகவும், முட்டைகளை வைக்கும் டிரேகளாகவும் உருமாறும்.

அமெரிக்கத் தொழில் நுணுக்கக் கூட்டுறவுடன் நிறுவப்படும் இந்த ஆலைக்கு ரூ. 173 கோடி மூலதனம் தேவை. இதில் 87 கோடிக்கு பொது மக்களுக்கு டிபன்சர் கடன் பத்திரங்கள் விநியோகமாகின்றன. ஒவ்வொன்றும் ரூ 25 மதிப்புடையது. இதில் ரூ 10 உடனடியாக ஒரு பங்காக மாறும். மீதி ரூ 15, மூன்று தவணைகளில் 6, 7, 8 வது ஆண்டுகளில் திருப்பித் தரப்படும். பதினைந்து சதம் வட்டி உண்டு. எந்தவிதமாகப் பார்த்தாலும் திருப்திகரமான முதலீடே.

UCAL POWER SYSTEMS LTD

கார்கள் விற்பனை, மற்றும் சர்வீஸிங்கில் பிரசித்தி பெற்ற யூனியன் மோட்டார்ஸ் குரூப்பைச் சேர்ந்தது கார்புரேட்டர்ஸ் லிமிடெட். இந்த குரூப், இப்போது யூகால் பவர் ஸிஸ்டம்ஸ் என்ற புதிய நிறுவனத்தையும் தோற்றுவிக்கிறது. இது, சிறிய அளவினதான ஜெனரேட்டர்களை உற்பத்தி செய்ய, பிரிட்டிஷ் நிறுவனத்தின் கூட்டுறவைப் பெற்றுள்ளது. ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு எடுத்துச் செல்ல வசதியான சிறிய மின் ஜெனரேட்டர்களுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. எதிர்காலத்தில் பெரிய ஜெனரேட்டர்களைத் தயாரிக்கும் திட்டமும் உண்டு. மறைமலை நகரிலும் பாண்டிச்சேரியிலும் தொழில்கங்கள் அமைகின்றன. திட்டத்துக்கு ரூ. 10.25 கோடி தேவை. பத்து ரூபாய் பெறுமானமுள்ள பங்குகள் விநியோகிக்கப்பட இருக்கின்றன. ரூ 250 லட்சத்துக்கு மக்களின் முதலீடு கோரப்படுகிறது. தயக்கமின்றி வாங்கலாம்.

– வி. கோபாலன்



இரண்டாம் பாகம்

மழை

*"மாரிதான் சிலரை வரைந்து
பெய்யுமோ?
காற்றுஞ் சிலரை நீக்கி வீசுமோ?" –
கபிலர்*

12. வெள்ளம்

சாவித்திரிக்கும் ஸ்ரீதரனுக்கும் கல்யாணம் நடந்த வருஷத்தில், அந்தப் பிரதேசத்தில் வெகு நாள் வரையில் மழை பெய்யவில்லை.

புரட்டாசிக் காய்ச்சல் அந்த வருஷத்தைப்போல் கொடுமையாக எப்போதும் இருந்ததில்லையென்று ஜனங்கள் சொன்னார்கள். ஐப்பசி பிறந்து பத்துத் தேதி ஆயிற்று. அப்படியும் மழை இருக்கிற இடமே தெரியவில்லை.

குடமுருட்டியிலும் ஜலம் குறைந்து விட்டபடியால், தண்ணீர் மடைச் சண்டைகள் அதிகமாயின.

"சாமி! இந்த மாதிரி இன்னும் நாலு நாள் காய்ஞ்சால் இந்த வருஷம் பஞ்சந் தான். இப்பவே, விளைச்சல் ஒண்ணுக்குப் பாதிதான் எதிர்பார்க்கலாம்" என்றான் நல்லான்.

"இப்படியே இருந்து விடாதப்பா! பகவான் கிருபை பண்ணுவார். மழை சீக்கிரம் வரும்" என்றார் சம்பு சாஸ்திரியார்.

"மழை எங்கே வரப் போறதுங்க. இந்த ஐயமாரு பண்ணுகிற அக்கிரமத்திலே!" என்றான் நல்லான். ஊரில் அந்த வருஷம் மிராசுதார்களுக்கும், குடியானவர்களுக்கும் மனைக்கட்டுச் சண்டை ஏற்பட்டு, கோர்ட்டில் கேஸ் நடந்து கொண்டிருந்தது. இந்தக் கோபத்தைத்தான் நல்லான் அப்படி வெளியிட்டான்.

அமரர் கல்கி



தியாக பூமி

''அப்படிச் சொல்லாதே, நல்லான்! ஔவையார் என்ன சொல்லியிருக்கா? 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை'. அந்த மாதிரி, நீதான் நல்லானாச்சே, உனக்காகத்தான் மழை பெய்யட்டுமே?''

நல்லான் சிரித்துவிட்டு, ''என் பேர் தானுங்க நல்லான். உண்மையிலே நான் ரொம்பப் • பொல்லாதவனுங்க. ஒரு வேளை, உங்க தர்ம குணத்துக்காக மழை பேஞ்சால்தான் பேஞ்சது. ஏங்க! மகா பாரதத்திலே விராட பர்வம் வாசிச்சா, மழை வரும் என்கிறாங்களே!'' என்றான்.

''ஆமானப்பா, நல்லான்! நம் தேசத்துப் பெரியவர்கள் அப்படி நம்பிக்கை வைத்திருந்தார்கள். இந்த நாளில் அதையெல்லாம் யார் நம்புகிறார்கள்? இருந்தாலும், நான்கூட இன்னிக்கு ராத்திரி விராட பர்வம் வாசிக்கலாம்னு நினைச்சுண்டிருக்கேன்'' என்றார் சாஸ்திரியார்.

சாம்பு சாஸ்திரியார் அன்றிரவு விராட பர்வம் வாசித்ததனால்தானோ என்னவோ, நமக்குத் தெரியாது; மறுநாள் மாலை கீழ்த் திசையில் இருண்ட மேகங்கள் திரண்டு எழுந்தன. மத்தியானத்திலிருந்தே கம்மென்று மிகவும் இறுக்கமாயிருந்தது. 'ஒரு வேளை மழை வந்தாலும் வரும்' என்று ஜனங்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். கிழக்கே மேகம் திரளுகிறது என்று அறிந்ததும் எல்லோரும் வீதியில் வந்து பார்க்க ஆரம்பித்தார்கள். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, மேகங்கள் அதி வேகமாகப் பரவி நாலு திசைகளையும் மூடிக் கொண்டன. காது செவிடுபடும் படியாக இடி இடித்தது. மின்னல் ஒரு திசையின் அடிவாரத்தில் கிளம்பி, கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் வானத்தைக் குறுக்கே கடந்து சென்று, இன்னொரு திசையின் அடிவரையில் சென்று மறைந்தது.

பிறகு மழை பெய்யத் தொடங்கியது. மழை என்றால், எப்பேர்ப்பட்ட மழை! பிரளய காலத்து மழை என்றுதான் சொல்ல வேண்டும். ஆரம்பத்தில் படபடவென்று பெரிய பெரிய மழைத்துளிகள் விழுந்தன. சில நிமிஷத்துக்கெல்லாம் வானத்துக்கும் பூமிக்கும் ஒரே தாரையாகிவிட்டது. பாபநாசம், சிவ சமுத்திரம் முதலிய இடங்களில் மலையிலிருந்து விழுவதைப் பார்த்திருக்கிறீர்களா? அந்த மாதிரியாக, மேகமாகிற மலை முகட்டிலிருந்து ஒரு பெரிய-பிரம்மாண்டமான - கண்ணுக்கெட்டிய தூரம் பரவிய அருவி விழுவது போலவே தோன்றியது. அன்றிரவெல்லாம் இடைவிடாமல் அப்படிப் பெய்து கொண்டிருந்தது. தாலுகா கச்சேரியில் வைத்திருந்த மழை அளக்கும் கருவி, அன்று ராத்திரி எட்டங்குல மழை காட்டியதாகப் பிற்பாடு தெரிய வந்தது.

மறுநாள் பொழுது விடிந்த பிறகும் மழை நிற்கவில்லை. மழையுடன் காற்றும் பலமாக அடித்தபடியால் ஊரில், எல்லாரும் வீட்டைவிட்டு வெளிக்கிளம்பாமல் இருந்தார்கள். ஆனால் நல்லானுக்கு மட்டும் இருப்புக் கொள்ளவில்லை. நேற்று வரை தண்ணீருக்கு ஏங்கிக் கிடந்த வயல்களை இன்று போய்ப் பார்க்க வேண்டுமென்று தோன்றிற்று. கீத்துக் குடலையை எடுத்துத் தலையில் மாட்டிக் கொண்டு கிளம்பினான். ஊரைத் தாண்டி அப்பால் போனதும், எங்கே பார்த்தாலும், ஒரே ஜலப் பிரளயமாயிருந்தது! குளத்திலே தண்ணீர் நிறைந்து பெரும்பாலான வரப்புகளை மறைத்து விட்டது. அவற்றில் நெற்பயிரின் நுனி மட்டும் தெரிந்தும் தெரியாமலும் காணப்பட்டது. வாய்க்கால்களில் ஜலம் கரையைத் தொட்டுக் கொண்டு ஓடிற்று! ஆகா! குடமுருட்டியின் காட்சியை என்னவென்று சொல்வது? அப்போது அந்த நதியில் கழிகளுடனும் கழல்களுடனும் ஓடிக் கொண்டிருந்த வெள்ளம் குடத்தை மட்டுந்தானா உருட்டும்? மலையைக் கூடவல்லவா உருட்டிக்கொண்டு போய் விடும்? ஆனால், மலை என்ற நாமதேயம் தஞ்சாவூர் ஜில்லாவில் இல்லாத காரணத்தினால்தான் போலும், அப்போது அந்நதியில் வேருடன் பிடுங்கப்பட்ட மரங்களும், வைக்கோற் போர்களும் மிதந்து போய்க் கொண்டிருந்தன.

நல்லான் இந்தக் காட்சியைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். ஆற்றில் இன்னும் ஒரு சாண் தண்ணீர் அதிகமானால், வெள்ளம் கரைமீறிவிடும் என்று எண்ணினான். பிறகு அங்கிருந்து சற்றுத் தூரத்திலிருந்த சேரியின் வழியாகச் சென்றான். அந்தச் சேரி அப்போது நாலு பக்கம் ஜலத்தினால் சூழப்பட்ட ஒரு தீவைப்போல் விளங்கிற்று. அந்தத் தீவிற்குள்ளும் ஒரு பகுதியில் ஜலம் வழிந்து ஓடத் தொடங்கி யிருந்தது. அங்கே, சில ஆட்கள் நின்று மண்ணை வெட்டிப் போட்டு அணை கோலிக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்த நல்லான், 'ஐயோ! பாவம்! சாஸ்திரி ஐயா சொல்றாப்பலே, மழை பெய்தா எல்லாருக்குந்தான் பெய்யறது. ஆனால், சில பேருக்கு அது சாதகமாயிருக்கு; சில பேருக்குக் கெடுதலா முடியறது' என்று எண்ணினான். அதே சமயத்தில் இவ்வோர் எண்ணம் அவன் மனத்தில் தோன்றி அவனுக்கு ஒரு க்ஷணம் நடுக்கம் உண்டாக்கிற்று. அந்தச் சேரிக்குக் கொஞ்ச தூரத்தில் குடமுருட்டியில் ஒரு குத்தல் இருந்தது. தப்பித் தவறி அங்கே உடைப்பு எடுத்து விட்டால் சேரி அரோகரா! 'சாமி! ஆண்டவனே! அப்படி ஒண்ணும் வரவேண்டாம்!' என்று பிரார்த்தித்த வண்ணம் நல்லான் வீடு திரும்பினான்.

நல்லானைப் போலவே சம்பு சாஸ்திரியும் அன்று காலை அந்த மழையிலும் காற்றிலும் வெளிப் புறப்பட்டார். ஆனால், அவர் வயல்களுக்குப் போகவில்லை. தடாகத்தில் போய்ப் பிராத ஸ்நானம் செய்துவிட்டு, நந்தவனத்தில் புகுந்தார். அன்று ஏகாதசியாகையால், பஜனை மடத்தில் படங்களின் அலங்காரத்துக்காக அகப்பட்ட வரையில் புஷ்பங்களைச் சேகரித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தார். அப்பாவுக்குப் பெண்ணாகிய சாவித்திரி, அந்தப் புஷ்பங்களையெல்லாம் அழகான மாலைகளாகத் தொடுத்து வைத்தாள்.

சாயங்காலம் கொஞ்சம் மழை விட்டிருந்தபோது, சம்பு சாஸ்திரி சாவித்திரியை அழைத்து, "அம்மா! நல்ல வேளையாய் மழை குறைந்திருக்கிறது. சிறு தூற்றல் தான் போடுகிறது. பஜனை மடத்துக்குப் போய்க் கோலம் போட்டு விளக்கேற்றி வைத்துவிட்டு வா, அம்மா! இன்று சீக்கிரமாகவே பஜனையை ஆரம்பித்து முடித்து விட வேணும்" என்றார். "இதோ போகிறேன், அப்பா!" என்றாள் சாவித்திரி.

பிறகு, "மங்களம்! இன்னிக்கு ஏகாதசின்னு ஞாபகம் இருக்கோல்லியோ? கண்டலுக்குக் கடலை ஊறப் போட்டிருக்கையா?" என்று கேட்டார்.

"ஊறப் போடுவானேன்? அதுதான் மழையிலே ஊறிப் போய்க் கிடக்கே!" என்றாள் மங்களம்.

"வைத்தி! வைத்தி!" என்று இரைந்து கூப்பிட்டார் சாஸ்திரி. அவன் காதில் விழவில்லை. கிட்டப் போய், ஜாடை காட்டிக் கொண்டே, "வைத்தி! அக்கிரகாரத்திலே எல்லாரிட்டயும் போய், இன்னிக்கு ஏழு மணிக்கே பஜனை ஆரம்பிச்சுச் சுருக்க முடிச்சுடலாம்னு சொல்லிட்டு வா!" என்று சொன்னார்.

வைத்தி அவர் சொன்னதை ஒருவாறு தெரிந்து கொண்டு, "இந்த மழையிலே வீடு வீடா யார் போறது? என்னால் முடியாது!" என்றான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் சம்பு சாஸ்திரி, தாமே புஷ்பக்குடலை முதலியவற்றை எடுத்துக் கொண்டு கிளம்பினார்.

(தொடரும்)

சக்கரவர்த்தித் திருமகன்

ராஜாஜி

பாரத மக்களுக்கு, கோடிக்கணக்கான ஆண் பெண் குழந்தைகளுக்கு, ராமாயணம் வெறும் கதையல்ல. வாழ்க்கை நிகழ்ச்சிகளை விட உண்மை. சூரியனுடைய வெயிலினால் செடியும் கொடியும் எப்படி உண்மையில் வளர்கின்றனவோ, அப்படியே இந்த ராம சரித்திரத்தில் காணும் நிகழ்ச்சிகளை உட்கொண்டு பாரத தேசத்துக் கோடிக்கணக்கான மக்கள் வளர்ந்து, பண்பட்டு, வாழ்க்கை நடத்தும் சக்தியை அடைந்து வருகிறார்கள். எந்த அபலையாவது அபாயத்திலோ, கஷ்டத்திலோ வருந்துவதைப் பார்த்தோமானால் ஜடாயுவை நினைத்து நாம் மனோபலம் அடைந்து, செய்ய வேண்டியதைச் செய்வோமாக!

அவதார புருஷனான ராமன் துக்கம் வந்த போது மனம் தளர்ந்து புலம்புவது, உலகத்தில் மற்றொரு குலத்தார் பூஜிக்கும் அவதார புருஷனான ஏசுநாதரைப் பற்றி கிறிஸ்து புராணத்தில் சொல்லியிருப்பதோடு ஒப்பிட்டுக் கவனிக்கத் தக்கது. சிலுவையில் தூக்கி ஆணிகள் அடித்து மாட்டப்பட்டு வெகு நேரம் அந்த நிலையில் தவித்து முடிவில் உயிர் போகும் தறுவாயில் ''ஏலோய்! ஏலோய்! லாமா சபக்தானி!'' (இபராணி பாஷை, இதன் பொருள் : ''என் கடவுளே; என் கடவுளே! என்னை ஏன் கைவிட்டாய்?'') என்று ஏசுநாதர் உரத்த குரலில் புலம்பிக் கூவி உயிர் நீத்ததாக எழுதப்பட்டிருக்கிறது. அவதாரங்களில் இன்றியமையாத ஒரு பொது இலக்கணத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தான் தெய்வமேயானாலும் அவதார உடலினுடைய தருமத்தின்படி துக்கப்படுதலும் மற்றும் பலவும் நடக்கும்.

54. இடது கண் துடித்தது!

எதிர்பாராத கஷ்டங்களும் விபத்துகளும் ஒன்றன்பின் ஒன்றாக வந்ததைக் கண்டு விதியின் போக்கை யாராலும் விலக்க முடியாது என்கிற உணர்ச்சி மனத்தைக் கவர்ந்து ராமலக்ஷ்மணர்கள் தங்களுக்குள்ள இயற்கை தைரியத்தை அவ்வப்போது இழந்தார்கள். ஆனபோதிலும் ஒருவரை ஒருவர் தேற்றிக் கொண்டு சென்றார்கள்.

காட்டில் போய்க் கொண்டிருந்த பொழுது எதிர்பாராதபடி ஒரு கோர உருவம் கொண்ட ராக்ஷசனுடைய கையில் இரு ராஜகுமாரர்களும் அகப்பட்டுக் கொண்டார்கள். அந்த ராக்ஷசனுக்குத் தலையுமில்லை, கால்களுமில்லை. பெரிய வயிறும், மிக நீண்ட இரண்டு கைகளுமே அவன் உருவம். காட்டில் ஒரு இடத்தில் அசையாமலிருந்து கொண்டு இரண்டு கைகளையும் நீட்டி அவற்றுள் அகப்படும் புலி, கரடி முதலிய மிருகங்களை வயிற்றுக்குள் போட்டுக் கொண்டு தின்று விடுவான். வயிற்றிலேயே அவனுக்கு ஒரு பெரிய வாய். மார்பிலே ஒரு கண். பார்த்தாலும் சகிக்க முடியாத இந்தக் கோர உருவத்தோடு இருந்த அரக்கன் கையில் அகப்பட்ட இராஜ குமாரர்கள், கொஞ்ச நேரம் திகைத்தார்கள். இன்னது செய்வது என்று தெரியவில்லை. பிறகு ராமன் லக்ஷ்மணனுக்குச் சொன்னான் : ''நீ ஒரு கையை வெட்டித் தள்ளு, நான் ஒரு கையை வெட்டி விடுகிறேன்.''

அப்படியே செய்தார்கள். அந்த அரக்கன் பெயர், கபந்தன். கைகள் வெட்டியவுடன் ஒன்றும் செய்ய முடியாமல் அரக்கன் பேச ஆரம்பித்தான். ''நான் செய்த துராக்கிரமத்தால் சாபம் பெற்று இந்த உருவத்தில் வாழ்ந்து வந்தேன். நீங்கள் ராம

லக்ஷ்மணர்கள் என்று எண்ணுகிறேன். நீங்கள் வந்து என் கைகளை வெட்டி விட்டு என் உடலை தகனம் செய்தீர்களாகில் நான் என் சொந்த உருவம் பெறுவேன். இதுவே எனக்கு இந்திரன் சொன்ன சாப விமோசனம்'' என்றான்.

ராஜகுமாரர்கள் கபந்தனை எரித்தார்கள். எரிந்ததும் அவன் திவ்ய மங்கள ரூபத்துடன் நெருப்பிலிருந்து வெளி வந்து சுவர்க்கம் செல்ல விமானம் ஏறினான். ''நீங்கள் சீதையை அடைவீர்கள். மிகவும் ரம்யமான பம்பா தீரத்துக்குச் சென்று அங்கே ரிச்யமூக மலையில் வசித்து வரும் சுக்கிரீவன் என்ற வானர ராஜாவின் உதவியைப் பெற வேண்டும். அவன் தன் அண்ணனாகிய வாலியால் ராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறான். அவனுடைய நட்பை நீங்கள் சம்பாதித்தாலொழிய உங்கள் காரியம் நிறைவேறாது'' என்று சொல்லி மறைந்தான்.

பிறகு ராமனும் லக்ஷ்மணனும் பம்பையை நோக்கிச் சென்றார்கள். அந்த அழகிய பிரதேசத்தில் மதங்க ரிஷியின் சிஷ்யையான சபரி என்கிற விருத்த சந்நியாசியம்மையைக் கண்டு அவளுடைய உபசாரத்தைப் பெற்றார்கள். சபரியம்மை மகாஞானி. ராமன், ஈசுவராவதாரம் என்பதை அறிந்தவள். அவன் வருவான். அவனைக் கண்டு அவன் பாதத்தில் வணங்கி பரமபதமடையவே காத்திருந்தாள். ராமனுக்காகத் தான் தேடி வைத்திருந்த மிகுந்த ருசியான பழங்களை அவனுக்கும் லக்ஷ்மணனுக்கும் தந்து உபசரித்தாள்.

பிறகு சபரி அவ்விடத்திய மகிமைகளையெல்லாம் ராமனுக்குக் காட்டியும் சொல்லியும் தீயெழுப்பி அதில் பிரவேசித்து உடலை நீத்து மேலுலகம் சென்றாள்.

சபரியைக் கண்டு பம்பாசரஸில் ஸ்நானம் செய்த பின் ராம லக்ஷ்மணர்கள் தைரியமடைந்தார்கள். பிறகு செய்ய வேண்டியதை யோசித்தார்கள். ''லக்ஷ்மணா! என் உள்ளத்தில் வெற்றியடைவோம் என்கிற உணர்ச்சி தோன்ற ஆரம்பித்திருக்கிறது. சுக்கிரீவனைப் பார்க்கும் வழி தேடுவாய்'' என்றான் ராமன்.

பம்பை நோக்கிச் சென்றார்கள். பம்பையாறும் தடாகமும் வனமும் வசந்த பருவத்துக்குரிய அழகோடு சோபித்தன. மிருகங்களும் பறவைகளும் மரங்களும் கொடிகளும் தம்முடைய இயற்கை சௌந்தரியத்தைக் காட்டி, ராமனுடைய துக்கத்தை முன்னைவிட அதிகமாக வளரச் செய்தன. எதைப் பார்த்தாலும் சீதை இதை எவ்வளவு அனுபவித்திருப்பாள் என்கிற எண்ணமே அவன் உள்ளத்தை வாட்டிற்று. அவதார சங்கற்பத்தின்படி அனுபவிக்க வேண்டிய மானுட துயரத்தை எவ்வளவு அடக்கியாளப் பார்த்தாலும் முடியவில்லை. எப்போதுமே தைரியமும் ஸ்தைர்யமும் கொண்ட



ராமனுடைய மனம் தளர்ந்து போய் கஷ்டப்படுவதைப் பார்த்து லக்ஷ்மணன் ஆறுதல் மொழிகள் சொல்லி வந்தான். ''தேவர்களின் தாயாகிய அதிதியின் கர்ப்பத்தில் மூடி வைத்தாலும் சீதையைக் கண்டு பிடிப்போம். ராவணன் தப்பிப் போக மாட்டான். நிச்சயம், அவனை வதைத்து சீதையை மீட்போம். இந்த மனத்தாழ்ச்சி உனக்குத் தகாது. கவலையும் அதைரியமும் உன்னை அண்டலாமா? அவற்றைத் தூர விலக்கு. ஒரு பொருள் இருந்தால் அதை மறுபடி பெறுவதற்கு மனிதன் இடைவிடாத முயற்சியுடன் வேலை செய்ய வேண்டும். நம்முடைய அன்பே நமக்கு விரோதியாகப் போகிறது. அன்பின் காரணம் மனம் சோகத்தில் சிக்கியலைந்து, தளர்ச்சி அடைந்து முயற்சியைத் தடுக்கிறது. உனக்கு நான் சொல்ல வேண்டுமா? உற்சாகமே மனிதனுக்கு முக்கிய சாதனம். சோகமும் அதை உண்டாக்கும் அன்பையும் மறந்து உற்சாகத்தை மேற்கொண்டு முயற்சி செய்வோமாக. தைரியம் செய்து கொண்டு சோகத்தைத் தள்ளுவாய், அண்ணா!''

இவ்வாறெல்லாம் தம்பி, அண்ணனுக்கு உபதேசம் செய்தான். ஆதிசேஷன் மகா விஷ்ணுவுக்குக் காப்பு. அந்த ஆதிசேஷனைப் போல் இளைய பெருமான் சக்கரவர்த்தித் திருமகனை உற்சாகப் படுத்தி மனத் தாழ்ச்சியை விலக்கினான் என்பது பெரியோர்களுடைய வியாக்கினம்.

ராமன் ரிச்யமூக வனம் வந்து இங்குமங்கும் வில் பிடித்துத் திரிவதைப் பார்த்து சுக்ரீவனுக்கும் அவன் கூட்டத்துக்கும் பெரும் பயம் பிடித்துக் கொண்டது. வாலியால் துரத்தியடிக்கப் பட்ட சுக்ரீவன், வாலி வரமுடியாத இடம் என்று கண்டு அந்த மலைப் பிரதேசத்தில் வாசம் செய்து கொண்டிருந்தான். இங்கும் வாலி மாறு வேஷம் போட்டுக் கொண்டு தன்னைக் கொல்ல வந்து விட்டானோ என்று சுக்ரீவன் பயந்தான். அல்லது வாலியினுடைய நண்பர்கள் க்ஷத்திரிய வீரர்கள் யாரோ அவன் சார்பில் வந்து தன்னைக் கொல்லப் பார்க்கிறார்கள் என்றும் பயந்தான். வனத்திலுள்ள மற்ற வானரர்களும் கிலி பிடித்து இங்குமங்கும் ஓடினர்.

ஹனுமான், சுக்ரீவனுடைய முக்கிய மந்திரி. அவன் சுக்ரீவனுக்குத் தை



ரியம் கூறினான். ''இது வாலியல்ல. இவர்கள் வாலியின் நண்பர்களாகவும் காணப்படவில்லை. நான் போய்ப் பேசித் தெரிந்து கொண்டு வருகிறேன்'' என்று சொன்னதன் பேரில் சுக்ரீவன் மிக மகிழ்ச்சியடைந்து, ''அப்படியே செய். ஜாக்கிரதையாகப் போய் விஷயத்தைத் தெரிந்து கொண்டு வா. மிக சாமர்த்தியமாக உண்மையை உணர வேண்டும். எனக்கு ரொம்ப சந்தேகமாகத்தான் இருக்கிறது. அவர்கள் இங்குமங்கும் தேடுவதைப் பார்த்தால் என்னைக் கண்டு பிடித்துக் கொல்லவே வந்திருப்பதாகத் தோன்றுகிறது'' என்றான்.

ஹனுமான், ராம லக்ஷ்மணர்களிருந்தவிடம் ஒரு பிராமண வடிவமெடுத்துச் சென்றான். போய் நின்றதுமே ஹனுமானுடைய உள்ளத்தில் ஒரு புது உணர்ச்சி உண்டானதாகத் தெரிகிறது. உள்ளதை உள்ளது போல் சொல்லிப் பேசலானான். நிகழ்ச்சியை எழுதும்போது தான் யார் என்பதைக் காட்டாமல் விஷயம் கண்டு கொள்ளவே போனதாக முனிவர் ஆரம்பிக்கிறார். ஆனால் போகப் போக ஒன்றும் மறைக்காமல் தன்னைப் பற்றியும் வானர ராஜனைப் பற்றியும் விவரமாகப் பேசுகிறான். ராம லக்ஷ்மணர்களுடைய தோற்றத்தைக் கண்டதும் நாதனைக் கண்ட பக்தனைப் போல் பரவசப்பட்டு அனுபவித்துப் புகழ்கிறான். தான் ஒரு * வானரம், தன்னுடைய அரசன் சொல்லிய வண்ணம் வேஷம் போட்டுக் கொண்டு வந்ததாகவே சொல்லி விடுகிறான்.

''மனத்தைக் கவரும் ரூபம் தரித்த ராஜ ரிஷிகளே! தேவர்களைப் போல் விளங்குகிறீர்கள். விரதம் பூண்டவர்க

"நீங்க தேர்தல்ல வெற்றியடைஞ்சதும் முதல் காரியமா என்ன செஞ்சீங்க?"

"எங்க வீட்ல பாடிக்கிட்டிருந்த ரேடியோவை நிறுத்தினேன்."

"அதுக்கும் வெற்றியடைஞ்சதுக்கும் என்ன சம்பந்தம்?"

"'வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலி இல்லை'ன்னு பாடிக்கிட்டு இருந்துச்சு!"

– தேனி முருகேசன்.

ளாகக் காணப்படுகிறீர்கள். தவம் செய்ய வந்தீர்கள் என்றே எண்ணுகிறேன். இந்தக் கஷ்டமான வனத்துக்கு ஏன் வந்தீர்கள்? நீங்கள் யார் என்று சொல்ல வேண்டும். இந்த நதியும் வனமும் உங்கள் வரவால் முன்னை விட அழகாக விளங்குகின்றன. உங்களுடைய முகக் காந்தியும் உங்கள் சரீர சௌந்தரியமும் ஆச்சரியமாக விளங்குகின்றன. உங்களுடைய அபூர்வ லக்ஷணங்களைக் கண்டு இந்த வனத்திலுள்ள ஜீவன்கள் பயப்படுகின்றன. உங்கள் பராக்கிரமம் சொல்லாமலே விளங்குகிறது. நீங்கள் யார், எந்த தேசத்திலிருந்து வந்திருக்கிறீர்கள்? நீங்கள் பெரிய ராஜ்யத்தை ஆட்சி புரியவே பிறந்தவர்கள் என்பது வியக்தம். ஆயினும் தாபஸ வேஷம் தரித்திருக்கிறீர்கள். ஜடையும் மரவுரியும் தரித்து வில்லும் அம்புமாக வந்திருக்கிறீர்கள்.

"நான் இவ்வளவு சொல்லியும் ஏன் பேசாமலிருக்கிறீர்கள்? இங்கே சுக்ரீவன் என்கிற வானரராஜன் தன் அண்ணன் வாலியால் நாட்டிலிருந்து துரத்தப்பட்டு இங்குமங்கும் அலைந்தும் மறைந்தும் காலம் கழித்து வருகிறான். மிகவும் துக்கப்பட்டு வருகிறான். அவனுடைய மந்திரி நான். என் பெயர் ஹனுமான். நான் வாயுவின் புத்திரன். அரசன் உத்தரவிட்டபடி பிராமண சந்நியாசி உருவம் தரித்து உங்களிடம் வந்திருக்கிறேன்."

இவ்வாறு ஹனுமான் மிக வணக்கமாகச் சொன்ன மொழிகளைக் கேட்டு ராமன் லக்ஷ்மணனுக்குச் சொன்னான்:

"தம்பி, இந்த ஹனுமான் பேசினதைக் கேட்டு இவனிடம் எனக்கு முழு நம்பிக்கை உண்டாகியிருக்கிறது. அவன் பேச்சின் அழகைப் பார்த்தாயா? எவ்வளவு சரியான இலக்கணமும் சுவரமுமாகப் பேசுகிறான்! வேதங்கள் முழுதும் அத்தியயனம் செய்து வியாகரணம் சம்பூரணமாகக் கற்றவனைப் போல் பேசுகிறான். இவனைப் போல் அல்லவோ இருக்க வேண்டும் தூதன்! இத்தகைய தூதனைக் கொண்ட அரசனுக்கு ஒரு குறையுமில்லை. நாம் யாரைத் தேடி வந்தோமோ அவனே நம்மைத் தேடி வந்திருக்கிறான். சுக்ரீவனைக் காண நாம் வந்தோம். அவனே இந்தத் தூதனை அனுப்பியிருக்கிறான். இவனுக்கு நல்வரவு சொல்லி நம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவிப்பாய்!" என்றான்.

ராம லக்ஷ்மணர்களும் ஹனுமானும் பரஸ்பரம் தங்கள் வரலாற்றையும் கஷ்ட சுகங்களையும் பேசிக் கொண்டார்கள். இந்த சம்பாஷணையின் பயனாக லக்ஷ்மணனுக்கு ஹனுமானிடம் மிகுந்த பிரியம் உண்டாயிற்று. அதை ராமனிடமும் சொன்னான்.

"மகா ஐசுவரியம் படைத்த என் தமையன், சக்கரவர்த்தியின் மூத்த மகன், ராஜ்யத்தை விட்டு விட்டு வனவாசம் செய்கிறான். உன் அரசனான சுக்ரீவனிடம் தன் காரியம் நிறைவேறுவதற்காக உதவியை நாடி வந்திருக்கிறான். சாபத்தால் ராக்ஷச வடிவம் பெற்ற தைத்யன் ஒருவன் நமக்கு 'சுக்ரீவன் என்கிற வானர ராஜனுடைய சகாயத்தைப் பெற்றீர்களானால் அரக்கன் வஞ்சித்து எடுத்துப் போன ராஜகுமாரியை மறுபடி அடைவீர்கள்' என்று சொன்னான். அவன் சொற்படி இங்கே வந்திருக்கிறோம். உன்னுடைய அரசனுடைய நட்பைத் தேடி வந்திருக்கிறோம்" என்றான் லக்ஷ்மணன்.

வாயு குமாரனான ஹனுமானும் "சுக்ரீவன் வாலியால் பிடிக்கப்பட்டு, ராஜ்யத்தையும் மனைவியையும் இழந்தான். இரண்டையும் மறுபடியும் அடைவான் என்பது இப்போது உறுதியாயிற்று. உங்கள் நட்பை என் அரசன் அடைந்து அவனும் பயனடைவான். உங்களுடைய காரியமும் அவன் உதவியினால் நிறைவேறும்" என்றான்.

பிறகு மிகுந்த சந்தோஷத்தோடு மூவரும் வானர ராஜனான சுக்ரீவன் இருப்பிடம் சென்றார்கள். போகும்

மார்க்கம் வானரர்கள்தான் தாண்டக் கூடுமாகையால், ஹனுமான் சுய ரூப மான வானர உருவமெடுத்து இரு ராஜ குமாரர்களையும் தன் தோளின் மீது ஏற்றிக் கொண்டு சென்றான்.

நல்லவர்களுடைய உள்ளங்கள் வெகு சீக்கிரம் கலபமாக ஒன்று கூடும். வெகு காலம் ஒரே இடத்தில் கூடி வாழ வேண்டியதில்லை. அநேக சந்தர்ப் பங்களில் ஒருவரோடு ஒருவர் கலந்து பழக வேண்டியதில்லை. இருவர் உள் ளங்களிலும் தானாக உதிக்கும் உணர்ச் சியே நட்பைத் திடீர் என்று உண்டாக் கும்.

புணர்ச்சி பழகுதல் வேண்டா —
உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

என்பது திருக்குறள் பாட்டு.

தவிர, இந்த நட்பு பகவானுடைய சங்கற்பம். ஹனுமானுடைய பக்தியை யும் சேவையையும் ராமச்சந்திரன் அடைய வேண்டும் என்று நிச்சயிக்கப் பட்டிருந்தபடியால் ஒருவரை ஒருவர் கண்டவுடனே பூரண நம்பிக்கை தோன்றி விட்டது. தன் தோளின் மேல் இரு ராஜ குமாரர்களையும் தூக்கிச் செல்வது உள்ளத்தில் உண்டாகி விட்ட இணைப்பிலிருந்து தோன்றின மெய்ப் பாடு. நண்பர்களும் காதலர்களும் கட்டி யணைத்துக் கொள்வதுபோல் தாசனும் பக்தனுமான ஹனுமான் தன் சுவாமி யைத் தோளின் மேல் மகிழ்ச்சிப் பரவச மாகத் தூக்கிச் சென்றான்.

ரிச்ய மூகத்திலிருந்து மலயமலை ஏறிப் போய்ச் சேர்ந்ததும் ஹனுமான் சுக்ரீவனிடம் போய் ராம லக்ஷ்மணர்கள் வந்து அரசனைப் பார்க்கக் காத்திருப்ப தாகத் தெரிவித்து,

''இந்த ராமன் சிறந்த அறிவும் மற்ற எல்லா நற்குணங்களும் பெற்ற ராஜ குமாரன். இக்ஷ்வாகு குலத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற மகாராஜா தசரதனுடைய மூத்த குமாரன். தகப்பன் சொல்லை சத்தியமாக்குவதற்காகத் தம்பியுடனும் மனைவியுடனும் அயோத்தியை விட்டு வனம் சென்றான். தசரத மகாராஜன் தன் இளைய மனைவியால் தூண்டப்பட்டு ராமனை ஆரண்ய வாசம் செய்யச் சொன்னான். அப்படி ராமன், தம்பி லக்ஷ்மணனுடன் காட்டிலிருந்தபோது ராஜகுமாரர்கள் பக்கத்தில் இல்லாத சமயம் பார்த்து ராமன் மனைவியை ராவணன் தூக்கிப் போய் விட்டான். அவளைத் தேடிக் கண்டு பிடித்துத் தர ராமன் உம் உதவியை நாடி வந்திருக் கிறான். இந்த ராஜகுமாரர்கள் உம் முடைய நட்பை அடையும் தகுதி வாய்ந்தவர்கள். இவர்கள் சிநேகத்தை அடைந்தால் நீரும் பெரும் பயனடை வீர்'' என்றான்.

சுக்ரீவன் அழகிய மானுட உருவம் தரித்து ராஜகுமாரர்களைக் கண்டு பேசி னான். ராமனை நோக்கிக் கையை நீட்டி ''ராஜகுமாரனே! வானரனான என் சிநே கத்தை நீ விரும்புவாயாகில், இதோ என் கை, அங்கீகரிப்பாயாக! உன் குணங் களையும் மகிமையையும் வாயுபுத்திர னால் அறிந்தேன்!'' என்றான்.

ராமனும் நீட்டிய கையை அங்கீ கரித்து சுக்ரீவனை ஆலிங்கனம் செய்து கொண்டான்.

உடனே ஹனுமான் குச்சிகளைக் கொண்டு வந்து தீ மூட்டினான். அக்கி னியைப் பூஜித்து பிரதக்ஷிணம் செய்து ராமனும் சுக்ரீவனும் நட்புப் பிரதிக்ஞை செய்தார்கள். ''இருவர்களுடைய சுகத் திலும் துக்கத்திலும் இருவரும் சம பங்கு கொள்வோம். நம்முடைய நட்பு என்றும் இருப்பதாக'' என்று பிர மாணம் செய்தார்கள்.

இரண்டு பெரும் மரக்கிளைகளை ஆசனமாகக் கொண்டு ராமனும் சுக்ரீ வனும் ஒரு இடத்திலும் ஹனுமானும் லக்ஷ்மணனும் மற்றொரு இடத்திலும் சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டு உட் கார்ந்தார்கள். சுக்ரீவன் தன் கஷ்டங் களைச் சொல்லிக் கொண்டான். ''வாலி யின் பயத்தால் வனத்தில் இங்குமங்கும் திரிந்து கொண்டும் இந்த மலையில் மறைந்திருந்தும் காலம் கழித்து வரு கிறேன். நீ வாலியைக் கொன்று என் துக்கத்தைத் தீர்த்து ராஜ்யமும் மனை வியும் நான் மறுபடி பெற்று அனுபவிக் கும்படி செய்வாயோ?'' என்றான்.

''நிச்சயமாக இதோ இந்த அம்புக்கு வாலி இரையாவான், சந்தேகமில்லை'' என்றான் ராமன்.

இப்படி சுக்ரீவனும் , ராமனும் பேசிக் கொண்டிருந்த காலத்தில் அசோக வனத்தில் சீதையின் இடது கண்கள் துடித்தன. அரக்கர்களின் அரசன் ராவணனுடைய இடது கண்களும் துடித் தன.

(தொடரும்)

''சேவுகன் என்றால், சிவபெருமான் என்று அர்த்தம்!''



✱ அண்ணாமலை செட்டியார்

தொழில் வெற்றிக்கு உந்து சக்தி எது?

சின்ன வயதில், தென் ஆற்காட்டில் ஒரு கோயிலுக்குத் தரிசனம் செய்யப் போனார் ஓர் இளைஞர். கோயில் வாசலில் உட்கார்ந்திருந்த நூற்றுக் கணக்கான பிச்சைக்காரர்களின் வரிசை இளைஞரின் மனசை வெகுவாகப் பாதித்தது.

வீடு திரும்பியதும் நேரே அம்மாவிடம் போய்ச் சொன்னார் : ''நான் தொழில் முயற்சியில் இறங்கி வெற்றி பெற்றால், லாபத்திலிருந்து தர்மத்துக்கு என்று ஒரு பகுதியை ஒதுக்கி வைத்துச் சேவை செய்வேன்!''

அந்த இளைஞர் -
சேவுகன் அண்ணாமலை செட்டியார்.

இந்த எழுபது வயதுத் தொழிலதிபர் வங்கித் தொழில், கட்டடக் கட்டுமானப் பணி, மலைத் தோட்டப் பயிர் விளைச்சல், முதலீடுகள் என்று விரல்கள் பட்ட அத்தனை துறைகளிலும் வெற்றியைக் கண்டவர்.

''என்னைப் பொறுத்தவரை, வாழ்க்கையில் எனக்கு மூன்று குறிக்கோள்கள் உண்டு : அறியாமை நோயை விரட்டும் வகையில் கல்விப் பணி செய்வது, உடற்பிணி போக்க மருத்துவமனைகள் நிறுவுவது, மனநலமும் ஒழுக்கமும் சிறக்க, ஆன்மீகப் பணி ஆற்றுவது'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார் அண்ணாமலை செட்டியார்.

''இவற்றைச் சாதிக்க முடிந்ததா?''

''முடிந்தது. ஸ்ரீசேவுகன் அண்ணாமலைப் பள்ளி, மற்றும் கல்லூரி - 25 வருடங்களுக்கு மேலாக நடந்து வருபவை. சக தொழிலதிபர்களோடு சேர்ந்து கோட்டையூரில் நவீன மருத்துவமனையும் மருத்துவக் கல்லூரியும் நிறுவ முடிந்தது. எழுவங்கோட்டை கிராமத்தைத் தத்து எடுத்து, அங்கேயே மினி ஹெல்த் சென்டர் அமைத்தேன். திருக்குறள் கருத்தரங்கங்கள் நடத்தி வருகிறோம். இனி இவற்றோடு கீதைப் பேருரைகளும் நடத்தத் திட்டமிட்டிருக்கிறோம்.''

''தொழில் வெற்றிக்கு உங்கள் உந்து சக்தியாக இருந்தது எது?''

''பொருள் ஈட்டுவதில் ஒரு பகுதியை, தர்மத்துக்குக் கொடுப்பது என்று தீர்மானம் செய்துவிட்டால், அதற்கான நிதியைச் சேர்ப்பதற்காக முனைவதே உந்து சக்தியாக இருக்கும். அதற்காகப் பொருள் சேர்ப்பது

என்பதை வெறும் மேலோட்டமான எண்ணமாகக் கொள்ளக் கூடாது. அது உள் மனத்தில் ஆழமாகப் பதிந்து, உள்ளே இருந்து உங்களை ஊக்குவிக்க வேண்டும்.''

''தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலை, தொழில்கள் வளர்ச்சிக்குச் சாதகமாய் இருக்கிறதா?''

''ஒரு நம்பிக்கை அளிக்கக் கூடிய சூழ்நிலை இப்போது உருவாகி வருகிறது. இன்னும் சில சீர்திருத்தங்களைக் கொணர்ந்தால் 10-15 ஆண்டுகளில் இந்தியா பொருளாதார வல்லரசாக வர வாய்ப்பு இருக்கிறது. இதைத் தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கண்மூடித்தனமாக, வெளிநாட்டுத் தொழில் நுட்பத்தைக் காப்பி அடிக்கத் தேவை இல்லை. நம் நாட்டுக்கே உரிய, சுயமான தொழில்நுட்பத் திறனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.''

''கல்வி கற்ற இளைஞர்கள் தொழில் தொடங்கத் தயங்குகிறார்களே?''

''கல்வி கற்ற பிறகு, உத்தியோகம் ஒன்றே குறிக்கோள் என்று இருந்துவிடக் கூடாது. கல்வியைத் தொழிலுக்குப் பயன்படுத்துங்கள் என்பதே இளைஞர்களுக்கு நான் சொல்லும் வார்த்தை. சிறு சிறு தடைகள், தோல்விகள் குறுக்கிடும். அவற்றைக் கண்டு பயந்து ஓடிவிடக் கூடாது. தோல்வியில் பாடம் கற்க முடியும். அவற்றைப் படிகளாக எண்ணி மேலே செல்ல வேண்டும். சிக்கனத்தைக் கடைப்பிடித்து நிதி சேர்த்து, முதலீடு செய்யலாம். வெற்றி நிச்சயம் கிட்டும்!''

ஜர்னலிஸப் பயிற்சியிலும் சேர்ந்து டிப்ளமா வாங்கியவர் இவர்.


''ஒன்று, வியாபாரத் துறையில் முனைப்பாய் இருந்து, அதை அபிவிருத்தி செய். அல்லது எழுதுவதை மட்டும் செய். இரண்டு குதிரைகளில் ஒரே சமயத்தில் சவாரி செய்ய மட்டும் ஆசைப்படாதே!'' என்று தகப்பனார் கூறினார்.

அன்றைக்குத் தொழில் துறையில் மும்முரமாக ஈடுபட்டவர்தான். இப்போது, தமது சொற்பொழிவுகளுக்கு மட்டுமே தமது எழுத்தாற்றலைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்.

சேவுகன் என்பது சிவபெருமானின் பெயர்களில் ஒன்றாம். தன் தகப்பனார் பெயரும் அதுதான் என்கிறார் அண்ணாமலை செட்டியார்.

பேட்டி : சித்தார்த்

புகைப்படம் : பாலாஜி.



பத்துப் பைசா செலவில் நாய்க்கடிக்கு நிவாரணம்!



• சிநேகலதா



• பிரம்மானந்த சுவாமிகள்

"ஆரம்ப நிலையில் புற்று நோய் இருக்குமானால் சித்த மருத்துவத்தில் பூரணமாகக் குணம் அடையச் செய்ய முடியும். ஆனால் இங்கே வருகிறவர்கள், பிற சிகிச்சை முறைகளை முயற்சி செய்து பார்த்துவிட்டுத்தான் கடைசியாக வருகிறார்கள். அப்படியும் முடிந்த அளவு குணப்படுத்துகிறோம்!'' என்கிறார் பிரம்மானந்த சுவாமிகள்.

சென்னை, இந்திய மருத்துவத்துறை மருத்துவமனையில் பணியாற்றியவர் இவர். நாய்க்கடிக்கு, பத்தே பைசா செலவில் மருந்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறாராம். ''சில அரசியல் ரீதியான காரணங்களுக்காக என் பெயரை எடுத்துவிட்டார்கள். அதுபற்றிக் கூட எனக்கு வருத்தமில்லை. அரசே இதைச் செய்து எல்லா மருத்துவ மனைகளிலும் கொடுக்க ஏற்பாடு செய்யட்டும்!'' என்கிறார்.

நான்கு தலைமுறையாகச் சித்த மருத்துவத்தில் சிகிச்சை செய்து வரும் குடும்பத்தைச் சேர்ந்த பிரம்மானந்த சுவாமிகள் நாகர்கோயில்காரர். தற்போது இருப்பது கோவையில். என்றாலும் அவ்வப்போது அண்ணா நகர் பதினெண் சித்தர் மருத்துவமனைக்கு வந்து, அங்கு பணி புரியும் பிற சித்த மருத்துவர்களுக்கு உதவுகிறார், ஆலோசனை அளிக்கிறார். தமது சிகிச்சை முறையின் மூலம், பல நோய்களை - எலும்புப் புற்று நோய் உட்பட - குணப்படுத்திய விவரங்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லுகிறார். நம் முன்னாலேயே, சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளைக் கூப்பிட்டு, விளக்கச் சொல்லுகிறார்.

''பல மருத்துவர்களுக்கு முகாம்கள் நடத்தியிருக்கிறேன். எல்லாரும் புகழ் பெற்ற டாக்டர்கள். மூல வியாதிக்கு வெகு எளிதான சிகிச்சை கொடுக்கிறேன். மூன்றே நாளில் குணமாக்கியிருக்கிறேன். ரத்த அழுத்தம், நீரிழிவு என்று எல்லாவற்றுக்கும் சித்த மருத்துவத்தில் மருந்துகள் இருக்கின்றன. இது இயற்கையான மருத்துவ முறை. நம் நாட்டிலேயே, நம் சித்தர்களே கண்டு பிடித்து வைத்திருக்கும் முறை. இப்போது அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகளில் ஆர்வம் காண்பித்து வருகிறார்கள். காரணம், அல்லோபதி மருந்துகளின் பக்க விளைவுகள். ஸ்பாண்டிலைடிஸ் போன்ற வலிகளுக்கு இங்கேயே வர்மக் கலையில் தேர்ந்த ஆசான் குணப்படுத்திவிடுகிறார்.''

''ராஜீவ் பிரதமராக இருந்தபோது, தர்சன் சங்கர் என்ற அதிகாரி தில்லியிலிருந்து வந்து, சித்த மருத்துவம் பற்றி எடுத்துச் சொல்ல பத்து மருத்துவர்கள் கொண்ட குழுவை அழைத்து வரச் சொன்னார். பிரம்மானந்த சுவாமிகளை அங்கே வரவேற்று மாலை மரியாதை செய்தவர் சாம் பிட்ரோடா!'' என்று குறிப்பிட்டார் மருத்துவ மனையின் நிர்வாக இயக்குநர் சிநேகலதா இளங்கோவன்.

''அது சரி, சித்த மருத்துவத்துக்கு ரொம்ப செலவாகிறதே?''

''ஏராளமான மூலிகைகளைச் சேர்த்து மருந்து தயாரிப்பதால்தான் சிகிச்சைக்குக் கணிசமாகச் செலவாகிறது'' என்கிறார் சிநேகலதா.

– எஸ்.வி.என்.

புகைப்படங்கள் : கோபிநாத்

6 லட்சம் காரணங்கள் இன்றே சேர!



ஸ்ரீராம் விஜயதசமி விழா!

10

நாட்களிலும் பரிசுகள்!

அக்டோபர் 15-24, 1993.

காலங்கள் மாறலாம். பண்பாடுகள் மாறுவதில்லை.

காலங்கள் மாறலாம். ஆனால் ஒரு சில பண்பாடுகள் தலைமுறை தலைமுறையாக மாறுவதில்லை.

உதாரணமாக, ஸ்ரீராம் சிட்ஸில் சேமிப்பது.

ஸ்ரீராம் சிட்ஸ் — 6 லட்சத்துக்கும் கூடுதலான சந்தாதாரர்களுக்கு வாழ்க்கையில் ஒரு பாதுகாப்பைத் தேடித்தந்து உதவி வரும் ஒரு மகத்தான மக்கள் இயக்கம். நீங்களும் உங்கள் வாழ்க்கையில் ஒரு புதுமலர்ச்சியைப் பெற வேண்டாமா? ஸ்ரீராம் இயக்கத்தில் இன்றே உறுப்பினர் ஆகுங்கள்.

அது மட்டுமல்ல, ஒவ்வொரு புதிய சந்தாதாரருக்கும் ஓர் அழகிய பரிசும் உண்டு — எப்போதும் போல.

ரூ.75,000 வரையில் உள்ள சீட்டுகளை எடுப்பவர்களுக்கு, பொதுத்துறை அல்லது தனியார்துறை அல்லது அரசுப் பணி அல்லது அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் மூன்று பேர் உத்தரவாதம் அளித்தால் போதுமானது.

வேலையில் இருக்கும் பெண்மணி ரூ.15,000 வரையில் உள்ள சீட்டுகளை எடுக்கும்போது அவரின் கணவருடைய உத்தரவாதமே போதுமானது.

அறிமுகப்படுத்துவோருக்கு ஸ்ரீராம் அளிப்பது ஆவலைத்தூண்டும் மந்திர எண் — அதில் மறைந்திருக்கும் பரிசு!

நீங்கள் ஒரு புதிய சந்தாதாரரை அறிமுகப்படுத்தினால் போதும். உங்களுக்காக எத்தனையோ பரிசுகள் காத்திருக்கின்றன.

ஒரு புதிய சந்தாதாரரை எந்தவொரு ஸ்ரீராம் கிளையிலும் அறிமுகப்படுத்துங்கள். ஸ்ரீராம் மேலாளர் முன்னிலையில் உங்கள் கூப்பனில் உள்ள வெள்ளிப் பூச்சைத் தேயுங்கள். உங்கள் எண் தெரிய வரும். அந்த எண்ணைக் கிளை மேலாளர் பரிசுப் பட்டியலுடன் ஒப்பிடுவார். அடுத்த சில நொடிகளில் உங்கள் பரிசை நீங்கள் பெற்றுச் செல்லலாம்.


அறிமுகப்படுத்துவோர் பரிசு இப்போதுள்ள சந்தாதாரர்களுக்கு மட்டுமே.

குலுங்கும் வளையோசை!

பெண்மணிகளே! விஜயதசமி விழாவில் பங்குபெறுங்கள். ஒரு புதிய சந்தாதாரரை அறிமுகப்படுத்தி அல்லது ஒரு புதிய சீட்டில் சேர்ந்து வண்ண வண்ண வளையல்களைப் பெற்றுச் செல்லுங்கள்.


சந்தாதாரர் பரிசுகள்	
சீட்டின் மதிப்பு ரூ	சந்தாதாரர் பரிசு
1. 250 x 40 = 10,000	4 கிராம் வெள்ளிக் காசு
2. 500 x 30 = 15,000	ஸ்டீல் கடாய்
3. 625 x 40 = 25,000	எச்.எம். குக் அண்ட் சேர்வ் டிஷ்
4. 500 x 60 = 30,000	பட்டர்ஃப்ளை ஃப்ரை பான் (சி.பி.)
5. 1,000 x 50 = 50,000	காஸி ஷூகோ பான் (சி.பி.)
6. 1,250 x 60 = 75,000	காஸி ப்ளூ பாட் (சி.பி.)
7. 1,500 x 60 = 90,000	மூடியுடன் கூடிய காஸி டட்ச் ஓவன் (சி.பி.)
8. 2,500 x 40 = 1,00,000	
9. 4,000 x 50 = 2,00,000	பட்டர்ஃப்ளை லைட் ஜூனியர் காஸரோல்
10. 5,000 x 60 = 3,00,000	2 கிராம் தங்கக் காசு
11. 10,000 x 50 = 5,00,000	4 கிராம் தங்கக் காசு
12. 20,000 x 50 = 10,00,000	8 கிராம் தங்கக் காசு

* நுழைவுக் கட்டணம் தனி





அறிமுகப்படுத்துவோர் பரிசு





* அரசு அங்கீகாரம் பெறப்பட்டது.

அறிமுகப்படுத்துவோர் பரிசு
செல்லோ பிரியா ஜார் முதல் ஃபிரிட்ஜ் வரை

SHRIRAM GROUP COMPANIES MADRAS

ALL INDIA DEPOSIT MOBILISATION DRIVE IS ON

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி. லிமிடெட்

நிர்வாக அலுவலகம்: "சுப்பிரமணியம் பில்டிங்",
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002.
போன்: 8274451/8275536/8270400/8273932.

ஸ்ரீராம் சிட்ஸ் - மேலும் பலருக்கும் பலவகையிலும் பலன்.

ADWAVE/SCH/4614 TAM A

வட்டமேஜை

பாட்டிமார்களுக்கு ஒரு பாடம்!

◆ வெளிப்படையாகப் பார்த்தால் அ.இ.மு.க. வெற்றி பெற்றுவிட்டது என்ற கருத்தே மேலோங்கி இருக்கையில், தேர்தல் நடந்த முறையும் அரசு சார்பாளர்கள் நடந்து கொண்ட முறையும் ஜனநாயகத்துக்கு எதிரானவையே. இதில் வெற்றி பெற்றால் மட்டும் மக்கள் மனப்பாங்கு மாறிவிட்டதாக அரசு எண்ணிவிடக் கூடாது. தவறைச் செய்துவிட்டு, தப்பிக்க வெற்றியை வெளிக்காட்டும் அ.இ.மு.க. வின் தேர்தல் காலத் தரக்குறைவான செயல்களைச் சரியான முறையில் எடுத்துரைத்த தலையங்கம் 'ராம்போ' தலையங்கமே!

ஏக்காப்பூர், செலோகா.

◆ ''அதர்மத்தின் மூலம் பெற்ற வெற்றி தற்காலிகமானதாகவே இருக்கும்; இறுதியில் தர்மமே நிலையான வெற்றி பெறும் என்ற கருத்தை அருமையாகச் சொன்ன உங்கள் தலையங்கம் அட்சர லட்சம் பெறும்.

அரசரடி, நெல்லை வி. சிவா.

◆ இன்னும் நாலு பொதுத் தேர்தலுக்காவது சேஷன் போன்றவர்கள் தேவை எனும் வரிகள், சமூக நல்லொழுக்கத்தின் மீது உள்ள உமது அக்கறையின் பிரதிபலிப்பு!

மதுரை, கி. மகேஷ்.

◆ ஒரு பக்கத்தில் நிதி அமைச்சர் மன்மோகன் சிங் பொருளாதாரத்தில் புதிய சாதனை படைப்போம் எனக் கூறிவருகிறார். ஆனால், 'அபாய அறிவிப்பு' கட்டுரையில் கூறியது போல் பணத்தை வீண் விரயம் செய்யாமல் உரிய வழியில் செலவழித்தால் மட்டுமே அமைச்சர் கூறியது சாத்தியமாகும்.

மதுரை - 16, ஆர். கார்த்திகேயன்.

◆ பயங்கரவாதத்தாலும், ஆயுதப் புரட்சியாலும் சாதிக்க முடியாத செயலை, மனித நேயத்தால் மட்டுமே செயல் படுத்த முடியும் என்பதற்கு இஸ்ரேல் - பாலஸ்தீன உடன்படிக்கை நல்ல உதாரணம்.

கொடிமங்கலம், ஆர். ஆறுமுகம்.

◆ லாரி ஸ்டிரைக்கால், விளைந்த காய்கறி விற்பனைக்குப் போகாமல் அழுகும் நேரத்தில்... பச்சைப் பசேலென்று காய்கறிகளை நடுவில் போட்டு எங்களைச் சோதிக்கின்றீரே...?!

மேல்பட்டி, எல். மாறன்.

◆ நம்முடைய பிரச்னைகளுக்கு மற்றவர்களைக் குறை சொல்லிப் பிரயோசனமில்லை; மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. தத்தம் பிரச்னைகளைத் தாமே தான் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டு, கடல் நீரைக் கொண்டு இஸ்ரேல் புரிந்த சாதனை பாராட்டுக்குரியது. அதைக் கண்டாவது நம்முடைய மக்கள் பாடம் கற்றுக் கொள்வார்கள் என நம்புகிறேன்.

வேலூர், பா.வை. சுவாமிநாதன்.

◆ இளைஞர்களும் இளைஞிகளும் தான் சாதிக்க முடியுமா? என்னாலும் முடியும் என சாதனை படைத்துவரும் ராதா ராஜகோபாலன், மற்ற பாட்டிமார்களுக்கு ஒரு பாடம் நடத்தி விட்டார்.

சேலம், எம்.கே. சக்திவேல்.

◆ கல்லூரிக்குக் கட் அடித்துவிட்டு தியேட்டர்களில் முடங்கிக் கொள்ளும் இன்றைய இளைஞர்கள் பலபேர் மத்தியில், இந்த அறுபது வயதிலும் அயராது படித்து, பட்டங்கள் வாங்கிவரும் ராதா ராஜகோபாலனை நினைக்கும்போது ஆச்சர்யம் மேலிடுகிறது!

சாத்தூர், எம். செல்லையா

◆ ஹார்ட் அட்டாக் வருவதற்கான காரணங்களை எடுத்துக் கூறி, அதை வராமல் தடுக்கும் முறையையும் கூறி, அறிகுறிகளையும் கட்டிக் காண்பித்து அசத்திவிட்டீர்கள். மிகப் பயனுள்ள கட்டுரை.

திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

◆ ஒரு மாதிரியா, வாழ்க்கையைத் தொட்டுப் பார்க்கிற வயசிலே இருக்கிற என் போன்றோர், 'ஜாக்கிரதையாய் இருங்கள்', என நீங்கள் சொல்லியுள்ள சில விஷயங்களில் - நாம் உடன்பட முடியுமா எனப் பரிதவிப்போடு படித்து முடிக்கும் போது, உடன்பட்டுத்தான் ஆக வேண்டும்; இல்லையென்றால் விளைவுகள் கடுமையாக இருக்கும் என்பதை உணர்த்தியது உங்கள் கட்டுரை.

மதுரை - 14, ரெ. பழநி.

◆ நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது அரசியல்வாதிகள் மட்டுமல்ல, சாதாரண குடிமகனும்தான் என்பதை விளக்கிய புதுவை சந்திரஹரியின் 'வேகத் தடைகள்' சிறுகதை மிக அருமை.

காட்பாடி, அ.சோ. விஸ்வநாதன்.

◆ ராஜதுரை விமர்சனத்தில் தேவாவைப் பற்றியும் பாடல்களைப் பற்றியும் ஒன்றிரண்டு வரிகள் கூறியிருந்தால் என்ன குறைந்தா போய் விடுவீர்?

அரவக்குறிச்சிப்பட்டி, எம். அசோக்ராஜா.

சுற்றுச்சூழல் சிறுகதைகள்

ஒரு போட்டி

சுற்றுச்சூழல் - இன்று உலகளாவியப் பிரச்சினை - பலரும் உணர்ந்து விவாதித்துக் கொண்டிருக்கிற பிரச்சினை - தவிர்க்க இயலாதபடி பலரும் இன்றைக்கு சூழல் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறோம். இந்த யதார்த்தம் எழுத்தாளர்களையும் பாதித்திருக்கலாம்.

பகவதி சுற்றுச்சூழல் வளர்ச்சி நிறுவனம் சார்பில் சுற்றுச்சூழலின் பின்னணியில் அதனை மையமாகக் கொண்ட சிறுகதைகளுக்கான போட்டியை நடத்துகிறோம். சிறுகதைகள் வந்து சேருவதற்கான கடைசி நாள் : நவம்பர் 30, 1993.

சுற்றுச்சூழலின் பாதிப்பை அழுத்தமாகப் பதிவு பண்ணியிருக்கிற சிறுகதைகளுக்கு சிறப்பான பரிசுகள் உண்டு. அத்துடன் தேர்வு செய்யப்பட்ட சிறுகதைகள் தொகுக்கப்பட்டு தனி நூலாக எங்களது நிறுவன வெளியீடாகவும் வெளிவரும். எழுத்தாளர்களின் முழுமையான ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

தொடர்பு முகவரி :

பகவதி சுற்றுச்சூழல் வளர்ச்சி நிறுவனம்

அமைதி அறக்கட்டளை,

திருச்சி சாலை, திண்டுக்கல் - 624 009

தொலைபேசி : 0451-5021



தேங்காய் சைஸில் கொய்யா!

●● ஒரு சதுர கி.மீ. காடு அதனடியில் இரண்டு லட்சம் லிட்டர் தண்ணீரைத் தக்க வைக்கும். ஓர் ஏக்கரில் உள்ள பனைமரங்கள் ஓர் ஆண்டில் ஓர் ஏக்கர் கரும்பை விட 2 அல்லது 3 மடங்கு வரை அதிகச் சர்க்கரையைத் தந்து விடும்.

●● கர்ப்பம் உண்டாவதைத் தடுக்க வேப்ப எண்ணெயை உபயோகிக்கிறார்கள். தட்டை, பாசிப்பயறு, உளுந்து, துவரை போன்ற விதைகளை வேப்ப எண்ணெய் போட்டுப் புரட்டி வைத்ததில் ஓராண்டுக் காலம் முளைக்கும் சக்தியை அவை இழந்து விடவில்லை, அத்துடன் புரூட்சிட், பீட்லெஸ் என்ற விதைப் பூச்சியும் அண்டவில்லை.

●● தேங்காய் நார் தயாரிக்கும் போது உதிரும் தூசி சோற்றுத் தூள் எனப்படும். இதில் குறைந்த அளவு உரச் சத்து இருக்கிறது. இது எவ்வகை நிலமானாலும் அதனுடைய மேற்பரப்பைப் பேணுவதில் உதவுகிறது. தண்ணீரைத் தனது எடையைப் போல் எட்டு மடங்கு ஈர்த்துச் சிறுகச் சிறுக வெளியிடுவதிலும் சிறந்தது.

●● கருவேல மர முள் வெண்மையாக, நீளமாக, கூராக இருக்கும். சென்ற உலக மகாயுத்தம் நடந்தபோது அலுவலகங்களில் குண்டூசிக்குப் பதிலாக இந்த முள்ளைப் பயன்படுத்தினர்.

●● அலகாபாத் கொய்யாப் பழம், தேங்காய் அளவுக்குப் பருத்து நல்ல சதைப்பற்றாய் இருக்கும். சீனக் கொய்யா என்பது கொட்டைப்பாக்கு அளவே இருக்கும்; சுவை அதிகம். இது மேற்கு வங்கத்தில் அதிகம் இருக்கிறது.

●● ஜவ்வரிசிப் பனை அதனுடைய 15 வது வயதில் ஒரு தடவைதான் பூக்கும். ஆனால் இதைப் பூக்கும் முன் 14 ஆவது வயதிலேயே வெட்டி, இதன் பட்டைகளை உரித்து எடுத்துவிட்டு மாவாக்கி, அழுத்தம் கொடுத்து வெப்பம் தந்து ஜவ்வரிசியாக ஆக்கி விடுகிறார்கள். இதைப் பூக்க விட்டு விட்டால் பூக்கள் 700 பவுண்டு ஜவ்வரிசிமாவை உட்கொண்டு விடும். ஆகையால் பூக்க விடுவதில்லை.

●● நமது பாரதத்தில் வீணடிக்கப்பட்ட - அதாவது பயன்படுத்தப்படாத நிலம் 329 மில்லியன் ஹெக்டேர். இதில் முப்பது மில்லியன் ஹெக்டேரில் எந்தவித மரமும் இல்லை.

●● மரங்களின் மகிமை அறிந்தவர் மத்திய அரசின் உணவு அமைச்சராக விளங்கிய, காலம்சென்ற கே.எம். முன்ஷி. 'வன மகோத்சவம்' என்று ஆண்டு தோறும் விழா எடுத்து, மரங்கள் வளர்க்க வேண்டும் என்றார். ஆனால் அன்று இது பத்திரிகைகளுக்கு வேடிக்கைப் பொருளானது. எதிர்க் கட்சிகள் ஏளனம் செய்தனர்.

●● பரோடாவில் இந்திய பெட்ரோ கெமிகல் கார்ப்பரேஷன் ஒரு லட்சம் மரங்களுக்கு மேல் வாழும் ''மரங்கள் காட்சியகம்'' ஒன்றை உருவாக்கியிருக்கிறது. இதில் 32 ஹெக்டேரில், அழிந்து வரும் 70 மரவகைகள் வளர்க்கப்பட்டிருக்கின்றன.

நம் நாட்டில் வீணடிக்கப்பட்ட நிலம் 329 மில்லியன் ஹெக்டேர். இதில் 30 மில்லியன் ஹெக்டேரில் ஒரு மரம் கூட இல்லை!

(மக்கள் வாழ்வில் மரங்கள் - கங்கை புத்தக நிலையம், சென்னை - 17. விலை ரூ. 85.00. - ஆசிரியர் வி.வி.வி. ஆனந்தம்.)

- பாலன். பூங்குழலி.

மடிமீது தலை வைத்து

12

"யார் நீங்க. கஸ்டமருக்கெல்லாம் இவ்வளவு தூரம் வர பர்மிஷன் கெடையாதே" என்று கஸ்தூரிரங்கன் சொன்னதும், அவளுக்குத் திகைப்பாய் இருந்தது. பேசுவது ரங்காதானா என்று ஒருகணம் நம்ப முடியாமல் அவனைப் பார்த்தாள். உடனே புரிந்து விட்டது. கஸ்தூரிரங்கனின் கோபம் பொய்க் கோபம். முன்தினம் மாலை அவள் வருவதாகச் சொல்லி விட்டு, வராமல் ஏமாற்றியதால் அவனுக்குள் ஏறியிருக்கும் சூடு.

"கோவமா?" என்றாள்.

அவன் பதில் சொல்லவில்லை.

மாறாக விசாலிப் பாட்டியைப் பார்த்தான். "காப்பி எப்படி வந்திருக்கு?" என்று கேட்டான்.

விசாலிப் பாட்டியின் தலையில், கவரின் மேல்பக்க வென்டிலேட்டர் மூலம் உட்புகுந்த சூரியக் கதிர்கள் படர்ந்து இருந்தன. நரைத்த தலையில் நெருப்பு பற்றியிருந்தது. அந்த வெளிச்சத்தில் சின்னச் சின்ன தூசிகள் புரோட்டான்கள் போல இப்படியும் அப்படியுமாய் அல்லாடிக்கொண்டிருந்தன. சமையல் அறையின் ஒரு ஓரத்தில் இட்லி குக்கர். வடை வாணலி. இரண்டிலும் இருந்தும் ஆவி தப்பித்து மேலேறியது.

விசாலிப் பாட்டிக்கு அது ஒரு சிருங்கார நாடகமாய்த் தோன்றியது. சுசீதாவிற்கு இவன் மேல் பிரியம். பொய்க் கோபம் காட்டிப் பாய்ந்த போதிலும், அந்தப் பெண்ணின் மனது தெளிந்த நீருக்கடியே கிடக்கும் கூழாங்கல்லாய் என்றைக்கோ தெரிந்து விட்டது. இந்த ரங்கா பயலுக்கும் அவள் மீது கொள்ளை ஆசைதான். அந்தக் குட்டி வந்தாலே இவன் முகத்தில் தனியாய் ஒரு பல்பு எரிகிறது.

இப்போது என்னடாவென்றால் வீம்பு நாடகம் நடத்துகிறான். 'கோபமா' என்று கேட்கக் கேட்க, அவளைக் கவனியாதவன் போல் காப்பி பற்றி விசாரிக்கிறான். இட்லி குக்கர் ஆவி மூச்சு விடுவதையும், வடை எண்ணெயில் காரல் போக்கப் போடப்பட்ட புளியால் எண்ணெய் பொங்குவதையும் பார்ப்பது ரொம்ப, ரொம்ப முக்கியமான வேலையாய்த் தெரிகிறது அவனுக்கு.

கிழவிக்கு அனுபவம் அதிகம். பார்வையில் கூர்மையும், மற்றவர் மனத்தைப் படிக்கும் வித்தையும் ஏராளம். ஒரு முடிவுக்குக் கொண்டு வரத் தீர்மானித்தாள்.

"காப்பி நல்லா இருக்காம்மா?"

"ரொம்ப"

"ரங்கா கேக்கறான் இல்ல? சொல்லேன்!"

"நான் உங்ககிட்ட கேட்டேன்"

"ஒனக்கு ஏன் ரங்கா இவ்வளவு கோபம் வருது? நேத்து சாயங்காலமெல்லாம் குட்டி போட்ட பூனை மாதிரி அலைஞ்சிக்கிட்டிருந்தியே. பசங்க மேலல்லாம் எரிஞ்சி, எரிஞ்சி விழுந்துக்கிட்டிருந்தியே. போன் அடிச்சப்பல்லாம் பாய்ஞ்சி, பாய்ஞ்சி எடுத்துக்கிட்டிருந்தியே. நம்ப காவேரி, 'கீதா'ன்னு ஏதோ ஒரு பேரைச் சொன்னதை சுசீதான்னு கேட்டுட்டு ஓடி வந்து 'எங்க, எங்க'ன்னு பத்து நாள் பட்டினிக்காரன் மாதிரி கேட்டியே? அவளே வந்திருக்கா. காலைல காப்பி கலந்த ஒடனேயே எதிர்ல வந்தா. இனிமே இவ சொல்றதுதான் சபரில எடுபடும்னு தோணிச்சி. அதனால அவகிட்ட அபிப்ராயம் கேட்டேன். அம்மா சுசீதா, தப்புத்தாம்மா. அவனுக்குப் புடிக்கும்னு நெனைச்சி நான் ஒன்னைக் கேட்டுட்டேன். தப்பு. நீ போய்டு! ஒன்னைப் பாத்தாலும் அவனுக்குக் கோவம் வரும்னு இப்பத்தான் தெரிஞ்சது. போயிடேன்" விசாலிப் பாட்டி, சுசீதாவிற்கு மட்டும் தெரிகிற மாதிரி கண் சிமிட்டிக் காட்டினாள்.

சுசீதா, காப்பி டம்ளரை விசாலிப் பாட்டியின் கையில் திணித்து விட்டு விர்ரென்று வெளியேறினாள். அந்த அறையை விட்டு வெளியேறிய உடனேயே வாசலில் காத்திருந்த துர்வாசன் அவள் கையைப் பற்றினான். உதட்டின் மேல் விரலை வைத்து எச்சரிக்கை செய்து, அவளை இடது பக்கமாக அழைத்துச் சென்று, திரும்பி இன்னோர் அறைக்குக் கூட்டிச் சென்றான். ஹோட்டல் பையன்கள் படுக்கும் அறை. ரயிலில் பர்த் போல் ஒன்றன் மேல் ஒன்றாய் படுக்கைகள். சுத்தமான படுக்கை விரிப்புகள். ஊதுபத்தி மணம்.

"வேடிக்கை பாருங்கக்கா. பாட்டி என்கிட்டே, உங்களைக் கூட்டிட்டுப் போகச் சொல்லி ஜாடை காட்டிச்சி"

சுசீதா ஆவல் முகத்துடன் ஜன்னல்

சுபா

வழியாய் வெளியே தெரிந்த சபரியைப் பார்த்தாள்.

கஸ்தூரிரங்கன் திகைத்துப் போனான். விசாலிப்பாட்டி திடீரென்று இப்படி எண்ணெயிலிட்ட அப்பளம் போல, விரிந்து பொரிவாள் என்று எதிர்பார்க்கவில்லை.

கவிதா நிஜமாகவே போய் விட்டாளா என்ன? முதல் நாள் மாலை அவள் வரவுக்காக அவன் ஏங்கியதை அவ்வளவு தெளிவாகப் பாட்டி சொல்லியும் கூட அவள் போய் விட்டாளா? அவளைக் கோபிக்க அவனுக்கு உரிமை இல்லையா? அதற்காக எப்படிக் கோபிப்பது என்ற விவஸ்தை இல்லாமல் 'கஸ்டமரை எல்லாம் உள்ள விடறதில்ல' என்கிற அர்த்தத்தில் சொல்லியிருக்கக் கூடாது. அது கொஞ்சம் ஓவர்.

கஸ்தூரிரங்கன் தேவைக்கு அதிகமாகவே உணர்ச்சிவசப்பட்டான். காற்றில் அவளைத் தேடினான். அவனால் விசாலிப் பாட்டியைக் கோபிக்க முடியவில்லை. சரசரவென்று ஓட்டமும் நடையுமாய் வெளியே வந்து பார்த்தான். ஏதாவது நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறாளா? இல்லை. வெளியில் மணல் வெளிப்பக்கம் போய்ப் பார்த்தான். சாலையில் எந்தப் பக்கத்திலும் அவள் இல்லை.

அவள் என்ன, அலாவுதீன் பூதமா? 'போ' என்றவுடன் இப்படிச் சுவடே தெரியாமல் மறைந்து போவதற்கு?

அவனுக்கிருந்த பரபரப்பில், அவசரத்தில், கவிதா எப்போதும் ஓட்டி வரும் அவளது வண்டி அங்கே ஓர் ஓரத்தில்தான் விடப்பட்டிருந்தது தெரியவே இல்லை.

கஸ்தூரிரங்கனின் பரபரப்பு, இப்படியும் அப்படியுமாய் நிகழ்ந்த அவனுடைய கூண்டுப் புலி அலைச்சல், எல்லாமே ஜன்னல் வழியாக கவிதாவிற்குத் தெரிந்தது.

அவளுக்குப் பரிதாபமாக இருந்தது.

''பாவண்டா'' என்றாள் அவள்.

''அப்ப நீ என்னவோ பண்ணிக்கக்கா'' என்று சொல்லி விட்டு தூர்வாசன் புறப்பட்டான்.





''வாசல்ல வாங்கின கத்தரிக்காய் ஒன்றில் புழு இருக்குதுன்னு கறிகாய்க் காரன் பேரில் கன்ஸ்யூமர் கோர்ட்டில் கேஸ் போட முடியாதும்மா!''

- தாம்பரம் கண்ணன்

''இரு... இரு'' என்று பதற்றமாக அவனைத் தடுத்தாள் கவிதா. ''ரங்காவை இந்த ரூமுக்கு வரவழைக்கணும்னா என்ன பண்ணணும்?'' என்று கேட்டாள்.

''ரொம்ப ஈஸிக்கா. இந்த ரூம்ல ஒரு பையன் ஜுரத்தில மொனகிக்கிட்டிருக்கான்னு ரங்காகிட்டப் போய்ச் சொன்னாலே போதும். ரங்கா இங்க வந்துடுவாரு''

''போய்ச் சொல்லு அப்படியே''

''நானா?'' என்று கேட்டு விட்டு 'துர்வாசன்' வெளியேறினான்.

கவிதா அடக்க முடியாத புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள். துர்வாசன் போனது தெரிந்தது. ப்ரேக் அடித்த மாதிரி ரங்கனின் அருகே நின்றது. அழைத்தது. ரங்கன் குனிந்து அவன் சொன்னதைக் கேட்டது. அப்புறம் முகத்தில் கவலையுடன் கவிதா இருந்த அறையை நோக்கியது எல்லாமே தெரிந்தது. கவிதா அவன் பார்வையிலிருந்து விலகி நின்றாள்.

அவன் அந்த அறை நோக்கி வந்தான். அவன் நெருங்க, நெருங்க அவளுக்குள் படபடப்பு அதிகமானது. வைரம் பதித்த தங்க ஊசியால் இதயத்தில் குத்துப்படுகிற மாதிரி இருந்தது. கஸ்தூரிரங்கனை அலைக்கழிப்பது, அவளையே அவள் அலைக்கழிப்பது போல.

கஸ்தூரிரங்கன் அறையில் நுழைந்து சுற்றுமுற்றும் பார்த்து, எந்தப் பையனும் ஜுரத்தில் முனகிக் கொண்டிராதது கண்டு திகைத்தான். மெல்லத் திரும்பினான்.

கதவின் பின்னால் கவிதா. மழையில் நனைந்த கோழிக் குஞ்சாக. அவள் முகத்தில் லேசான பயம். அவன் உடலில் லேசான பதற்றம். அறைக்குள் கஸ்தூரிரங்கன் நுழையும் வரை அவளிடம் இருந்த புன்னகை காணாமல் போயிருந்தது.

அவன் அவளை அங்கீகரிப்பானோ, மாட்டானோ என்ற ஏக்கம் அவளது விரிந்த கண்களில் தெள்ளத் தெளிவாக.

அவன், அவளையே உற்றுப் பார்த்தான். கவிதாவும் கண்களை இமைக்காமல் பார்த்தாள். மெல்ல மெல்ல அவன் உதடுகள் தங்களது இறுக்கத்தை விலக்கிக் கொண்டன. புன்னகைத்தன. அவள் ஒரு பெருமூச்சுடன் புன்னகை செய்தாள்.

''கோவமா?'' என்றாள் கவிதா மெல்லிய குரலில்.

''ஆமா''

''ஏன்?''

''நேத்து நீ என்னை ஏமாத்திட்டே கவிதா''

''ஸாரி''

''நான் உன்னை லவ் பண்றேனா, இல்லியான்னு சொல்றதைக் கேக்கறதுக்கு நீ நிச்சயம் வருவேன்னு நெனைச்சேன்.''

''என் பயந்தான் என்னை வர விடாம பண்ணிடிச்சி ரங்கா''

''என்ன பயம்?''

''ஒருவேளை நீங்க என்னை லவ் பண்ணலேன்னு சொல்லிட்டா? என்னால அதைத் தாங்க முடியாது ரங்கா. எம் மனசு ஷுகர் கிளாஸ் மாதிரி தூள் தூளா ஆயிடும்''

''என்ன கவிதா இது? இப்ப மட்டும் அந்தப் பயம் இல்லியா?''

''ம்ஹூஹூம்''

''எப்படி?''

''எப்படியோ''

''சொல்லேன். சொன்னாத்தான்''

''திருப்பியும் கோச்சுக்கக் கூடாது''

''இல்லே''

''ப்ராமிஸா?''

''ப்ராமிஸ்''

''நான் நேத்து சாயங்காலம் முழுக்க சபரிக்குப் பக்கத்திலதான் இருந்தேன்''

''என்னது?''

''கோச்சுக்கக் கூடாதுன்னு இப்பத்தான் சொன்னேன்''

''ம்''

''உங்களைப் பாத்துக்கிட்டே இருந்தேன். எங்கிட்ட பைனாகுலர்ஸ் இருக்கே''

''ஏன் அப்படிச் செஞ்சே?''

''நீங்க என்னை எதிர்பாக்கறீங்களா இல்லியான்னு தெரிஞ்சிக்கத்தான்''

''என்ன தெரிஞ்சிக்கிட்டே?''

''விசாலிப் பாட்டி சொன்னதெல்லாம் நெஜம்னு''

''நான் வேற யாரையாவது எதிர்பார்த்துக்கிட்டிருந்திருக்கலாம் இல்லெ?''

''வேற யாரையாவதுன்னா?''

''கவிதாவை விட இன்னும் அழகான பொண்ணை''

''ம்ஹூஹூம். சான்ஸே இல்ல.''

''ஆமா ரொம்பத் தெரியும்''

''ஆமா தெரியும். நீங்க உங்க முடிவைச் சொல்றதுக்குன்னு ஒரு நாள் டயம் கேட்டப்ப எனக்கு 'பக்'குனு ஆயிடிச்சி தெரி

அடுத்த இதழில்...

●● தீபாவளிப் புடைவை : என்ன புதுமை?
- கவர் ஸ்டோரி

●● சிறுநீரகத்தில் கல்லா?
- மருத்துவக் கட்டுரை

யுமா. என்னடா இது. ஒரு பொண்ணு வந்து 'ஐ லவ் யூ' சொன்னா படியாத ஆம்பிளைங்களே சரித்திரத்தில இல்லையே. இந்த ஆள் மட்டும் இப்படி இழுத்தடிக்கிறாரே. அப்படி இழுத்தடிக்கிறார்னா, இந்த ஆளுக்கு ஏற்கெனவே வேற ஏதாவது காதல், கன்றாவின்னு இருக்குமோன்னு டவுட் வந்திரிச்சி. அதனால நேத்து காலைலேர்ந்து உங்க பின்னாடியே நான் வால் மாதிரி வந்துக்கிட்டேயிருந்தேன்.''

''ஏய்...''

''கோச்சிக்கக் கூடாதுன்னு கண்டிஷன். உங்க முடிவு லேட்டாகுதுன்னா அதுக்குக் காரணம் இன்னொரு பொண்ணாத்தான் இருக்கணும்னு நான் ஒரு சராசரிப் பொண்ணா முடிவெடுத்துட்டேன். அப்படியாயிருக்கற பட்சத்தில, அவளை நீங்க கண்டிப்பாப் பாப்பீங்க... பேசுவீங்கன்னு முட்டாள்தனமா நெனைச்சி... ஸாரி ரங்கா''

''என்ன கவிதா இது?''

''கேவலந்தான். இருந்தாலும் நான் ஒரு பொண்ணுதானே ரங்கா. புத்திசாலித்தனமா செய்யறதா நெனைச்சி முட்டாளாயிட்டேன். நீங்க டிபார்ட்மென்ட்டல் ஸ்டோர்ஸுக்குப் போனீங்க. அங்கயும் யாரோ ஒரு வயசானவரைத்தான் பாத்தீங்க. லேடா, ஹோட்டல் சம்பந்தமாகத்தான்னு தீர்மானம் ஆச்சி. அப்புறம் ஹோட்டலுக்கு வேண்டிய தட்டெல்லாம் வாங்கினீங்க. எனக்கு ஒரு பக்கம் ஒரே சந்தோஷம். ஒரு பக்கம் கவலை. என்னடா, இந்த சாமியார் 'ஐ லவ் யூ' சொல்றதுக்கு நாள் பூரா யோசிச்சிக்கிட்டு அல்லாடறாரேன்னு. அதனாலேயே பயம் வந்திரிச்சி. சாயங்காலம் நான் உங்களைப் பாக்க வர்றப்ப பட்டுன்னு. 'நீ உன் வேலையைப் பாத்துக்கிட்டுப் போ, இந்தக் காதலெல்லாம் நமக்கு ஒத்து வராது'ன்னு சொல்லிடப் போறீங்களோன்னு. அதனாலத்தான் நீங்க என்னை எதிர்பாக்கறீங்களா... இல்லையான்னு தெரிஞ்சிக்கத்தான் சபரிகிட்டக்கயே டேரா போட்டேன்...''

கஸ்தூரி ரங்கனுக்கு ஒரு பக்கம் ஆறுதலாயிருந்தது. ஒரு பக்கம் கவலையாய் இருந்தது. நேற்று முழுக்க இவள் தொடர்ந்து வந்திருக்கிறாள். அது தெரியாமல் நான் பாட்டுக்கு யாருக்கும் தெரியாமல் போகக் கூடிய இடத்திற்கெல்லாம் மஞ்சள் வெளிச்சத்தில் போயிருக்கிறேன். இனிமேல் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். இனிமேல் வெகு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

உலக வாழ்க்கையில் இன்பமும் இருக்கிறது. துன்பமும் இருக்கிறது. நாம் துன்பமே வேண்டாம், இன்பம் மட்டுமே வேண்டும் என்கிறோம். ஆனால் துன்பத்தின் தொடர்பு இல்லாத இன்பமும் கிடையாது. இன்பத்தின் தொடர்பு இல்லாத துன்பமும் கிடையாது. நமக்குத் துன்பமே வேண்டாம் என்றால் இன்பத்தையும் வேண்டாம் என்று நாம் தள்ளி விட வேண்டும்.

''இன்னும் கோவமா ரங்கா?''

''ம்?''

''கோவமான்னு கேட்டேன்'''

''சேச்சே''

''பின்ன, ஏன் உம்முனு இருக்கீங்களாம்?''

''இல்லியே''

''ஏன் உங்க முடிவைச் சொல்லலியாம்?''

''என் முடிவு என்னன்னு தெரியலையா கவிதா?''

''இல்ல. உங்க வாயால ஒரு தரம் சொல்லுங்க''

கஸ்தூரிரங்கன் ஒருகணம் தடுமாறினான். முந்தைய நாள் சந்திப்பை நினைத்துக் கொண்டான். விடிகாலைப் போராட்டத்தை நினைத்துக் கொண்டான்.

''ம். சொல்லுங்க''

''ஐ லவ் யூ கவிதா''

கவிதா அவனை நெருங்கி வந்து, அவன் கண்களில் பார்த்தாள்.

''இன்னொரு தரம்''

''ஐ லவ் யூ கவிதா''

கவிதா ஒரு பெருமூச்சுடன் அவன் மார்பில் சாய்ந்தாள்.

(தொடரும்)



கருப்பு வெள்ளை

கதைபலம் மிக்க தமிழ் சினிமா பார்த்து ரொம்ப நாளாகி விட்டது. 'கனமாக' எதையாவது எதிர்பார்க்கிற வம்சத் தவருக்கு வாழையிலை நீர் தெளித்து விருந்து சமாசாரம். முன்னதாக மூன்று பேருக்கு முதல் மரியாதை செலுத்தி விடலாம். அனந்து; தேவா; யு.கே. செந்தில்குமார். (வசனம், இசை, ஒளிப் பதிவு.) கொஞ்சம் டைப்ரைட்டர்தன மான வசனமெனினும் வீரியம் ஜாஸ்தி. வாழைப் பழத்தில் ஊசியல்ல; கடப்பாறை நுழைக்கும் சாமர்த்தியம் அனந்துவுக்கே உரியது. ஆங்காங்கே ராஜா சாயல் இருப் பினும், தேவா வளர்ச்சி கண்கூடாகத் தெரிகிறது. செவியுடன் மனமும் நிறை கிறது. அப்புறம் அந்தக் கேமரா. ஒரு இடம் கூட உறுத்தாமலிருப்பது சமீப கால ஆச்சர்யம்.

போகட்டும். இனி கதை. கிரிமினல் லாயரின் கிரிமினல் மூளையை வெறுக்கும் மகன். அந்த வக்கீலால் பாதிக்கப்பட்ட குடும்பத்திலிருந்து சுகன்யா. (இன்டர்வல் வரை ஒரு சஸ்பென்ஸ் கட்டிக் காக்கப்படு கிறது; வார்த்தைகளால் அதை உடைத்து விடுவது யோக்கியமல்ல.)

வில்லத்தனமில்லாது, நெஞ்சமெல்லாம் நிறையும் திலகன் - வார்ப்பில் ஒரு வனப்பு. அவர் ஏன் வீட்டை விட்டு அப்படி ஒரு ஆசிரமம் அமைத்து, பக்த ராமதாசர் மாதிரி பாடிக் கொண்டிருக்க வேண்டும்? ஒரு அபாரமான ரகசியத்தைக் கட்டிக் காத்து, எதற்காக சுகன்யாவை - அவரது முழுக் கோபங்களுடனேயே ஏற்று வளர்க்க வேண்டும்? ஜெயிலில் அடைபட்ட போதும் காந்தியம் பேசி அடிபடும் அந்தக் கேரக்டரின் அழுத்தம் - எழுதிக் கொள்ளுங்கள், இந்த வருஷத்திய அவார்டு நாயகர்.

நாசரின் மிடுக்கு, 'கௌரவம்' சிவாஜியி லிருந்து கடைந்தெடுக்கப்பட்டது. அவரது மூக்கும் கண்ணும் தனித்தனியே நடிப் பதைக் குறிப்பிட வேண்டும். அந்த அலட் சியம், அந்த ரௌத்திரம், அந்த அநாயாசம் - இறுதியில் ஏற்படும் அந்த இயல்பான மாறுதல்... டைரக்டரை நிற்க வைத்து சுற்றிப் போடலாம்.

வெறும் அப்பா - பிள்ளை மோதல், சென்டிமென்ட், சுபம் என்று மொண் ணையாக முடிந்திருக்க வேண்டியதை, மிகக் குறைந்த சினிமாத்தனங்களுடன் கவிதையாக்குகிற முயற்சியில் அபார வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

மனோபாலாவுக்கு மகத்தான மறுவாழ்வு.

- ஆர்.பி.ஆர்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

